



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதி வரைந்த தடங்கள்

இ. சம்பந்தன்



நாவேந்தன் பதிப்பகம்
"மயூரன் இல்லம்"
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி வரைந்த தடங்கள்
- இ. சம்பந்தன் கவிதைகள்

© உரிமை : நூலாசிரியருக்கு

முதற்பதிப்பு : யூன் 2015

வெளியீடு : நாவேந்தன் பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

வெளியீட்டு எண் : 04

KURUTHI VARAINTHA THADANKAL
A Collection of poems
R. Sampanthan

© : R. Sampanthan

First Edition : June 2015

Published by **Naventhan Pathipagam,**
"Mayooran Illam",
Ramalingam Road
Thirunelvely East, Jaffna.

Printed by **Sri Maruthi Printers,**
555, Navalar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இலக்கியம் படைத்தல் என்பது எல்லோருக்கும் கைவரக் கூடிய ஒன்றல்ல. அது வேள்வி செய்தல் போன்றது. தணியாத இலக்கியத் தாகமும், அது ஏற்படுத்தும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் தவிர்க்க முடியாதபடி ஏதோவொரு இலக்கியப் படைப்பாகப் பிரசவமாகிறது. மனதின் வழி நிற்கும் உணர்ச்சியும், அறிவின் வழி நடக்கும் உணர்வும் சங்கமமாகும் கட்டுக்கோப்பில் காலத்தை வென்று நிற்கும் நல்லதோர் இலக்கியம் உருவாகிறது. இலக்கிய வடிவங்களின் தாயாக விளங்குவது கவிதை.

மனித குலத்தின் மூச்சுக்காற்று மனதைத் தாலாட்டிய வேளைகளிலெல்லாம் வாய்மொழி இலக்கியமாகக் கவிதை பிறந்தது. காலப்போக்கில் நாட்டுப்புறக் கவிதைகளின் வளர்ச்சியானது செவ்வியற் பண்புடைய இலக்கணஞ்சார் மரபுக் கவிதைகளுக்குக் கட்டியங்கூறியது. காலத்தின் நீட்சியின் கட்டுடைப்புகளில் மரபுக் கவிதைகளுக்கு மாற்றாக நவீன கவிதைகளும் தோற்றம் பெறலாயின.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கவிதைச் செல்வங்களுக்குச் சொந்தமான தமிழ் மொழியினுள் இத்தகைய மாற்றங்கள் இடம்பெறலாயின. சமகாலத்தில் அச்சு வாகன வசதிகள் விருத்திகண்டு தகவற்றொழில் நுட்பம் அசுர சாதனைகளை நிகழ்த்துகையில், மரபை மீறிய புதுக்கவிதை களின் வரவு பெருமடங்காகத் தமிழ்மொழியில் அதிகரித்து வருவதைப் பார்க்கக் கூடியதாயுள்ளது. அவற்றுள் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கத்தக்க கவிதைகளின் எண்ணிக்கைகள் குறைவாகவே விளங்குகின்றன. இருப்பினும் "உள்ளத்தில் உண்மை ஒளியுண்டா யின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்னும் பாரதி வாக்கிற் கிணங்க வாக்காலும், எழுத்தாலும் வாலாயமாக மிளிரும் நல்ல தமிழ்க் கவிதைகளும் வராமலில்லை. அவற்றைப் படைத் தளிக்கும் கவிஞர்களும் இல்லாமலில்லை. அத்தகைய கவிஞர் களில் ஒருவர் தான் திரு. இ. சம்பந்தன் அவர்கள்.

சம்பந்தன் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுதி யாக "குருதி வரைந்த தடங்கள்" வெளிவருவது மிகவும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது. ஏனைய இலக்கியங்கள் வேலைக்காரர்க ளுடன் உரையாடுவது போலிருக்கையில், கவிதையிலக்கியமா னது இளவரசியுடன் இனிமையாகப் பேசுவது போன்றது என மேனாட்டு அறிஞரொருவர் குறிப்பிட்டுள்ளார். சுருக்கமாக, கட்டி றுக்கமாக, சுவைபடக் கூறப்படும் கவிதையானது நெஞ்சை நெகிழ வைக்கும் கருப்பொருளைக் கலைநயத்துடன் காட்டுவது. இத னால்தான் கவிதையில் கதையும், விதையும், கவியும் கலந்தி ருப்பதாகத் தமிழ்ச் சுவைஞர்கள் கூறுவார்கள்.

சம்பந்தனின் புதிய கவிதைத் தொகுதியில் சிறியதும், பெரியதுமாக 232 கவிதைகள் உள்ளன. அவைகளில் ஒருசில தவிர்ந்த ஏனையவை நவீன கவிதைகளாகும். சுமார் 65 கவிதைகள் அடிகளின் அளவினால் ஓரளவுக்கு நீண்டவை. 131 கவிதைகள் 3 - 6 அடி வரையறைக்குள் அடங்குவன. 36 கவிதைகள் பத்து அடிகளுக்குள் அமைந்தவை. எல்லாக் கவிதைகளும் 2000 ஆண்டுகளுக்குப் பிந்தியே தீட்டப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழர் புலம் பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளிவந்த நம்நாடு, பூவரசு, திருப்பம், கலைவிளக்கு, சிகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான சஞ்சிகைகளிலும், பாரிஸ் ஈழநாடு, ஐரோப்பா முரசு, வெற்றிமணி போன்ற பத்திரிகைகளிலும் அதிக அளவில் வெளிவந்தவை.

பதினைந்து வயதினில் தாய் மாமனாரின் தூண்டுதலில் இலங்கை வானொலியில் கவிதை பாடிய சம்பந்தன், 1984ஆம் ஆண்டு முதல் ஜெர்மன் நாட்டின் இராட்டிங்கன் நகரை வாழ்விடமாகக் கொண்டபோதிலும், தாய் மண்ணை மறவாத பற்றுதல், தாய் மொழியில் இலக்கியம் படைக்கும் ஆவல், தாயகத்திலும் வாழ்வகத்திலும் சமகாலத்தில் தரிசித்த, தரிசிக்கும் வாழ்க்கைச் சவால்கள், இன்பதுன்பங்கள், அடிபட்ட மனதில் ஆழப்பதிந்துள்ள வடுக்கள், நாள்தோறும் மனதை விரட்டிக் கொண்டிருக்கும் தாய்நாட்டுக் கனவுகளும், ஏக்கங்களும் என்றவாறு பல்வேறு கருப்பொருள்களையும் உள்ளடக்கிக் கவிதைகளாகத் தந்துள்ளார்.

கருப்பொருள், பாடுபொருள் எனவெல்லாம் கூறினாலும் அதுவே கவிதையின் உயிர்ப்பொருளாகிறது. சம்பந்தனின் கவிதைகளுக்கு இயற்கை இன்பங்கள், சான்றோர் பெருமைகள், இலங்கைத் தமிழர்களின் பன்முக அவலங்கள், இறை நம்பிக்கைகள், ஐரோப்பிய நாடுகளின் சில தரிசனங்கள் முதலான பலவும் உயிர்ப்பொருள்களாக (கருப்பொருள்களாக) அமையப் பெற்றுள்ளன. சமகாலத்தின் தாக்கம் புரியாதவன் படைப்புகள் உயிரற்ற வெற்றுடல்கள். இங்கு வளர்ந்து வரும் இளைய கவிஞனொருவன் தான் கண்ட, அனுபவித்த உணர்வுகளை, காட்சிகளை நடப்புகளைக் கவிதா அனுபவம் மிளிரப் படைத்துள்ளமையைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளையாத சட்டங்களையே
தமக்காக வரைந்து வளைத்து
நீதிக்கே சவால் விடுவோரின் வரிசை
நித்திலத் தீவினிலே தொடர்கின்றது"

"எலும்புகளால் அத்திவாரமிட்டு
குருதியினால் குழைத்த கலவையில்
கோட்டை கட்டியதில்
சிம்மாசன சர்வாதிகாரிகள்
எத்தனை காலம் தான் நிலைத்திருந்தார்கள்..?"

இவை தொகுதியின் தலைப்பாக விளங்கும் "குருதி வரைந்த தடங்கள்" கவிதையின் சில வரிகள். இலங்கையின் பேரினவாதச் சூறாவளியில் அள்ளுண்டுபோய்விட்ட சிறுபான்மை யினங்களின் - குறிப்பாகத் தமிழினத்தின் நிலையை எண்ணி ஏக்கத்துடன் எழுதப்பட்ட, சர்வலோகத்துக்கும் பொதுமைப்படுத் தப்பட்ட கவிதைப் படைப்பு. இங்கு கவிஞர் எழுப்பிய வினாவிற்கான விடையை இலங்கையின் சமகால யதார்த்தம் உணர்த்தியதைப் பார்க்கும்போது புலவன் வாக்குப் பொய்க்காதென்பதையும் நினைத்துப் பார்க்க முடிகிறது.

இந்தக் கவிதைத் தொகுதியின் இறுதிக் கவிதையாகக் காணப்படும் "பள்ளி மாணவி படுகொலை" என்பது சமீபத்தில் இலங்கைத் தமிழினத்தை உலுப்பிவிட்ட வித்யா என்ற 18 வயது மாணவியின் கொடிய, குரூரமான வன்கொலை பற்றிய உணர்வு களின் வெளிப்பாடு. உலகம் முழுவதும் அந்தப் படுகொலையைக் கண்டித்துத் தத்தம் எண்ணங்களை வெளிப்படுத்தும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் கசக்கியெறியப்பட்ட மலர் பிறந்த, புங்குடுதீவுக்குச் சொந்தக்காரரான கவிஞனின் உள்ளம் கொண்டிருந்த சோகத்தினதும் கோபத்தினதும் பிரதிபலிப்பே இக்கவிதை எனலாம்.

"சின்னப் பறவையின் உடலத்தை
குண்டூசியால் குத்திக் குத்தி
குதறிய ஓநாய்கள்
மனித வடிவில் நடமாடும்
இரத்தக் காட்டேறிகள்"

என்று கவிஞர் கூறுவதுடன் நாமும் ஒத்துப்போய் விடுகிறோம்.

தனது குழந்தையினூடாகத் தான் கண்டனுபவித்த மழலை இன்பத்தை 'மழலை' என்ற கவிதையின் மூலம் எம்மையும் பெற்றுக் கொள்ளுமாறு செய்துள்ளார் கவிஞர்.

"முகங்காட்டா தெய்வங்களை
முன்னே நாம் பார்ப்பதுபோல்
அகங்காட்டா மனிதர்களிடையே
அகங்காட்டும் அற்புதங்கள்"

– எனக்கூறுவது அற்புதமானது.

"வெண்பனிச் சேலைதனை
பூமியணியும் போது
மனசுக்குள் மத்தாப்பு
பூவையவளணியும் போது
மனசுக்குள் மயானம்" ('விதவை' கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பெண்ணின் விதவைக் கோலம் ஏற்படுத்திய தாக்கம் இது.

"எழுதுகோல்" கவிதையில் மானுடத்தின் துயர் துடைப்ப தற்காக எழுத்தாளின் பேனா குனிய வேண்டுமென்கிறார் கவிஞர். வித்துவக் கவிதைகளும், விளக்கமில்லாக் கவிதைகளும் மானுடம் பற்றிப் பாடாதபோது சத்தற்றவையாகி விடுகின்றன என்பது கவியுள்ளக் கருத்து.

"தடைகளை உடைக்கவும்
தர்மத்தின் கதவுகள் திறக்கவும்
கிழக்கு வெளுக்கவும்
உதிக்கும் கவிதைகளென்றும்
உதிராத பூக்காளாகும்"

எனப் பாடுவதன் மூலம் கவிஞனொருவனின் தார்மீகக் கடமைப்பாட்டினைக் கவிஞர் சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இவர் சின்னஞ்சிறு வயது முதலாகவே கொடுமை கண்டு பொங்கும் குணத்தினராய் வளர்ச்சி கண்டவர். தாய்வழிப் பேரனார் சித்த ஆயுர்வேத வைத்தியர் தம்பிராசா அவர்களின் மூத்தமகளின் புத்திரராகையால், பேரனாரின் பண்பாட்டுத் தொட்டிலில் தாலாட்டப்பட்டவர். தாய் மாமன்மார்கள் நாடறிந்த, உலகறிந்த இலக்கிய படைப்பாளிகள். எழுத்தாளரும் அமரருமான நாவேந்தன், முன்னைநாள் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளரு மான துரைசிங்கம், பிரான்சில் வதியும் எழுத்தாளர் இளங் கோவன் ஆகிய இலக்கியக்காரர்களின் மருகரிவர். அவர்களால் இலக்கிய வுலகில் ஊட்டி வளர்க்கப்பட்டவர். ஒருவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையில் பாரம்பரியத்தின் பங்கு கணிசமானதல்லவா? சம்பந்தனும் வாடாத இலக்கிய மலர்களின் வாரிசாக விளங்குகிறார். அவரது புதிய கவிதைத் தொகுதியிலுள்ள பல கவிதைகள் அதற்குச் சான்று பகருகின்றன.

"அட்டை ஊர்கின்றது
பொருந்தாத் திருமணம்
மனசெல்லாம் காதலன்"

சமகால யதார்த்தத்தை ஹைக்கூ வடிவில் கவிதையாக்கியுள்ளார். ஆனால் இது ஹைக்கூ அல்ல ; பொருண்மையால் உயர்ந்து நிற்கிறது.

"பொய் முகங்கள்" கவிதையில்,

"இந்த நட்டுவக்காலிகளின்
கொடுக்குகளினால் கிழிபடுவது
சமுதாயம் மட்டுமல்ல
சரசரக்கும் பட்டுச்சேலைகளும்"

எனக் கூறுவதால் சமூகத்தில் காணப்படும் வேடதாரிகளைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

"பொய்மைத் திரைக்குள்
போலிச் சடங்குகளைச் செய்து
மூளைச் சலவைக்குள்
மக்களை மூழ்கடிப்பதெல்லாம்
உண்டியல்களை நிரப்புவதற்காக..."

எனக் கூறும் "மதம்" என்னும் கவிதையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பச்சை வண்ண ஆடைகட்டி
பருவப் பெண்ணின் வனப்போடு
பூமிமகள் பூத்துக் குலுங்குகின்றாள்
இப்புவியொரு பூஞ்சோலை" -

என்ற "இப்புவியொரு பூஞ்சோலை" கவிதையும் கவிஞரின் சமூக அக்கறைக்கும் இயற்கை நேசிப்புக்கும் சாட்சியம் பகருபவை. புதுக்கவிதைகள் நிரம்பிய இக்கவிதைத் தொகுதியை உற்றுநோக்கும்போது ஓசை, சந்தம், இசை ஆகிய இன்பங்களை இழந்துவிட்ட கவிதைகள் பெருகிவிட்ட சமகாலவுலகில், மரபுக் கவிதைக் கூறுகளைப் பற்றிப் பிடிக்கக்கூடிய கவிதாபலம் சம்பந்தனுக்கு அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. மேலே "மதம்" கவிதையிற் காட்டிய முதலிரு அடிகள் இதற்கு ஆதாரம். இவை போன்று எதுகை, மோனை, ஓசையொழுங்கு நிரம்பிய பல அடிகளைக் குறிப்பிட முடியும்.

"ஏணியில் ஏறும் போது
சிலருக்குத் தெரிவதில்லை
இடறினால் பள்ளத்தாக்கு" - உண்மையின் உரைகல் இச் சிறுகவிதை.

"ஊனம்" என்ற மூன்றடிக் கவிதை,

"ஊனம் உடலில்
பரவாயில்லை மணவாளனாகலாம்
உள்ளத்திலெனில்..?"

சிந்திக்க வைக்கும் அக்கினிக்குஞ்சு இக்கவிதையெனலாம்.

அந்நிய மண்ணில் நம்மவரின் அவலம் இப்படி வெளிப் படுத்தப்படுகின்றது. "குயில்கள்" கவிதையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புலப்பெயர்வில்
காக்கைகளின் கூடுகளில்
குயில்களின் குஞ்சுகள்
குஞ்சுகள் பாடுகின்றன
அஃது தாய் மொழியா..?
அந்நிய மொழியா..?"

"நகம்" என்னும் கவிதையில்,

"அளவோடு நறுக்கினால்
அழகாய் ஜொலிக்கும்
இல்லையெனில் ஆணியாகி
அங்கங்கே நெருடும்"

எனக் குறிப்பிடுவதுகூட அளவுக்கு மிஞ்சினால் வரும் ஆபத்தை யுணர்த்துவதாகும். "இது ஐரோப்பா" கவிதையில் புலம்பெயர் தமிழர்களின் பொருந்தா வாழ்க்கை முன்வைக்கப் பட்டுள்ளது. நல்லதும் கெட்டதும் இல்லறத்தின் இருபக்கங்கள் என உணர்த்தப்படுகிறது.

"குடும்பத்தேர் ஓர்திசையில் இழுக்கப்பட்டால்
ஒளிக் கிரகணங்கள் மனையிருள் கிழித்தெறியும்
திசைமாறி வடமிழுக்கும் குடும்பங்களோ
தீர்க்கமுடியா கடனதில் மூழ்கியே
திசை தெரியா கப்பலாகவே திணறுகின்றன"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சூரியச் சிலந்தி
வெப்ப வலையை
வேகமாய் பின்னுகிறது
மனிதன் வலைதனில் சிக்கி
நோய்களினால் தாக்கப்படுவான்"

"ஓசோன் கூரை" என்ற கவிதையின் சிலவரிகள் இவை. உலகந்தழுவிய மானுட நேயத்தின் கவனிப்பு இக்கவிதையால் விளங்குகிறது.

"நாடு கேட்டு
நகர் கேட்டு
ஊர் கேட்டு
உறையுள் கேட்டது
பாண்டவர்கள் மட்டுமல்ல
ஈழத்தமிழ் மக்களும் அஃதேபோல்..!"

இக்கவிதையினூடு பாரிய வரலாறு படிந்துள்ளமையை நாம் சிந்திக்க முடிகிறது.

"கங்குல் கிழிந்தொரு
கதிரொளிதான் பாயவில்லை
எங்கள் வானிலின்னும்
இருள்கறைதான் தேயவில்லை
அனர்த்தங்கள் தொடர்கின்றது
அலறல் சத்தம் கேட்கின்றது"

வன்னிப் பேரவலக் காட்சியின் சித்திரிப்பு இக்கவிதை. "எங்கள் வானத்தின் இருளகற்ற இன்னும் திங்கள் வரவில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதையுடன் ஒத்துச் செல்கிறது.

"பூமியின் கடுஞ்சினமே
பூகம்பம் பெண்ணே
உன் சினமெங்கே?"

"விதவை" கவிதையில் விதவைப் பெண்ணை நோக்கி விடுத்த வினா இது. "செந்தமிழ் உலகச் செம்மொழியே" என்ற தலைப்பில் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் தலைமையில் பாடிய கவிதையானது கவிஞரின் மொழிப்பற்றுக்கு எடுத்துக்காட்டு.

"அள்ளக்குறையா அருந்தவப் பெட்டகம்
வள்ளல் கைபோல வற்றாத பெருநிதியம்
தெள்ளுதமிழ் சிந்துகிற தெவிட்டாத தேனடை
எல்லாத் திசைகளிலும் எழிலே சுரக்கும்"

எனத் தாய்த்தமிழை வருணிப்பது பேரழகு. மரபுக் கவிதைபோல் மிளிர்கிறது. பெட்டகம், பெருநிதியம், தேனடை எனவெல்லாம் தமிழை உருவகிப்பது சாலச்சிறந்த கற்பனைக்குச் சான்றாகிறது.

"வீட்டுக் கோடியிலே
வேப்பமர நிழல்தனில்
அப்புவும் ஆச்சியும்
அன்னையும் தந்தையும்
உற்றாரும் உறவுகளும்
அத்தனையும் எங்கே?
கனவுகளாய்ப் போயினவோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிவிட்ட ஆட்டுக்குட்டியைத் தேடித் தவிக்கும் இடையனின் மனோபாவத்துடன் "கொலுவிருக்கும் நினைவுகள்" கவிதை யாக்கப்பட்டுள்ளது. இதேபோன்று "புங்கையூர்" முதலான கவிதைகளும் உள்ளன.

வாழ்வியலின் நாலா பக்கங்களையும் அவதானித்துத் தன்னால் முடிந்தவரை ஆவணக் கவிதைகளாகத் தந்துள்ள சம்பந்தனின் முயற்சி பாராட்டிற்குரியது. இத்தொகுதியிலுள்ள கவிதைகளின் எண்ணிக்கை சற்றுக் கூடுதலாகத் தெரிகிறது. இனி வருங்காலங்களில் அளவான கவிதைகள் கொண்ட தொகுதிகள் வெளிவருமென நம்புகிறேன்.

அறிவும் ஆற்றலும், சமூகப் பிரக்ஞையும் கொண்டுள்ள இளங்கவிஞரின் படைப்புகளில் அநேகமானவை எளிமை, பொருண்மை, நடப்பியலுண்மை, கலைத்துவம் முதலியன கொண்டு விளங்குகின்றன. சம்பந்தனின் இத்தூய பணி மேன் மேலும் தொடர வாழ்த்துகிறேன். வருங்காலம் அவரது கனதியான கவிதைகளால் வளம்பெறும் என நம்புகிறேன்.

**யாழ்ப்பாணம்.** **கலாநிதி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இது எனது மூன்றாவது கவிதைத் தொகுப்பு நூல். முக்கனியிலொன்றாக இந்நூலும் அமையுமென எதிர்பார்க்கின் றேன். ஒரு பறவையின் சிறகசைப்பாய் விரைகின்றது காலம். காலத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாவிட்டாலும் ஒரு சிறுவன் எட்டிய மட்டும் பாதங்களை வைத்து நடப்பது போல் நடந்திருக்கின்றேன்.

ஒரு நதி நகர்ந்து நகர்ந்து பாடிப்பாடியே பயணப்பட்டுக் கொண்டேயிருப்பது போல் பயணிக்கவே விரும்புகின்றேன் கடலில் சங்கமிக்கும் வரை..!

இந்நதியின் சில சுவடுகளையாவது மானுடத்திற்காக இந்தப் பூமியில் விட்டுச் செல்லவே விரும்புகின்றேன். அதற்கான தேடல்களே பாடல்களாய்ப் பரிணமிக்கின்றன.

ஓரிலக்கிய விருட்சத்தின் கிளையில் துளிர்த்த இலை யாகவே யான் இந்தப் பூமிக்கு அறிமுகப்படுத்தப்பட்டேன். அந்த விருட்சத்தின் வேராக எனது பேரனார் வீ. தம்பிராசா (தம்பையா). அதன் கிளைகளாக எனது மாமன்மார்களும் இருந்திருக்கின் றார்கள்; இன்றுவரை இருக்கின்றார்கள்.

எனது பேரனார் சித்த ஆயுர்வேத வைத்தியர் மட்டுமல்ல நாடிக்கலையில் நாடறிந்த நிபுணரும் கூட....

அறிவு வளராத சிறுவனாக நானிருந்த காலத்திலேயே தேவார, திருவாசக, திருப்புகழ் போன்ற பக்தியிலக்கியப் பாடல்களை எனது பேரனார் ராகத்தோடு பாடுவதோடு மட்டுமல்லாமல் என்னையும் பாடும்படி வற்புறுத்துவார். அறிவு முதிராப் பருவத்திலும் ஓசை நயத்தால் கட்டுண்டு அப்பாடல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திற்குள் பதியமிட்டிருந்திருக்கிறேன் அந்நாட்களில்..! காலங்கள் உருண்டோட சொல்நயம், பொருள் நயம், கவிநயம், எதுகை, மோனை என்பனவற்றை அவற்றிலிருந்தே கற்றுக்கொண்டேன். மரபுக் கவிதையின் ஆணிவேராக எமது பக்தியிலக்கியம் இன்றுவரை தழைத்தோங்கி நிற்கின்றது.

எனது பேரனார் மட்டுமல்லாமல் எனது தாயாரும் இவற்றை நன்கறிந்தவராவார். மகாபாரதம், இராமாயணம், கந்த புராணம், பட்டினத்தார் பாடல்கள், சித்தர் பாடல்கள், பழைமை வாய்ந்த இலக்கியப் பாடல்கள் போன்றவற்றைச் சிறு வயதிலிருந்தே கதையாகவும், பாடல்களாகவும் எனக்கு கற்றுத் தந்தவர். இவற்றி லிருந்தே எனது கவிதைகளுக்கான ஊற்றுக் கண் திறந்ததென்று நம்புகின்றேன். இந்தக் காலப்பகுதியில் இலக்கியத் தரம் வாய்ந்த சினிமாப் பாடல்களும் என்னைக் கவர்ந்திழுத்திருக்கின்றது.

எனது கன்னிக் கவிதையை எனது 15-வது வயதில் இலங்கை வானொலிக்காக கவிஞரும் எனது மாமாவுமாகிய திரு. வி. ரி. இளங்கோவன் அவர்கள் பதிவு செய்து எனக்கு ஊக்கமளித்திருந்தார்..!

1984 பிற்பகுதியில் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் ராட்டிங்கன் நகரில் வசித்து வந்தபொழுது அங்கே தமிழர் நலன்புரிச்சங்கம், தமிழர் புனரமைப்பு ஒன்றியம் போன்றவை உதயமாகின. அதன் தலைவர்களாக திரு. அரசரட்ணம், நண்பர் திரு. செல்வகுமார் ஆகியோரும் அவற்றின் செயலாளர்களாக திரு. சத்தியமூர்த்தி, திரு. கதிர்காமநாதன் போன்றவர்களும் பணி செய்திருந்தார்கள். இந்தச் சங்கங்களின் நிர்வாகப் பிரிவில் கவிஞரும் நண்பருமான திரு. நா. தேவதாசனும், நண்பர் சண்முகராஜாவும் கடமையாற்றினார்கள். இன்னும் பலர் இச் சங்கங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களாக வீற்றிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சங்கங்களின் அயராத முயற்சியினால் பல விழாக்கள் நடாத்தப்பட்டன... எல்லா விழாக்களிலும் கவியரங்குகள் நடை பெறும். எல்லாக் கவியரங்குகளிலும் யானும் கவிஞர் நா. தேவதாச னும், கவிதாஞானவாரிதி திருமதி. கோசல்யா சொர்ணலிங்கமும் கலந்துகொண்டதுண்டு. அந்தக் காலப் பகுதியில் ஜேர்மனியில் பல நகரங்களிலும் கவியரங்குகளில் பங்குபற்றியதுண்டு.

இதே காலத்தில் ஜேர்மனியில் பல சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் வெளிவரத்தொடங்கின.

முதன்முதலாக நம்நாடு என்னும் சஞ்சிகையில் எழுதத் தொடங்கினேன். அதன்பின் 'பூவரசில்' எழுதத் தொடங்கியதும் எனது பேனா வேகமெடுத்து இயங்கியது. அதற்கு மூலகாரணம் இலக்கியச் செம்மலான பூவரசின் ஆசிரியர் இந்து மகேஷ் தான்..! ஒரு தாய்போல் அரவணைத்து என்னை எழுதத் தூண்டிக் கொண் டேயிருப்பார். இந்தப் பேனாவுக்கு மை வார்த்துக் கொண்டே யிருப்பார். அவருக்கு என்றும்போல் என் முதற்கண் நன்றிகள் உரித்தாகட்டும்.

அன்றைய நாட்களில் எனது ஆக்கங்களைப் பிரசுரித்த சஞ்சிகைகளான பூவரசு, நம்நாடு, திருப்பம், கலைவிளக்கு போன்றவற்றிற்கும், பத்திரிகைகளான பாரிஸ் ஈழநாடு, ஐரோப்பா முரசு, வெற்றிமணிக்கும், இன்றைய நாட்களில் எனது கவிதை களைப் பிரசுரித்த சஞ்சிகை சிகரத்திற்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

எனது முதல் இரு நூல்களும் அச்சுவாகனமேற காரண கர்த்தாவான எனது மாமாவும் கவிஞருமான திரு. த. துரைசிங்கம் அவர்களை யான் மறந்துவிடலாகாது..! எத்தனையோ எழுத்துப் பணிகளுக்குகிடையே எனது கவிதை நூல்களை அழகுற வடிவமைத்து எழுத்துலகில் என் முகங்காணச் செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கும் என்றென்றும் என் நன்றிகள். இவரைப்போலவே எனது மூன்றாவது கவிதைத் தொகுப்பு வெளிவருவதற்கு எனது மாமா வும் கவிஞருமான திரு. வி. ரி. இளங்கோவன் அவர்களும் அரும் பாடுபட்டிருக்கின்றார். அவருக்கும் என் நன்றிகள் உரித்தா கட்டும்..!

ஆரம்ப நாட்களிலிருந்து இன்றுவரை ஜேர்மனியில் எனது கவியரங்க மேடைகளுக்குச் சந்தர்ப்பங்களை வழங்கிவரும் திருநாவுக்கரசு நற்பணி ஒன்றியத்தின் ஐரோப்பிய அமைப்பாளரும் எனதருமை அண்ணருமான திரு. மகாலிங்கம் அவர்கட்கும், எனது நண்பரும் ஆன்மீகச் செம்மலுமான திரு. செல்வகுமார் அவர்கட் கும் எனது நன்றிகள்.

வாசகர்கள், இலக்கிய ஆர்வலர்கள், நண்பர்கள் எனக் கென்றும் பக்கபலமாகவிருப்பதனால் அவர்களுக்கும் எனது உள மார்ந்த நன்றிகள். அந்நிய தேசத்தின் அவசரவாழ்வில் ஓய்வாக உட்கார்ந்திருப்பது சில மணித்துளிகளே..! அந்த நேரத்தைக் கூட என் மனைவி பிள்ளைகளுக்காக யான் ஒதுக்குவது குறை வென்றே சொல்லலாம். ஆயினுமென்ன எனக்கான சுவடுகளில் அவர்களுக்கான அங்குலத்தின் அளவுகளைக் கண்டுகொள்வார் களென்ற நம்பிக்கையில், உளநிறைவில் உற்சாக மடைகின்றேன்.

**இராட்டிங்கன்,** **- இ. சம்பந்தன்**

**ஜேர்மனி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் காதலி

கவிதைக் கன்னியே கனியே
நீயே என் முதல்காதலி...

ஈரெட்டு வயதினிலே
உன்னோடு யான்
இரண்டறக் கலந்தவன்
இன்றுவரை உனைவிட்டு
இணைபிரியாது வாழ்பவன்,

ஊற்றெடுக்கும் உவமைகளை
உன்னிடத்திலே ரசிப்பவன்
உரசிடும் எதுகை மோனையால்
என்னையே இழப்பவன்,

கனியோடு சாறதுவாய்
கவிநயம் மிளிர்ந்தாலோ
கற்கண்டைக் கடித்ததுபோல்
களிப்பினிலே மிதப்பவன்,

மரபாய் நீயென்
மடிமீது சரிந்தாலும்
புதுக்கவிதையாகி நீயெனை
புரட்டியே எடுத்தாலும்,

சலிக்காமல் உன்னோடு
சல்லாபம் புரிந்திடுவேன்
சாகும்வரை உனைவிட்டு
சற்றேனும் பிரிந்திடேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை அணிகள் உன்னிடத்தில்
அத்தனையும் தங்கச் சுரங்கம்,

ஒருபொழுது நதியாக நடப்பாய்
மறுபொழுதோ அருவியாய் வழிவாய்,

தமிழவள் எனக்கென்றும் மாமியார்
தமிழுக்கு மகள்நீ என்காதலியே,

கவிதையெனும் காதலியே
நீயென் முதல்தாரம்
வாழ்வின் ஆதாரம்
மனையாள் போலவே,

கட்டில்வரையும் வருபவள்
வட்டிலிலிட்டு வழியாமல்
யானும் உண்ணுகையில்
மட்டிலா மகிழ்வு தருபவள்..!

- 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலை

கையசைவோ ஓரழகு
காலசைவோ தனியழகு
புன்னகையோ பேரழகு
பூவிதழாய் அங்கமெல்லாம்
அம்மழலை இல்லையெனில்
இவ்வுலகொரு மயானம்..!

தொட்டிலிலே கிடந்து
தூயமொழி சிதறி விழ
அந்தமொழி எப்பொழுதும்
எந்தமொழியு மல்லாத
சொந்தமொழிதான் மழலைக்கு..!

பொய்மை யறியாத பருவம்
உண்மையின் மொத்த உருவம்
ஒப்பனை முகமில்லாத ஜீவன்
தப்புகள் அறியாத தளிர்
துன்பத்தின் நிழல் சூழா
துளசிச் செடிதான் மதலை..!

அம்மழலையின் சங்கீதம்
எம்மனையின் சந்தோஷம்
இப்புவியின் புல்லாங்குழல்
இத்தரையின் தேனடை..!

முகங்காட்டா தெய்வங்களை
முன்னே நாம் பார்ப்பது போல்
அகங்காட்டா மனிதர்களிடையே
அகங்காட்டும் அற்புதங்கள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையொரு குழந்தை

சிற்றிடையில் நோவெடுக்க
செந்தாமரைப்பூ மலர்ந்து
செவ்வந்திப்பூ வந்து சிரிக்கையிலே
சிரித்திடுவாளொரு தாய்,

சிரசில் சூடேற
உரசிடும் நினைவுகளோ
உள்ளிருந்தே உதைக்க
உலகைமறந்த நிலையொன்றில்
உதயமாகும் கவிதையை
உவகையோடு ரசிப்பவனே கவிஞன்,

நாடி நரம்புகளிலே
ஓடுகிற குருதியிலே
உயிர்வாழுமொரு மழலை,

நாடி நரம்புகளிலே
ஓடுகிற உணர்வுகளிலே
உயிர்க்குமொரு கவிதை,

கருவறையில் கண்வளரும்
ஒரு கவிதை அதுமழலை
இதயத்தில் விழிதிறக்கும்
கவிதையே இன்கவிதை,

இருகவிதைகளுமே
உணர்ச்சியில் வழிகின்ற
உயிர்த்துளிகளே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நேரம் பார்த்து
கருவறை திறப்பதில்லையே,

கவிதையும் கருத்தரிக்க
காலநேரம் பார்ப்பதில்லை,

குருதியது கொதிக்க
உறவில் விளைவது மழலை,

குருதியது உறைய
உயிரில் விளைவது கவிதை,

மூச்சுவாங்கி முக்கி
முனகல்களிடையே பிரசவிப்பது
குறைப்பிரசவ மென்றால்
குப்பைகளாய் குழிகளுக்குள்..!

-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதுகோல்களுக்கு...

காகிதப் பூக்களாய்
கவிதைகள் புனைகின்ற
கவிஞர்களே நில்லுங்கள்...!
வாசமுள்ள பூக்களாய்
கவிதைகள் புனைந்தால்தான்
வாழுமவை நிரந்தரமாய்..!

எதுகை மோனை
ஓசை நயம் மட்டுமல்ல கவிதை
உடலுக்குப் பாசனம் குருதி
உலகிற்கு பாசனம் கவிதைகள்..!

விளக்கமில்லாக் கவிதைகளினால்
விளைவது எதுவுமில்லை
விளைச்சலில்லா வயல்போல்
வெறுமையைத்தான் வார்க்கும்..!

வித்துவத்தை நிரூபிக்க
எத்தனையோ வழிகளுண்டு
கனமான சொற்களெடுத்து
கட்டிடத்தை நிர்மாணித்தால்
கவிதைமனை அழகாகுமா..?
அர்த்தமில்லாச் சொற்களினால்
அத்திவாரமே பலமிழக்கும்..!

மகத்தான படைப்புக்களாய்
மக்களைச் சென்றடைந்து
மனங்களில் கொலுவிருந்தால்
படைப்பாளி என்றென்றும்
படைப்புலகின் பிரம்மா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கங்கள் எப்பொழுதும்
சமுதாயத்தில் நல்லதொரு
தாக்கத்தைச் செய்துவிட்டால்
படைப்பாளியின் பதாகை
பாரெங்கும் பட்டொளி வீசும்..!

தடைகள் உடைக்கவும்
தர்மத்தின் கதவுகள் திறக்கவும்
கிழக்கு வெளுக்கவும்
உதிக்கும் கவிதைகளென்றும்
உதிராத பூக்களாகும்..!

உணர்வின் வாய்க்காலில்
ஓடுகின்ற கவிதைகள்
வாசகர்களின் இதய வயலை
ஈரமாக்கிச் செல்ல வேண்டும்
அவர்களின் பாரங்களை மெல்ல
இறக்கி வைத்து வெல்ல வேண்டும்..!

காரிருளில்
திசைதெரியாக் காட்டினிலே
திக்குமுக்காடும் மனிதர்களின்
கரங்களைப் பற்றிச் சென்று
கதிரொளியைக் காட்ட வேண்டும்..!

பாடுபொருளின் பெருங்கடன்
மானுடத்தை நாடிச்சென்று
கண்ணீரைத் துடைத்து
அவர்களின் காயங்களுக்கு
கட்டுப்போடல் அவசியமாகும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை யென்பது
உலகக் குழந்தைக்கு
புட்டிப்பாலாய் இருத்தலாகாது
தாய்ப்பாலாய் வழிந்துவிட்டால்
தரணியெங்கும் புதியதொரு மலர்ச்சி
பொங்கிப் பிரவாகமெடுக்கும்..!

## ஜனனம்

சொற்களால்
வன்சொற்களால் உன்னை
காயப்படுத்துகின்றார்களா..?
துயரத்தை துடைத்துவிடு
உயரத்தை எண்ணிவிடு..!

மரமொன்றை காயப்படுத்தி
துளையிட துளைவிழ
புத்துணர்வை யளிக்கின்ற
இசையைப் பிரசவிக்கின்ற
புல்லாங்குழலாய் பரிணமிக்கின்றது...

மரம்போல் நீயும்
வெட்டினாலும் வேர்விடு
சுட்டாலும் தளிர்விடு
மீண்டுமங்கே ஜனனமாவாய்...
புதிதுபுதிதாய்ப் பூத்திடுவாய்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அறமும்...

நேசமது மறந்து நிம்மதியினைத் தொலைத்தே
ஆசையின் வயப்பட்டு அலைபாயும் நெஞ்சோடு
ஓசையிடும் மனசைக் ஒருசேரவே கட்டாமலும்
வேசமதை அணிந்து விலைபோகும் மானுடர்காள்..!

உள்ளும் புறமும் உவகையது விரவிக்கிடக்கவே
வெல்லும் மார்க்கத்தை விதைக்காமல் பூமியிலே
சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி நீளவே
அல்லும் பகலும் அலைகடல்மேல் படகாவீரோ..?

பணமும் பதவியும் பார்தனிலே பெறுவதற்காய்
குணமென்ற கோபுரத்தை கொளுத்தவும் துணிவீர்
பிணத்தின்மேல் நடந்தே இனமானம் விற்பீரோ...
ரணமாகியே மனிதம் இரத்தத்தில் தோய்கிறதோ..?

மெய்யும் உயிரும் இணைந்தே யிருப்பதுபோல்
பொய்யும் புரட்டும் நிறைந்துவிட்ட பூமிதனிலே
என்புதோல் போர்த்தி உலவுகிற மனிதர்களினால்
அன்பும் அறமும் அழிந்துபடும் நிலைதானோ..?

கருணையை வழியவிடு கடமையை மறவாதே
உரிமையை நாட்டி உத்தமனாய் வாழ்ந்துவிடு
வறுமையில் வாடுவோருக்கு வழிதனைக் காட்டு
பெருமைகள் தேடிவரும் பெயரினைப் பதியமிடும்..!

மண்ணிலே பிறந்துவிட்டால் மரிக்கும்வரை துன்பம்
கண்ணிலே வழிவதை கைகளினால் துடைத்துவிடு
விண்ணிலே யிருக்கும் வேந்தனோ உந்தனுக்கு
தண்ணொளி காட்டியே தாள்களிலே சேர்த்திடுவான்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னழகு காண்பதற்கு இருவிழிகள் போதாது..!

பல்லாண்டுகளின் முன்னே ஜேர்மனியிலே
பக்குவமணியாம் பாஸ்கரக்குருக்கள் பதியமிட்டார்
எல்லாத் திசைகளிலும் உன்னாட்சியே
இன்னருளைத் தந்தருளும் காமாட்சியே
நில்லாமலே மனிதவாழ்வு போயழிந்தாலும்
நிலைத்திருபாருன் கமலப்பாதங்களில் பக்தரெல்லாம்
நல்லோர்கள் உள்ளங்களில் கோயில்கொண்டே
நலங்களையும் வளங்களையும் அளித்திருப்பாயே...

பரமசிவன் மேனியிலொரு பாதியென்றானாய்
பக்தர்களின் உள்ளங்களில் மீதியென்றானாய்
வரங்களையே தந்தருளும் மாரியென்றானாய்
வக்கிரங்களையும் அழித்துவிடும் காளியென்றானாய்
இரக்கமிலா அரக்கர்களைத் துடைத்தழிக்கவே
இரவென்ன பகலென்ன விழிமூடாதிருப்பாய்
கரங்குவித்தே வணங்குகின்றோம் தாயேயுனையே
கருணைவிழி திறந்தெம்மை காத்திருப்பாயே...

யானாட்சி எவ்வுலகிலும் என்றுணர்த்தும்
காமாட்சியைத் தொழுதுவிடில் மரணபயமிலையே
மீனாட்சியாய் மதுரையிலே வீற்றிருப்பவளுமவளே
காமாட்சியாய் கம்மிலே காத்திருப்பவளுமவளே
தேனாட்சி செய்யுமொரு தேன்குடத்தை
தித்திப்பை வார்க்குமொரு பாற்குடத்தை
வானாட்சி செய்பவரும் இறங்கிவந்து
வையகத்தில் அவளழகைக் காண்பதுண்டு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுரதமேறி அன்னைநீ வரும்பொழுதினில்
உன்னழகை என்விழிகள் நன்றாய்ப்பருகும்
அழகெல்லாம் உலகிலுள்ள பேரழகெல்லாம்
உன்னழகின் துகளொன்றென நெஞ்சுருகும்
பழத்தட்டுக்களும் தீச்சட்டிகளும் பக்தர்களேந்த
பள்ளிகொள்ள அசைந்தாடி வருகின்றபோது
வழங்கினாய் எனக்கிருவிழிகள் போதாதுதாயே
வண்ணமயில் உன்பேரழகை காண்பதற்கு நானே...

பசுமைமிகு வயல்வெளியின் நடுவுதனிலே
பாங்குடனே அருள்சுரக்கும் பொற்பதமே
இசையோடு தேவாரப் பதிகங்கள் இசைத்திருக்க
இன்விழிகளெங்கும் பரப்பியிருக்கும் அற்புதமே
ஆசிகளும் இன்னருளும் பெறுவதற்கென்றே
அடியார்கள் பல்லாயிரவர் கூடிவருவார்
ஓசையின்றி நானுமுனை நாடிவருவேன்
ஓங்காரநாயகியே உனையன்றி எனக்குயாருளார்..!

(ஜேர்மனியில் கம் நகரில் கோயில் கொண்டிருக்கும் காமாட்சி அம்மனை நினைந்து நெஞ்சுருகப் பாடியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகள்

நன்னீர் போன்ற
நலமான கவிதைகள்
கண்ணீர்ப் பொழுதுகளையே
கரைத்துவிட்டுப் போவதுண்டு.

இரசனைதராக் கவிதைகளை
விழிகள் வாசிப்பதும்
இதயமில்லாப் பெண்ணொடு
உறவாடுவதும் ஒன்றே..!

இலட்சியக் கவிஞர்
கட்டிடும் பாமாலைகள்
இறைவன் கழுத்திலேறும்
வாசமுள்ள பூமாலைகள்..!

## பூவின் வாசம்

புயல் வந்தென்னைப்
புரட்டிப் போடவுமில்லை...
சுனாமி வந்தென்னைச்
சுவீகரித்துச் செல்லவுமில்லை
நிலநடுக்கம் என்னை
நிர்மூலம் ஆக்கவுமில்லை
பூவொன்று வாசம்வீசி
புதைத்துவிட்டது என்னைத் தன்னுள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு

நாடு என்பதை நாடாதவர்களை
நம்மினம் நாடுவதில்லை எப்பொழுதும்
ஏட்டினைப் புரட்டுவதால் மட்டுமென்ன
எம்கடமை தீர்ந்துதான் போகுமா..?
வீட்டினை மட்டுமே எண்ணியென்றும்
விழுமியங்களை மறத்தல் ஆகாது..!
கூட்டினை விட்டே பறந்த
குருவிகளாய் நாம் வாழ்ந்தாலும்
நாட்டின் நடப்புகள் தினம் தினம்
நமக்குகள் நர்த்தனம் புரிகின்றது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

எத்தனை எத்தனை மொழிகளை
இப்புவியில் நாம் கற்றிருந்தாலும்
அத்தனை மொழிகளிலும் இனிமை
அன்னை தமிழென்றால் மிகையாகாது
முத்தனைய மொழிக்கு ஈடாகவே
முழுஉலகையும் கொடுத்தாலும் சமனாகாது
கத்தும் கடல்தாண்டியே கவின்தமிழ்
காசினியெல்லாம் கலகலவென்று சிரிக்கின்றதே..!

இலக்கணத்தின் விசாலத்தால் உயர்ந்தது
இலக்கியங்கள் பல்வகையாய் நிறைந்தது
துலங்கிடும் தூயதமிழுக்கு ஆணிவேராக
தொல்காப்பியன் வகுத்துவிட்ட இலக்கணமும்
இலங்கிடும் இன்தமிழின் தூண்களாக
இயலிசை நாடகம் எப்பொழுதும்
விளங்குகின்றது உலகமதில் செம்மொழியாக
விளக்கமிது எல்லோரும் அறிந்திடுவீர்..!

புறநானூறில் மட்டுமல்ல ஈழமதில்
புதிய வரலாறும் தான் கண்டிருந்தோம்
அகநானூறு தந்ததுவும் தமிழ்தானே
அளப்பரிய ஐம்பெருங்காப்பியங்களும் தமிழில்
அறநூல்கள் எத்தனையோ தமிழ்மொழியில்
அதற்கெல்லாம் மகுடமாய் திருக்குறள்
மறக்காமல் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள
மறுக்காமல் தமிழாலயம் சென்றிடுவோம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் தமிழும்

மூவேந்தர் முப்பொழுதும்
முடிசூட்டி முயன்றதாலும்
பாவேந்தர் எந்நாளும்
பாச்சூட்டி மகிழ்ந்ததாலும்
சாவேந்திப் போகாமல்
சைவமும் தமிழும்
பூவேந்திப் பொன்னேந்தி
புலத்தினிலும் வாழ்கிறது..!

நதிநடக்கும் பாதையெங்கும்
நாணல்கள் செழிப்பதுபோல்
நாம் நடக்கும் பாதையெங்கும்
சைவமும் தமிழும் கொழிக்கும்..!

புதிதுபுதியாய் எங்கும்
பிறப்பெடுக்கும் கோயில்கள்
புத்தொளியே ஊட்டுகின்ற
ஆன்மீகவாதிகளின் நல்வரவு
தகுதியுள்ளோரின் பரிபாலனம்
தழைக்கிறது வீச்சோடு
சைவமும் தமிழும்...
மரத்திலே கொடிபோலவும்
மண்ணிலே ஈரம் போலவும்
மலருக்குள் வாசமாகவும்..!

வற்றாத நதியாக சைவமெனில்
வாடாத மலராக தமிழ்
ஓயாத அலையாக சைவமெனில்
தேயாத நிலவாகத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையும் காவிரியும்
காலாற நடப்பதுபோல்
சைவமும் தமிழும்
இருநதிகளின் பிரபாகத்தால்
தீமைகள் தீய்ந்துபோகும்
வாய்மைகள் வலுவுறும்..!

சைவமும் தமிழும்
ஒன்றாய் பிறந்துவிட்ட
இரட்டைக் குழந்தைகள்
நன்றாய் பிணைந்திட்ட
நறுமண மாலைகள்
நின்றாடும் உலகினில்
நிலைத்து நிற்பவை
குன்றாடும் குமரனின்
கோயிலில் வாழ்பவை..!
இவையிரண்டும்
இக்கரையில் மட்டுமல்ல
அக்கரையிலும் அழியாமல்
எக்கரை சென்றாலும்
அக்கறையோடு தமிழர்..!

சரித்திர காலத்திலிருந்தே
பிறமதங்களின் படையெடுப்பு
எம்மதத்தையும் மொழியையும்
புதைத்துவிட எண்ணினவாம்
புதைந்தன பிறமதங்கள்...
இந்துமாகடலை இருகுடங்களில்
இட்டுவிடல் எளிதாகுமா..?
சிந்துவெளி நாகரீகத்தில்
சிற்றாடை கட்டிய
செந்தமிழ் கன்னியரை
சிதைத்துவிடல் சாத்தியமாகுமா..?

- 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் உலகச் செம்மொழியே..!

அகர மென்றான அனைத்திற்கும் ஆதியானவள்
பகரும் வித்தைகளுள் பாங்குடனே படர்பவள்
நுகரும் கலைகளுள் நூலுருவாய் இருப்பவள்
நகரும் நாழியெல்லாம் நான்முகனோடு களிப்பவள் - அந்த
சிகரமானவளின் செங்கமலப் பாதம் தொழுது
செந்தமிழ் அரங்கிற்கு வருகிறேன் யானே...

மொழிகளில் முன்தோன்றிய மூத்தமொழியே
மொழிந்திட கனிச்சுவையாய் கனிந்திடுமொழி
பைந்தமிழாய் பாரெல்லாம் படருமொழியே
செந்தமிழ் உலகச் செம்மொழியே..!

தமிழ் நெடுங்கணக்கில் உடலெடுத்த நங்கையவள்
உமிழ்கடல் ஓரமெல்லாம் உரசிடும் மங்கையவள்
அமிழ்தானவள் வல்லினம் மெல்லினம் இடையினம்
சிமிழவள் தங்கச்சிமிழ் செழுந்தமிழ் தாயவளே..!

உயிர் மெய் உயிர்மெய் ஆய்தமென
தரணியெங்கும் தண்ணென வியாபகமாகி
பரணிபாடிடும் பாட்டுடைத் தலைவியே
அவளிடம் நாம் பழகிடும்போதினிலே
கலகலவென சிரித்திடும் இரட்டைக்கிளவியே..!

மூவேந்தரின் வெண்கொற்றக் குடையின் நிழல்தனிலும்
பாவேந்தரின் பண்ணிசைப் பாடலாம் பொழில்தனிலும்
நாவேந்தர் சிந்துகின்ற நறுந்தமிழெனும் எழில்தனிலும்
சாவேந்திப் போகாமல் சந்தனமாய் கமழும்தமிழே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியரின் வருகை அந்நியமொழிகளின் ஊடுருவலிலும்
வண்ணம் மாறாமலும் தன்னெழில் குலையாமலும்
பண்ணோடு நகர்ந்தெங்கும் பாங்குடனே நிமிர்ந்து
விண்வரை சாதனைகளை விளைத்ததெம் தமிழே..!

கட்டுக் குலையாத கன்னியைப் போலவே
கட்டவிலாத யாப்பிலக்கணம் என்றென்றும்
கற்கண்டுச் சுவைபோல கவிநயம் அந்த
கன்னியின் மொழிநயம் களிப்பையே தரும்...

எதுகை எழிலரசிக்கு முன்னழகாகும்
மோனை மொய்குழலிக்கு பின்னழகாகும்
சந்தங்களோ அவளின் சலங்கையொலி
சந்தனமேனியில் அசை சீர் தளை தொடை...

இயல் இசை நாடகம் இடையழகே
இணையற்ற இலக்கியங்கள் நடையழகே
மங்கையின் ஒரு விழியோ மரபுக் கவிதை
கங்கையின் மறுவிழியோ புதுக்கவிதை
செங்கையில் எந்துகிறாள் கைக்கூ
பங்கையச் செல்வி பாரிஜாதமலர்
செந்தமிழ் உலகச் செம்மொழியே..!

தமிழை உச்சரிக்க உதடுகளில் தேன்சுரக்கும்
எண்ணிடில் உள்ளத்தில் உவகையே பூக்கும்
எழுதிடில் கதை கவிதை கட்டுரையென விரியும்
தழுவிடில் தாயாகவேதமிழ் சேயாகவே நாம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திவானம் ஆகா அழகே
ஆர்ப்பரிக்கும் கடலும் அழகே
மந்தமாருதம் தவழ்ந்து வரும்
மலர்ச்சோலை மண்ணில் அழகே
இந்துமா கடலோரம் எழிலாய்
பட்டொளிவீசும் செந்தமிழ் பதாகை
செகத்தினில் பேரழகே..!

அள்ளக் குறையா அருந்தவப் பெட்டகம்
வள்ளல் கைபோல வற்றாத பெருநிதியம்
தெள்ளுதமிழ் சிந்துகிற தெவிட்டாத தேனடை
எல்லாத் திசைகளிலும் எழிலே சுரக்கும்
செந்தமிழ் உலகச் செம்மொழியே..!

- 2005

(ஜேர்மனியில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் நடாத்திய தன்மானத் தமிழ் விழாவில், பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் தலைமையில் அரங்கேறிய என் கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணே உன் சினமெங்கே..?

போலிச் சடங்குகள்
பொட்டையும் பூவையும்
மட்டுமல்ல உணர்வுகளையும்
கொளுத்திவிடுகின்றன.

கண்ணாளன் மரித்ததுமே
பெண்ணவளை பெருந்தீயில்
பொசுக்கியதன்று மூடநம்பிக்கை.

விதவையெனில் வெண்ணிறமா
பெண்ணின் நிறங்களை
புரியாதோரே உங்கள்
புத்தியை சுத்திகரியுங்கள்.

மனைவி யிறந்துவிடின்
கணவனவன் மாப்பிள்ளை
கணவனே யிறந்துவிடின்
கண்மணிக்குப் பாடையா..?

விதவையின் கண்ணீர்
விழிகளின் கரைகளை
உடைத்து உதிர்வதை
நீங்கள் கண்டதுண்டா..?

சந்திரன் அல்லிக்கும்
சூரியன் தாமரைக்கும்
சுருதி சேர்க்குமெனில்
இந்தச் சுந்தரிக்கு..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரில் மெல்ல
தளிர்மேனி நனைந்தாலும்
வெந்நீராய் கொதிக்கும்
விரகந்தான் அடங்குமா..?

இளவேனிற் காலத்தின்
இளந்தளிர்க் கொடிகளையே
இன்னொரு கொம்புதனில்
படராமல் தடுத்தல் நீதியா..?

தகதகக்கும் தங்கம்
தட்டினால் மட்டுமே
தங்க ஆபரணங்களாகும்
மலர்போன்ற மங்கை..?

பொன்னாரம் பொலிவோடு
மின்னுவது கழுத்தினிலே
கண்ணாளன் கழுத்துக்கு
மாலையெனின் மங்கலமே,

இந்தச் சாத்திரம் சமயம்
எந்நாளும் பூச்சூடும்
செடிகள்மேல் அமிலம் வார்க்க
கண்ணீரில் பூச்செடிகள்.

சமுதாயத்தின் தளைகளை
அறுக்கவொண்ணா அபலைகளின்
பெருமூச்சில் பெருந்தடைகள்
பொசுங்கியே போகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறையென்றும்
பூமிக்கும் பெண்ணுக்கும்
பொருந்துமென்பது
பொய்யென்பதே மெய்..!

பூமியின் கடுஞ்சினமே
பூகம்பம் பெண்ணே
உன் சினமெங்கே..?

-2005

# வீணை

வீணையும் பாவையும்
ஓரிடத்தில் சங்கமம்
இசையறிந்தவன் மீட்டினால்
இசையின் நர்த்தனம்
இசைந்தவன் மீட்டினால்
அற்புத ராகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பேரவலம்

கங்குல் கிழித்தொரு
கதிரொளிதான் பாயவில்லை
எங்கள் வானிலின்னும்
இருள்கறைதான் தேயவில்லை
அனர்த்தங்கள் தொடர்கின்றது
அலறல் சத்தம் கேட்கின்றது...

மக்களை மீட்பதென்று
மரணத்தை விதைக்கின்றார்
அறுவடையும் செய்கின்றார்
ஆலயங்கள் மட்டுமல்ல
மருத்துவ மனைகளிலும்
கழுகுகளின் எச்சங்கள்...

பீரங்கிகள் ஆவேசமாய்
மூச்சுவிடும் போதெல்லாம்
மூச்சிழப்பவர் பேச்சிழப்பவர்
எண்ணிலடங்கா... சாக்குருவியின்
சஞ்சலக் குரலிடையே
விம்மல் சத்தம்
விசும்பை இடிக்கிறது..!

இயந்திரப் பறவைகள்
இடிகளை இறக்க
காற்று கந்தகமாக
நாற்றுகளும் நலிந்தோரும்
வேற்றுமையின்றி நாளும்
வெந்தணலில் வீழ்கின்றார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருந்துக்கும் வல்லூறுக்கும்
பயந்தோடும் குஞ்சுகள்
கோழிகளின் சிறகுகளுள்
பதட்டமுடன் ஒளிவதுபோல்
நடுக்கமுறும் நம்மினமும்
வடுக்களோடு பதுங்குகுழிகளுள்..!

செழிப்பான நகரங்கள்
அழிவின் அசுரப்பாதங்களுள்
முழுமையாய் மிதிபடவும்
பெண்கள் மந்தி கை
மாலையாக வதைபடவும்
நரகமாய் நகருகின்றது
நம்மினத்தின் வாழ்வு...

அறுவடை நாட்களில்
அள்ளித்தரும் நன்செய்
வறுமையை தூர விலக்கி
விளைச்சலிடும் புன்செய்
அத்தனையும் நிர்மூலம்...

உலகத்திற்கே விருந்தோம்பல்
ஏற்றுமதி செய்த ஓரினம்...
கைகளை நீட்டுகின்றது
ஒருவேளை உணவிற்காய்..!

இருப்புக்கே இடமில்லை
என்றானபோது அங்கே
விருப்புகள் நிறைவேறுமா...
தீர்வுதான் வருமா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு காணாத
இழப்போடு இடப்பெயர்வு
போகுமிடமெல்லாம்
பேய்களின் நர்த்தனம்...
கூர்நகங்களின் பிராண்டல்...
குருதியொழுக ஒழுக
ஓடியோடி இளைத்தவர்...
ஒதுங்கவோர் இடமின்றி
பரிதவிக்க உலகம்
பூனைபோல் விழிமூடி..!

-2009

## கண்ணீர்

சொல்ல முடியாச் சோகத்தில்
நாம் சோரும் பொழுதில்
சொல்லாமலே ஓடி வரும்...
மனசின் சுமைகளை
அடித்துக் கொண்டே செல்லும்
மகத்தான நதி..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதவன்

கீழ்வானக் கடலினிலே
நீராடியே மெல்லக்
கிரணங்களைப் பாய்ச்சுகின்ற
ஞாயிறின் வருகையினால்
ஞாலம் உவகையுறும்.

உயர்திணைகளுக்கு மட்டுமல்ல
அஃறிணைகளுக்கும் அவனின்
வரவானது அவசியமே.

இந்தச் சூரியச்சிலந்தி
வலை பின்னாவிடில்
உயிர்கள் ஊனமாகும்
பயிர்கள் கருகிவிடும்.

சூரியத்தேவனிடம் பாலருந்தாவிடில்
சூன்யமாகிவிடும் வாழ்வு
நலிந்துபோகும் எலும்பு
மெலிந்துபோகும் மேனி.

அங்கங்கள் என்றென்றும்
தங்கங்களாய் மின்னுவதற்கு
பகலவனிடம் நாம்
பருகிடுவோம் ஒளியை.

வறுமை வதைத்தாலும்
வெறுமை கூடாரமடித்தாலும்
கருப்பு மனிதர்களின்
இருப்பின் நீளத்திற்கு
உறுதுணையானவன் உதயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியோதயப்பூ பூக்காவிடில்
சந்தோஷப் பூ தான்
பூமியில் பூக்குமா..?

வானப் பொய்கையில்
ஆகாயத்தாமரை பூக்கவே
பூமியாம் தடாகத்திலும்
பூக்கும் தாமரைகள்,

இந்துகூட இரவியிடம்
இரவல்தான் வாங்குகின்றாள்
அறவிட முடியாக் கடனை
ஆதவனும் வழங்குகின்றான்,

மாலைநேரத்தில் மாவீரன்
குருதியில் குளித்தபடியே
மரணத்தின் வாசலிலே
ராத்திரி நங்கையோ
ரகசியமாய் ஏந்துகின்றாளே..!

களத்தில் காயம்பட்ட
கதிரவனும் இருளின்
ஒத்தடங்களினால் மீண்டும்
புத்துயிர்ப்போடு புறப்படுகின்றான்,

தமிழர் திருநாளாம்
உழவர் பெருநாளில்
அவனுக்காய்ப் பொங்கலிட்டு
புளகிதமுறுவோம் நாம்..!

-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலுவிருக்கும் நினைவுகள்

நறுமணப் பூக்களின்
நாற்றம் சுமந்து
தென்றலின் வருடல்
முன்றலெங்கும் விரியும்
தென்னங் கீற்றுக்களிடையே
தெவிட்டா தெங்கிளநீர்
நுங்குகள் சுமக்கும் பனைகளின்
அங்கமெல்லாம் எமக்காய்
சங்கொலி கேட்கும் கோயிலில்
தங்கிடும் நிம்மதி நெஞ்சினில்
பொங்கிய வாழ்வுதனில்
தீக்குச்சி வீசிடவும்
தேய்கிறது என் தேசம்..!

தேனூறும் நற்கனிகளவை
தரும்சுவை நினைக்கையிலே
வாயூறும் எப்பொழுதும்
ஆறுகள் குளங்களவை
போகும் பாதையெலாம்
நன்செய் புன்செய்
வயல்களுக்கு வகிடெடுத்த
வரப்புகளை வணங்கியே
தலைசாய்க்கும் நெற்கதிர்கள்..!

வைகறைப் பறவைகளின்
பாட்டோசை கேட்டு
பள்ளியெழும் தெருக்கள்
தரவையில் மேய்ந்த தாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவை எதிர்பார்த்த
கன்றுகளின் கதறல்
பாலருந்தும் கன்றுகளை
உச்சி முகரும் பசுக்கள்..!

அந்திச் சூரியன் மேற்கில்
மஞ்சள் தடாகத்தில் குளியல்
பாற்குடங்கள் வழிந்து
பரவுதல் போல் பௌர்ணமியின்
ஒளிக்கீற்று பாரெல்லாம்
தங்கத்தை உருக்கியே
வார்த்து விட்டதுபோல்
தகதகக்கும் நட்சத்திரம்..!

பித்துப் பிடித்ததுபோல்
கத்தும் கடற்கரையில்
மொத்தமாய் கூடிடுவோம்
சுத்தமான மீனுக்காய்
விலைகள் பேசிடுவோம்
அலைகளை ரசித்தபடி..!

கோயில் திருவிழாக்கள்
கோலாகல மேளதாளம்
சின்னமேளம் பரதநாட்டியம்
விடிய விடிய கச்சேரி
விழித்திருக்கும் ஊர்
வாசல்தோறும் மகிழ்ச்சி..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பறவைகளாய்
பள்ளி சென்ற நாட்கள்
கள்ளமில்லாப் பருவம்
என்றென்றும் ஞாபகச்
சுவரில் கொலுவிருக்கும்...!

வீட்டுக் கோடியிலே
வேப்பமர நிழல்தனில்
அப்புவும் ஆச்சியும்
அன்னையும் தந்தையும்
உற்றாரும் உறவுகளும்
அத்தனையும் எங்கே
கனவுகளாய்ப் போயினவோ..?

- 2009

# உயிர்

பொல்லாத நோய் வந்து
புரையோடித் துளைக்கையிலே
போய்விடவே துடிக்கும்...
நில்லாத சுவரதுவும்
நிலையது தடுமாறும்போது
நிர்க்கதியாய் விட்டுச் செல்லும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்கையூர்

நாற்புறமும் கடலைகள் நாட்டியம் ஆடியபடியே
நங்கையாம் புங்கையூருக்கு சாமரம்தான் வீசிடவே
காற்புறத்தை நனைத்திடும் கடலையின் குறும்பை
கன்னியும் ரசித்திடுவாள் களிப்பினிலே மிதந்திடுவாள்,

கற்பகதருக்களாய் பனைகளோடு வளர் தென்னையும்
கனிதரும் மரங்களும் கடல்தரும் நற்கொடையுமாய்
அற்புதமாய் வயல்களில் விளையும் நெல்மணிகளும்
அன்னைபூமியிலே குவியும் அளவிலாச் செல்வங்களே,

வாடைதனில் வானத்தின் கதவுமெல்லத் திறந்திடவே
வகைதொகையாய் பாடிடும் மீனினமும் துள்ளியே
ஓடைகளில் விழுந்திடவும் நாரைகளும் கொக்குகளும்
ஒற்றைக்காலில் தவமிருந்து ஓடும்மீனைக் கொத்திடும்,

பூவினங்கள் விதவிதமாய்ப் பூத்தெங்கும் குலுங்கிடவும்
புதுமலரில் தேனருந்தி வண்டுகள் பாட்டிசைத்திடவும்
பூவினமாய் மெல்லியளார் குடங்களோடு சென்றிடவும்
பூக்களை மொய்த்திடும் வண்டுகளாய் இளைஞர்களும்,

அளப்பரிய செல்வம்மிகு வர்த்தகர்களாய் பூத்தவரும்
அகிலத்தின் வாசல்தோறும் வணிகத்தை நட்டவரும்
பழுதில்லாப் புகழதனைப் பாங்குடனே விதைத்தவரும்
பாவையாம் புங்கையூரின் மடிதனிலே தவழ்ந்தவரே,

பாவலரும் நாவலரும் பல்கலைகளையே கற்றவரும்
பைந்தமிழ் வளர்த்திடவே பகலிரவாய் உழைப்பவரும்
காவலரும் பூத்திட்ட கன்னித்தீவதுவாம் புங்கையூர்தான்
காவியத்தின் பக்கங்களில் பதிந்திட்ட பொன்னகராம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்சுரக்கும் ஆலயங்கள் அடுக்கடுக்காய் பலவுண்டு
அதிலிருந்து திரண்டுவரும் ஓங்காரத்தின் மணியோசை
இருளகற்றும் இனிமையுடன் இருகரம் கூப்பிவிட்டாலோ
இதயத்தில் சூழ்ந்திருக்கும் துன்பமெல்லாம் கரைந்துவிடும்.

கல்விக்கூடங்கள் பலவுண்டு கலாசாலைகள் அங்குண்டு
கற்றவரின் நாவிலிருந்தென்றும் கற்கண்டுச் சுவைபோலவே
நல்விருந்தாய் நமக்கன்றே நயமாகவே சொரிந்திருந்தவராய்
நல்லாசிரியர்கள் விளைந்ததுவும் நங்கையின் மடியிலேதான்.

கறவையினம் கரைந்துமே கன்றுகளுக்காய் மடிசுரக்கவே
கசிந்திடும் பாலிலிருந்து கசிந்திடும் துளிகள் எமக்காகவும்
பறவைகளின் பாட்டொலி பள்ளியெழுச்சியாய் காற்றினிலே
பாவிமனம் மீட்டுமதையே இசைமீட்டியே பார்க்கின்றதே.

தாயாகவே எமக்கெல்லாம் பாலூட்டியே நின்றவளுக்கு
தனயர்கள் ஒன்றாய்க்கூடி பூச்சூட்டிப் பார்க்கின்றோம்
சேய்களின் செயல்கண்டு சிந்தையெல்லாம் குளிர்கின்றாள்
செகமெங்கும் அவளுக்கென்று தொப்புள் கொடியுறவுகள் தான்..!

- 2011

# தென்றல்

நறுமணத்தை நாற்புறமும்
தெளிக்கின்ற தென்றல்
முன்றலில் முடங்கி
முணுமுணுப்பை வழியவிட்டு
காதலிபோல் மெய்தழுவும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாண்டு நினைவுகளில் ஐயா..!

புங்கையூர் என்றொரு பொன்னகர்
பொலிவுறும் ஆலயங்கள் மட்டுமல்ல
எங்கெதிலும் விதைபோல் முட்டிமோதி
விருட்சமாகும் மைந்தர்களின் தாய்பூமி
அங்கேபூத்த கல்விமான்கள் செல்வர்கள்
அகிலமெங்கும் ஒளியேற்றுகின்றார் அந்நகரில்
மங்காத புகழ்பூத்திருந்த நற்குடியிலே
மகிமையுள்ள இராமலிங்கம் அவதரித்தாரே...

நெஞ்சமதில் வஞ்சமின்மை உந்தனது
நினைவுகளில் பொதுவுடமை பூத்திருக்கும்
வஞ்சமில்லா உன்னுருவம் கண்டுவிட்டால்
வருகின்ற பகைகூட விலகியோடுமே
தஞ்சமென உனைத்தேடி வருவோர்க்கெல்லாம்
தாராளமாய் கர்ணன்போல் வாரிவழங்குவாய்
அஞ்சாமை உன்னோடு உடன்பிறந்தது
அதிகாரம் செய்வோரிடம் பணியமறுப்பாய்..!

பத்தாண்டுகள் சென்றனவா உன்னைநாம்
நூற்றாண்டுகள் சென்றாலும் மறந்திடுவோமா
சொத்தாக குடும்பத்தின் சுடர்விளக்காய்
சோதரர்களையும் நேசிப்பவனாய் தோன்றினாய்
கத்தும் கடல்தாண்டியே மலாயாவிலே
கனிவோடு வாணிபத்திலும் ஈடுபட்டாய்
முத்துக்களாய் பெற்றோரை நேசித்தாய்
முப்பொழுதும் அவர்நாமமே பூஜித்தாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழித் திங்களது வரும்போது
மண்மாதா சிலிர்த்து மகிழ்ந்திடுவாள்
மார்கழித் திங்களொன்று வந்ததன்று
மழை மேகம் நிரந்தரமாய் எம்விழிகளிலே
பார்போற்றும் எந்தை விரைந்தன்று
பரமனடி சென்றதுவும் மார்கழியிலே
பரமனுக்கு அந்நாளும் சிறந்ததென்று
பாரெங்கும் ஆலயங்களில் ஆராதனைகள்..!

பொன்னோ பொருளோ பெரிதல்லவே
பிள்ளைகளே யான்பெற்ற செல்வமென்பாய்
கண்ணாக மக்களையும் நேசித்தாய்
கனிவோடு மனையாளையும் அரவணைத்தாய்
விண்ணோடு வீற்றிருக்கும் இறைவனவன்
விரும்பியுனை அழைத்துவிட்ட காரணத்தால்
கண்ணீரைத் துடைத்துவிட்டு உந்தனது
கருணைமுகம் நினைக்கின்றோம் ஐயாவே..!

## மறுபிறவி

மறுபிறவி உண்டா..?
இறைவன் உண்மையெனில்
ஜனனம், மரணம் நிகழுமெனில்
மறுபிறவி நிகழாதா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம்

இந்த வானம்
உப்புநீரை உறிஞ்சி
நன்னீரையே நானிலத்திற்கு
நயமாக வழங்குவதனால்
தியாகிகளைப் போலவே
தொடமுடியாத தூரம்.

வானத்தின் கஜானா திறக்காவிடில்
வையத்தின் பசிதான் தீருமா..?
வானமொரு வள்ளல்.

மழையெனும் குழந்தையை
மண்ணுக்கு வழங்கிவிட
முனகிடும் கருவறை.

இடி மின்னல் உரசிடும்போது
போர்க்களம்.

நிலவு நட்சத்திரம்
மலர்கிறபோது தொட்டில்
மலராதபோது மயானம்.

சிறகுகள் விரிகின்ற பறவைகளின்
சுதந்திர பூமி.

விஞ்ஞானத்தின் பாதமும்
மெஞ்ஞானத்தின் விழிகளும்
கவிஞர்களின் கற்பனையும்
ஊடுருவுமிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயசூரியன் வானில்
எழுவதும் விழுவதும்
எந்நாளும் நிகழ்வதனால்
மானுடவாழ்வின் பிம்பம்,

இந்த மனையின் விசித்திரம்
இரவுநேர விளக்கு பிரகாசிக்க
பகல் நேர விளக்கு அதை
தூண்டிவிட வேண்டும்,

இதன் விலாசத்தை
விஞ்ஞானம் விளம்பினாலும்
விசாலத்தை விளம்பிடல் எளிதாகுமா..?

-2005

# இலையுதிர்காலம்

ஞானோபதேசம் எமக்களிக்கும்
இலையுதிர்கால மரங்கள்
முதுமையையும் மரணத்தையும்
முன்மொழிகின்றன..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல்

பொழுதெல்லாம் வியர்வைசிந்தி
புவிவாழ உழைத்திருந்தோர்
பொன்னகை கிடைத்ததுபோல்
புன்னகைக்கும் திருநாளதுவாம்..!

மண்மிசை ஆதவன் தோன்ற
மண்பானையில் பொங்கல் வழிய
கண்குளிர்ந்த காலங்க ளின்று
கனவாகிப் போனதுவோ..?

முற்றத்தில் முறுவல் பூக்க
சுற்றத்தார் பொங்கல் பரிமாற
பற்றோடு ருசித்திட்ட காலம்
பார்தனில் மீண்டும் வருமோ..?

கனவெல்லாம் நனவாய் மாற
கதிர் கிழிக்கும் திசையினிலே
பொங்கலிடும் திருநாள் மலரும்
புலராத வானமொருநாள் புலரும்..!

- 2004

## புன்னகை

வாழ்வென்பது
பொன்னும் பொருளுமல்ல
நாளும் மலருகின்ற
பூக்களின் புன்னகை..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணியம்மை

ஆழ்கடலில் ஓரமதில் அமர்ந்திருக்கும் நாயகியவள்
சூழ்கலி தீர்க்கவென சுற்றுகின்ற - ஏழாற்றுப்
பிரிவுதனை தாண்டிவரும் பக்தர்களின் குறையறிந்து
பரிவோடு அருளிடுவாள் பார்வதி.

அன்னையின் பரிபாலனத்தை அளத்தல் எளிதன்று
மண்ணை மட்டுமன்றி மலர்விழியால் - விண்ணையும்
மற்றுமுள அண்டங்களையும் இடரேதும் வாராமல்
பற்றோடு காப்பவளே பரமேஸ்வரி.

நோயுற்றவர் வந்துமே நொந்தங்கே அழுதிட்டால்
நயினை நாகேஸ்வரி மருந்தாவாள் - பாயில்
விழுந்தவர் பங்கய விழிகளின் பார்வையினாலேயே
எழுந்தே நிற்பர் ஏற்றமுடன்.

பழித்திடுவோரை பக்குவமாய் பொறுத்திருந்து ஓர்நாள்
அழித்திடுவாள் அவனியைக் காத்து - ஒழித்திடுவாள்
அநீதியை அதர்மத்தை அடியோடு தகர்த்தெறிந்தே
நீதியை நிமிர்த்திடுவாள் நிலத்தில்.

அருள்வடிவை ஒளியுருவை அகிலமதின் தாயவளை
மருளற்ற மனமதனை வழங்கியே - இருளற்ற
வாழ்வுதனை இப்புவியில் தருகவென கரங்கூப்பியே
தொழுதால் துன்பம் தொலையும்.

கிரகங்களின் முற்றுகையுள் அவதியுறும் மாந்தர்
இரவுபகல் இருவினையால் உழன்று - வரமளிக்கும்
வண்ணமயில் திருவடியே சரணமென்று துதித்தால்
மண்டிய வினைகள் மடியும்.

- 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வோதயத் தொண்டர் திருநாவுக்கரசு

ஓராண்டு மறைந்து போனதையா
இவ்வுலகை விட்டு ஒளிவிலகி
ஓராண்டு மறைந்து போனதையா,

ஓராண்டு ஈராண்டாய் மாறி
நூறாண்டு கரைந்து சென்றாலும்
ஆறாது ஆறாது அந்தரணம் - நாம்
அழுதாலும் குறையாது மனசின்கனம்.

மாலைகளுக்குள்ளே யொரு வாசமானாய்
காலைகளில் மக்களுக்கோர் நேசமானாய்
பாராண்ட உன்கொற்றம் மறையாது - அதில்
பதிவான தடமென்றும் அழியாது,

ஊருக்குள் உனக்கொரு ராஜாங்கம்
பாருக்குள் புகழ் பூத்த சர்வோதயம்
திருவின் புகழோ திசையெங்கும் பரவ
திங்களின் ஒளிக்கீற்றாய் விரிந்துமே விரவ,

மணமாலை கொண்டதில்லை உன்தோள்கள்
புகழ்மாலை கொண்டனவே உன்தோள்கள்
ஊராரின் உள்ளங்களில் கோயில்கொண்டாய்
உயர்வான சிந்தனையால் கொலுவிருந்தாய்.

சீராகச் செந்தமிழை நீயாண்டாய்
சிறப்பாகச் சேவைசெய்தே நீ மாண்டாய்
சிரித்திருந்த செந்தமிழ்த்தாய் அழுகின்றாளே
செல்லமகன் வரவையெண்ணி வாழ்கின்றாளே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔடதம்

இதயக் கதவை பூட்டியே
வைத்துவிட்டு தட்டுகின்றார்கள்
தெய்வத்தின் கதவுகளை,

பள்ளத்தில் நீர்போல்
கள்ளமில்லா உள்ளத்தில்
வாழ்பவனே இறைவன்,

வலியுடன் மக்கள்
எங்கும் தவிக்கையிலே
மாலைகளுக்காய் அலையும்
தலைவர்கள்,

நோயுற்ற மானுடம்
நசிவுற்றுப் போனாலும்
கசிவற்ற அரசியல்,

எங்கெதிலும் தன்னலம்
தலைவிரித்தாட
என்றென்றும் பூமியை
விட்டகலாத நோய்கள்,

பூமியில் புரையோடிய
புண்களுக்கெல்லாம்
விரைவாய் கிடைக்குமா
ஔடதம்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியெங்கும் புதையலாய்
இயற்கை அதை
செயற்கையால் சிதைக்கின்றான்
மனிதன்,

நீதி அநீதி
உண்மை பொய்மை
சேர்ந்த கலவையே உலகு
சிற்பியாய் இறைவன்..!

- 2007

## சலவைக்காரன்

காலமெனும் சலவைக்காரனின் கரங்களினால்
அடித்துத் துவைக்கப்பட்டு
கசக்கிப் பிழியப்பட்டு
கந்தலாகி விடுவோம் ஓர் நாள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மான்கள்

ஜேர்மனியில் நெடுஞ்சாலைகளின்
இருமருங்கிலும் நெடிதுயர்ந்த
மரங்கள் அங்கங்கே
அடர்ந்த காடுகளாய்
அவைதான் மான்களின் மனை
அங்கே மான்களிணையோடு...

இயற்கையின் பாய்விரிப்பில்
வாழ்வாதாரம் நிறைந்திருக்க
மகிழ்வோடு மான்கள்
இங்கிருக்கும் உணவை
தேவையின்றி திருடுவதுமில்லை
பதுக்கி வைத்து யாரும்
லாபம் தேடுவதுமில்லை
பசுமையான காடுகளென்றும்
பொய்மையும் புரட்டும்
புகமுடியாத ஓரிடம்...

இந்த மான்கள்தம்
உறவுகளோடு உலாவரவும்
அன்பாய் குலவிடவும்
ஒருபக்கமிருந்து வேகமாய்
மறுபக்கம் பாய்கையிலே
விபத்தில் சிக்குவதுமுண்டு...

மான்களுக்கான பாதுகாப்பு
வாகனங்களுக்கான வேகத்தடை
வீதியெங்கும் பளிச்சிட்டாலும்
விபத்துக்கள் நிகழ்கின்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராக் காலங்களில்
வாகனங்கள் உமிழும்
வெளிச்சத்தின் வீரியத்தால்
மான்கள் மயங்கிடவே
மரணக்குழிகளும்
திறக்கப்படுகின்றது...

கடுங்குளிர் காலங்களில்
மனைகளுக்குள் நாம்
குளிரை விரட்ட
சூடேற்றிகளின் காதுகளைத்
திருகுவோம் இந்த
மான்கள்..?

இறைவனின் படைப்பினில்
எத்தனை அதிசயம்
அத்தனையிலும் அர்த்தமுண்டு
மான்களின் தோல்
அவைகளுக்கான குளிராடை..!

இந்த ஐந்தறிவு ஜீவனை
ஆறறிவு ஜீவன்கள்
உண்டு ஏப்பமிட
அவ்வப்போது நினைப்பதுண்டு
ஆயினுமென்ன மனிதரிலும்
மான்களே மேலென்பேன்
அவை உயிர்வதை செய்வதுமில்லை
துரோகம் இழைப்பதுமில்லை...

மனிதன்
மானாய் கவரிமானாய்
வாழ்வதென்பதில் அர்த்தமுண்டு..!
பொய்மானாய் வாழுகின்ற
போலிகளே நிறையவுண்டு..!

-2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புக் காற்றும் உரித்தான உறவுகளும்...

தொப்புள் கொடியுறவு
இரண்டல்ல அவைமூன்று
தாய் சேய் தாய்மண்
தொப்புள் கொடியுறவை
நாம் துண்டித்தாலும்
உப்புக் காற்றும் உறவுகளும்
எம் உயிர்களுக்குள்
ஒட்டிக் கிடக்கின்றன.

கோடை கொளுத்துகிற பூமிதான்
கொளுத்தட்டுமே வாடை
தரும் வளத்தைக் கொண்டு
ஓடைகளில் நீரைத்தேக்கி
ஒழிந்தவரின் வாழ்வுக்கோர்
வழிசமைப்போம் வாரீர்..!

காணிகளைப் பேணியங்கே
தூர்ந்தே கிடக்கின்ற
கேணிகளைக் கிண்டி
கட்டற்ற கால்நடைகளின்
தீராத தாகத்தை தீர்ப்போம்..!

புங்கையூரின் வடகடலிலிருந்து
ஒரு சிறுதுளி உடைந்து விழுந்து
சில்லென்று சிற்றாடை கட்டி
கள்ளியாறு சோளனோடையெனும்
நாமம் சூடி நகர்ந்தன... அதில்
கள்ளியாறு கருத்தரித்து
சிசு வொன்றை ஈன்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே உப்புக்களியெனும்
நாமத்தோடு ஓடிவரவும்
நாமதை நாடிச்சென்றே
நீச்சலடித்து குதூகலித்ததும்
அழியாத கோலங்களாய்
மனமெனும் முற்றத்திலே...

கடலின் வாரிசு என்பதால்
தன் உடலில் உப்பை
அப்பியபடியே கிடந்தது
அங்கே உப்புக்காற்று
உலாவந்து கொக்குகள்
கோட்டான் குருவிகளோடு
குசலம் விசாரிக்கும்..!

அன்றைய நாட்களில்
அவற்றின் அழகையெல்லாம்
அள்ளிப் பருகியிருக்கிறேன்
எழிலை என் விழிகளுள்
பொத்தி வைத்திருக்கின்றேன்,

எமது நினைவின் ஜன்னல்களை
மெல்லத் திறந்து எம்
நெஞ்சுள் கொலுவிருக்கும்
உத்தம புருசர்களை
ஒரு வினாடி உற்றுநோக்குவோம்
அன்று புங்கையூரும்
யாழ்நகரும் ஒன்றுக்கொன்று
கைகுலுக்கிக் கொள்ள
பாலம் அமைத்த வாணர்
அவரே அம்பலவாணர்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்தின் வழியில்
குடிசையிலிருந்தொரு குயில்
குரலெடுத்துப் பாடியது
அக்கானக் குயில்தான்
தொண்டர் திருநாவுக்கரசு
அதன் அமுத தூறலில்
புங்கையூர் மட்டுமல்லாமல்
புவியெல்லாம் நனைந்தது..!

அந்த நதியின் பிரவாகத்தால்
பாலையாய் கிடந்த கிராமம்
மெல்ல மெல்ல சோலையானது
அதுகண்ட காலனுக்கு
மூக்கு வேர்த்தது கடிதே சென்று
அவரின் நெஞ்சக்கூட்டின்
மின்சார இணைப்பை துண்டித்தான்..!

புங்கையூர் இருளுள் அமிழ்ந்தது
விடிந்தும்கூட உதயசூரியன்
எழவேயில்லை... முடிவில்
கேரதீவு மயானத்தில் ஒளிச்சுடரை
தீச்சுடர் சுட்டது ஆச்சரியம்...
ஒளிச்சுடரையே தீச்சுடர் சுடுமா..?
சுட்டது..! அது எம் நெஞ்சையும்
செந்தீயாய் சுட்டது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய செம்மல் இந்து மகேஷ்

மகேஸ்வரன் என்றொரு
மகத்தான திருநாமம்
இந்துமகேஸ் என்பதுவும்
இன்னொரு பெயராகும்,

அந்த மகேஸ்வரனுக்கு
சிரசினில் பெண்களிருவர்
கங்கையும், பிறையும்..!
இந்த மகேஸ்வரனுக்கும்
இருபக்கங்களிலும் இருவர்
ஒருத்தி உயிரான இந்து
இன்னொருத்தி பயிரான பூவரசு..!

ஆணும், பெண்ணும் சமத்துவம்
அர்த்த நாரீஸ்வரம்..!
பெயருக்குள்ளேயே சமத்துவம்
இந்து மகேஸ்..!

நதி நடக்கும் பாதையெல்லாம்
நஞ்சை புஞ்சை செழிக்கும்
இந்நதியின் பிரவாகத்தால்
நற்றமிழின் வளர்ச்சியும்
நம்மினத்தின் எழுச்சியும்,

நிலத்தில் மட்டுமல்ல
புலத்திலும் சாதனைகள்
வேரோடிய பூவரசின் கிளைகளிலிருந்து
எழுத்துக்களை எச்சமிடும் பறவைகள்
திசையெங்கும் பறக்கின்றன..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிய தோற்றம் தான்
எழுத்துக்களில் வல்லினத்தோடு
மெல்ல, மெல்ல இடையினம்
நடைபயிலும் நளினத்தோடு..!

இலக்கியம் படைப்பதில்
சிகரமாய்த் திகழ்ந்ததனால்
இலக்கியச் செம்மலாய்
இவரெங்கும் அறிமுகம்..!

தளம்பாத நிறைகுடம்
விரும்பாது விளம்பரம்
உறங்காத எழுத்துப்பணி
உயர்வான சிந்தனைகள்.

இவரின் படைப்புக்களில்
தென்றலின் வருடல்
நகையவிழ்க்கும் நகைச்சுவை
தத்துவத்தின் சதிராடல்
ஆன்மீகத்தின் நறுமணம்..!

பொன்னிறப் பூக்கள்
பூவரசுக்கு மட்டுமல்ல
பொன்னான உள்ளம்
பூவரசின் தந்தைக்கும்..!

எம் வானத்து வெண்ணிலவு
என்றுமே தேயாத பொன்னிலவு
எழுதுகோல்கள் ஏற்றமுற ஏணியாகவும்
அவர்கள் கரைகாணத் தோணியாகவும்.

'இதயத்தில்' அன்றெழுதி
உதயத்தை எமக்களித்த இதயம்
புன்னகையில் நனைந்து புளகமுற
இறைவன் பூக்களைத் தூவட்டும்..!

* 'பூவரசு' சஞ்சிகை ஆசிரியர் இந்து மகேஷ்.

* 'இதயம்' சஞ்சிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரையாள்..!

வனப்புகள் மிளிரும் வஞ்சியாகி
வளையல்கள் சிணுங்கவே
கரங்கள் மெல்ல வீசியபடியே
கண்கள் சிமிட்டும் கன்னியே..!

நித்திரையில் கிடந்து தினம்
கனவினிலே மிதக்கும் எமை
முத்திரைகள் பதித்து முகர்ந்து
மெல்ல விழிக்க வைத்து
சித்திரையாள் வாசலுக்கு வந்தேனென்று
சிரிப்பு திர்க்கும் சிற்றிடையாளே..!

வருகின்ற ஆண்டிலாவது எம்
வாசல்களில் கோலமிடுவாய் வஞ்சியே
வாழ்வுக்காய் ஏங்குவோர்க் கென்றும்
வழியொன்றைக் காட்டி நிற்பாய்
தருகின்ற நிம்மதியை நிரந்தரமாய்
தமிழர்களின் இல்லங்களில் ஊன்றிடுவாய்..!

இல்லங்களில் நிம்மதி நிரந்தரமானால்
உள்ளங்களில் உனைவைத்துப் போற்றிடுவோம்
இனிவரும் ஆண்டுகளில் உன்வரவை
வாசலில் எதிர்பார்த்துக் கோலமிடுவோம்..!

- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனி

1984 புரட்டாதி 24ம் நாள்
சொல்லிலடங்கா சோகத்தோடு
இனம்புரியாப் பரிதவிப்போடு
இந்த தேசத்திற்குள்
சுவடுகளைப் பதிக்கின்றேன்...

தாய்போல் அரவணைத்து
தங்குமிடம், உணவு, உடை
அன்பளிப்பாய் அகதிப்பணம்
அளித்தது இந்நாடே..!

புதியதொரு சூழல்
புதிதான காலநிலை
புரியாத மொழி
புதுமையான ஒழுங்கமைப்பு
புதிதான முகங்கள்,

எங்கெதிலும் தூய்மை
சட்டங்களோ வாய்மை
சலவை செய்த கறுப்பாடையை
விரித்தாற்போல் தார்ச்சாலை...
அழகொளிரும் மனைகள்
பழகுவதற்கு இனிமைதரும்
ஜேர்மானியர்கள்...

வீதிகள் மட்டுமல்ல
வீதியோர மரங்களும் நேர்கோட்டில்
மனைகளும் அப்படியே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தாய்நாட்டில்
எனக்கு கிடைக்காதவையெல்லாம்
இங்கே கிடைத்தன...
சுதந்திரம், ஜனநாயகம்..!

பல்லாண்டுகள் கொழும்பில்
என் உழைப்பையெல்லாம்
முதலாளித்துவம் உறிஞ்சியது
மலையக அட்டைகள் போல்...
இங்கே ஓரளவுதான்...

எங்கே அனர்த்தங்களோ
எங்கே அழிவுகளோ,
அங்கே கைகள் நீளும்
வள்ளல்போல் அதுவே ஜேர்மனி..!

1983 ஆடித்திங்கள் கலவரத்தால்
ஓடியோடிக் களைத்த நான்
இளைப்பாற ஓரிடம் தேடினேன்
ஆதரவுக்கரம் நீட்டியது இந்நாடு..!

இந்தத் திருநாட்டை வணங்குகின்றேன்
எனக்கென்றும் தாய்நாடு
ஒன்றல்ல இரண்டாகும்..!

அகதி விண்ணப்பங்களின் துஷ்பிரயோகம்
வன்முறைகள் கவனிக்கப்படுவதால்
பல சத்திய விண்ணப்பங்களும்
நிராகரிக்கப்படுவதுண்டு..!

- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகறை

சிறகடித்து சேவல் கூவுகின்றது
சிவன்கோயில் மணியோசையுடன் சேர்ந்தே
கிராஞ்சியம்பதி முருகனின் மணியோசையும்
காற்றின் சிறகுகளில் மிதந்து
ஊரின் காதுகளில் ஓங்கார
நாதத்தின் மங்கலத்தை இறைக்க
உன்னதமான விடியலுக்கான முன்னுரையை
பறவைகள் தம் குரல்களினால் எழுதுகின்றன..!

பூபாளத்தின் முதல் பாடலாய்
மீண்டும் சேவல்தான் கூவுகின்றது
எதிரெதிராய் சேவல்கள் தம் பணியை
தவறாமல் செய்யத் தொடங்க
புதியதொரு நாளுக்கான பிரசவத்தை
பறவைகள் தம் மொழிகளினால் அறிவிக்கின்றன..!

சங்கீதக் கச்சேரி சடுதியாக
கரகரப்பு சிறகசைப்பு கைகலப்பு
அத்தனையும் பள்ளியெழுச்சிப் பாடல்களாய்
மொத்தமாய் இசைமழை வழிந்து
மேதினியைத் தாலாட்ட கதிரவனும்
விரைவாய் இறங்கி கீழ்வானில்
வெள்ளை யடிக்கத் தொடங்குகின்றான்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனி கம்நகர் காமாட்சி

வயல் வெளியின் நடுவினிலே தானமர்ந்தவள்
வளையல்கள் குலுங்கிடவும் அருள் சுரப்பவள்
கயல்விழிகள் கொண்டிலங்கும் மாரியவளின்
கருணைவிழி திறந்துவிட்டால் அக்கணமே
புயலாக எமையுலுப்பும் துன்பமெலாம்
பொடிப்பொடியாய் பூமிதனில் புதைந்து விடாதா..?
அயலமர்ந்து நெஞ்சுருகத் தொழுது விட்டால்
அழிவுதரும் தீவினைகள் தொலைந்து விடாதா..?

புலம்பெயர்ந்த மண்ணிலொரு புதையலாகினாள்
பூந்தமிழர் உள்ளங்களிலும் கோயிலாகினாள்
நலமிழந்த மக்களுக்காய் இறங்கிவந்தே
நலங்காண வளங்காண யுகமெல்லாம்
விழித்திருக்கும் தாயவளின் நாமங்களையே
விழிமூடி தஞ்சமென்றே உச்சரித்தால்
அழியாத செல்வங்களையே எந்நாளுமே
அழித்திருப்பாள் காமாட்சி அவனியிலே..!

தேர்வலம் வரும்போது அன்னையவள்
தென்றலாய் பக்தர்களுக்கென்றும் முன்றலிலே
ஊர்வலம் வரும்போது உமையவள்
புயலாக கொடியவருக்கென்றும் மன்றினிலே
நேர்வலம் நிற்கின்ற மானிடர்களும்
நிமலனடி சேர்ந்திருக்க கரங்கொடுப்பாளே
பார்வலம் எந்நேரமும் பவனிவரும்
பரமனின் நாயகியைத் தொழுதிருப்போமே...!

-2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதம்

இறைவனின் கருணையினால்
மதங்கள் தோற்றுவிக்கப்பட்டன
மனித விழுமியங்களைக் காப்பதற்காகவும்
நடத்திச் செல்வதற்காகவும்...

பிரபஞ்சத்தின் மூலையெல்லாம்
மதமெனும் போர்வைக்குள்
வக்கிரங்களும் மறைந்துகொண்டு
மண்ணிலே குருதியை ஆறாகவே
பெருக்கெடுக்கச் செய்கின்றன..!

அரசியல்வாதிகளும் மதமெனும்
மந்திரக் கயிறை வீசியெறிந்து
மக்களை தம்வசம் இழுத்து
தம்மாசனத்தை தக்கவைத்துக் கொள்வதுண்டு...

மதபோதகர்களின் தவறான வழிநடத்தலால்
பூமிப்பந்தின் ஓரமெல்லாம்
தீப்பிடிக்கத் தொடங்கிவிட்டது...

மதமெனும் பேர்களினால்
மானுடத்தைச் சிதைப்பவர்
அறியாமையினால் மட்டுமல்ல
அசுரத்தனத்தின் ஆணிவேர்களினாலும்...

இந்த ஆயுதத்தைக் கையிலெடுத்தவன்
மண்ணை மீட்கப் புறப்பட்டவனாம்
சமயத்தை மறுத்தலித்துச் சத்தியத்தையும்
மனிதத்தையும் கையிலெடுத்தவன் சாத்தானாம்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமெனும் முகமூடிக்குள்
தம்மை மறைத்துக் கொண்டே
புனித ஸ்தலங்களுக்குள்ளேயே
நச்சரவங்கள் புகுந்துகொள்ள
ஓரினச்சேர்க்கை, கற்பழிப்பு,
சிறுவர் துஷ்பிரயோகம்...

வர்க்க பேதங்களையும் வருணங்களையும்
வகுத்தது இறைவனல்ல மனிதனாகும்..!
அவர்கள் தம் சுயநல வேர்களுக்கு
நாளும் நீர்ப்பாய்ச்சுவதற்காக...

பொய்மைத் திரைக்குள்
போலிச் சடங்குகளை நெய்து
மூளைச் சலவைக்குள்
மக்களை மூழ்கடிப்பதெல்லாம்
உண்டியல்களை நிரப்புவதற்காக...

மதவெறி தலைக்கேற திசையெங்கும்
மனிதத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு
மா விலங்குகளாய் அனர்த்தங்களை விளைவித்து
குருதி வாய்க்காலைத் திறந்து
அங்கங்கே இறையில்லங்களையும் இடிக்கின்றனர்..!

- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவறை

இலவசமாய்த் தங்கியிருக்கலாம்
வாடகை வசூலிக்கப்படமாட்டாது
நாற்புறச் சுவரெழுந்த கோட்டை
பத்துத் திங்கள் மட்டுமே அனுமதி
தாயின் கருவறைக் கோயில்..!

பசியென்று கேட்காமலே
ஊட்டச் சத்தான உணவு
நோயெதிர்ப்புச் சக்தியோடு
இடையூறற்ற நிம்மதியான தூக்கம்
நீச்சலடிக்கவொரு தடாகம்..!

இடித்தாலும், உதைத்தாலும்
இளநகையோடு உடல் வருடி
புளகிதத்தில் மிதந்து மிதந்து
பூரிப்பில் நனைந்திருக்கும் தாய்...

இந்த மனைபோல் எவருக்கும்
எந்த மனையும் வாய்ப்பதில்லையே..!
இதையறிந்துவிட்ட காரணத்தால் தானா
கருவறையிலிருந்து காசினிக்கு வரும்போது
கவின்மழலை அழுகையோடு..?

அம்மனையிலிருந்து வெளியேறியதும்
ஆசைகளும் நிராசைகளும் கவலைகளும்
கண்ணீரும் மழலைக்கு நிரந்தரமாய்..?
அத்தனையும் தாண்டி நடைபயில
எதிர்நீச்சல் இயற்கையாய்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மத்தின் பக்கம் ...

அணிசேரா நாடுகளின் தலைமை நீ
அணியணியாய் காப்பியங்கள் தந்ததும் நீ
எமக்கென்று தாய்நாடு இல்லையெனிலும்
எந்தையர் நாடாகவே நீயென்றும்
வந்தேறு குடிகளா நாமென்றும்..?
வழிமொழிவாய் பாரத தேசமே..!

முந்தைக் குலத்தின் மூத்தகுடிகள்
எந்தையும் தாயும் இணைந்து
சிந்தை குளிர்ந்திருந்த தேசம்விட்டு
வந்த தேசங்களிலும் அகதிகளாய்..!

பட்டொளி வீசியபடி பறந்து
சர்வதேச அரங்கினில் நிமிர்ந்து
எங்கெதிலும் சாதனைகள் நிகழ்த்தும்
இந்தியத் தேசியப் பதாகைக்கு
இழுக்கினைத் தேடித்தருவோரை இனங்கண்டு
உன் சுவடுகளைப் பதித்துவிடு..!

காந்தியக் கொள்கைகளினால் இந்தியா
காலமெல்லாம் தலை நிமிர்ந்து நிற்கட்டும்..!
குருதியின் சுவடுகளில் பயணிக்கும்
கொள்கையற்ற நாடுகளுடன் கைகுலுக்காமல்
பரிதியின் வெளிச்சம் பாய்வதற்கு
பக்கபலமாய் நிற்பதுதான் தர்மமாகும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய மயானம்

ஐரோப்பிய மயானம்
அழகிய சோலைகளாய்
பக்கமெல்லாம் நடுகற்களாய்
நிசப்தத்தை அரவணைத்து
நிம்மதியின் உறைவிடமாய்..!

சுத்தம் எங்கெதிலும்
சுகநலம் விசாரித்து
சுகந்தத்தை வாரியிறைக்கும்
அசுத்தம் அடையாளமின்றி
மொத்தமாய் துடைக்கப்பட்டிருக்கும்..!

நம் நாட்டின்
மயானங்களின் வாசல்தனில்
பிணநொடியும் பீதியும்
கைகோர்த்துக் காத்திருக்கும்...
இந்த நாடுகளிலோ
அமைதியும் யேசுவின் குருசும்
எமக்கு வந்தனமளிக்கும்..!

இங்கே இரங்கற்பா
இசைப்பாக்களாய் தேவார, திருவாசகம்
இசைத்தாலும் எம்மவரில்
சிலர் ஊர்க்குருவியாய் எப்பொழுதும்..!

இங்கேயும் உள்ளே நுழைகையில்
சுடலை ஞானம் சுடர்விடும்
வெளியேறுகையில் உள்ளத்துள்
அந்தகார இருள் கவியும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயானத்தில்
சில சதுரமீற்றர் நிலத்தை
ஐரோப்பியர் மொத்தமாகவோ
குத்தகைக்கோ வாங்கிவிடுவதுண்டு
உறவுகளின் தொடர்ச்சி
ஓரிடத்தில் சங்கமிக்க..!

இவர்கள்
மயானம் விட்டகன்றாலும்
தம் உறவுகள் நிரந்தரமாய்
உறங்குமிடத்தை மறப்பதுமில்லை..!

மாதத்தில் இருமுறையாவது
மயானம் சென்று மனமுருகி
செடிப் பூக்களையும்
கண்ணீர்ப் பூக்களையும்
காணிக்கையாக்குவர்..!

நேரம் தவறாத செயல்
ஐரோப்பியரின் வரம்
நேரம் தவறுதல் என்பது
எமக்கான சாபம்...
கொடுக்கப்பட்ட நேரமதில்
உடல் உறங்கும் பெட்டியது
ஓசையின்றி மூடப்படும்
ஓசையுடன் எம்மக்கள்..!

உறவுகளின் கதறல் மண்டபத்தின்
செவிப்பறைகளில் ஓங்கி ஒலிக்க
ஒருவிதமான சோகத்தின் பாரம்
இறக்கி வைக்க நேரமாகும்..!

-2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலையுதிர் காலம்

துச்சாதனனாய் மாறிடும் காற்று
துகிலுரிகின்றது மரங்களுக்கு
இலையுதிர் காலம்..!

காற்றின் முரட்டுக் கரங்களினால்
மேலாடையில் தொடங்கி...
ஐப்பசி திங்கள்...
உள்ளாடைகள் வரை
கார்த்திகை, மார்கழி...
களைந்தெறியப்படுகின்றன ஐரோப்பாவில்...!

பழுத்த இலைகளெல்லாம்
இறக்கை முளைத்தது போல்
உயரத்தில் பறப்பதும்
பள்ளத்தில் வீழ்வதுமாய்
மானிடர் வாழ்வுபோல்..!

காற்றெனும் யமனின் கரங்களில்
பழுத்த இலைகளோடு, பச்சைகளும்
பூமியெனும் புதைகுழிக்குள்..!

முற்றிலும் இலையுதிர்த்து
மீண்டும் துளிர்ப்பது போல்
நோயினால் மெலிந்தோரும்
வறுமையினால் நலிந்தோரும்
நலன்கள் மட்டுமல்லாமல்
வளங்களும் பெறுவதுண்டு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்புவியொரு பூஞ்சோலை..!

இத்தரை யெங்கும்
இருள் நீங்கும் நேரம்
புற்றரை யெங்கும்
பனித்துளிகளவை வைரங்களாய்...
கதிரோடி வருவான் - அதைக்
களவாடிச் செல்வான்,

பறவைகளின் சிறகோசை
அவை பாடும் பூபாளம்
பூக்களிலே தேன்துளிகள்
வண்டுகளின் ரீங்காரம்
பூஞ்சோலை, பூஞ்சோலை
இப்புவியொரு பூஞ்சோலை,

கரைகளுக்குள்ளே
கலகலப்பாயோடுகிற நதி
வளையல்கள் குலுங்க
ஆடுமொரு வஞ்சி
கரையோர நாணல்
கண்ணோரம் நாணமேற
அது தலைசாயும்,

பச்சை வண்ண ஆடை கட்டி
பருவப் பெண்ணின் வனப்போடு
பூமிமகள் பூத்துக் குலுங்குகின்றாள்
இப்புவியொரு பூஞ்சோலை..!

-2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ்

உண்டால் மட்டுமே
மதுவானது போதைதரும்
நாம் உண்ணாமலே
எண்ணியதும் போதைதரும் காமம்..!
இவைபோலவே என்றென்றும்
புகழுமொரு போதையே..!

புகழைத்தேடி அலைகின்ற மானுடம்
பொய் முகம் காட்டி நிற்கும்...
புகழதை எண்ணாமல்
புவியினிருள் துடைத்திருந்தால்
மெய்முகம் நிலைத்திருக்கும்..!

புகழின் சிகரமதில்
நாற்காலி போட்டமர்ந்திருக்கும்
நாயகர்களை எண்ணிவிடில்
பாதிவரைதான் உண்மை வீற்றிருக்கும்
மீதிவரையில் பொய்மையே கொலுவிருக்கும்..!

அநேக வரலாறு
பிணங்களின்மேல் நடந்துசென்றுதான்
புகழின் கொடிதனை நாட்டியது...
குருதியின் திட்டுக்கள்
வரலாற்றின் பக்கங்களில்
இன்னும் காயாமல் பிசுபிசுக்கின்றது..!

இந்த ராஜமாளிகைக்குள்
முன்கதவால் வருபவர்களுமுண்டு
பின்கதவால் வருபவர்களுமுண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழின் போதையது தலைக்கேறினால்
புத்தியது துருப்பிடித்துப் போக
சத்தியத்தின் பாதைகளை மறந்து
விளம்பரத்தின் துணையுடனே
விண்தொடவே விளைவான்
மண்தொடவே விழுவான்..!

இந்தப் போதையிலிருந்து விலகி
நின்பணி செய்திருப்பாய் - அதில்
உன்பணி உயர்வென்று உலகறிந்தால்
உன்புகழ் உன்வாசல் தேடி வரும்.

- 2013

## அழியாத சுவடுகள்

சுயநலமில்லாப் பொதுநலம்
கருவிழியின் ஈரம், கருணை
அர்ப்பணிப்பு தியாகம்
அத்தனையும் கூடுகட்டினால்
உன் உள்ளமொரு கோயில்
அழியாது உன் சுவடுகள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமி

அந்தக் கடலில்
எண்ணிலாப் படகுகளோடு
எழிலான கப்பலொன்றும் பயணிக்கின்றது
படகுகள் மட்டுமல்லாமல் அந்தக்
கப்பலும் தங்கத்தால்தான் தயாரிக்கப்பட்டதுவா..?

ஓ..! அந்த முற்றத்தில்
பொன்னிறப் பூக்களோடு
பொலிவான இன்னொரு பூ
பொன்னை யள்ளி வார்க்கின்றது...
மண்ணை யென்றும் ஈர்க்கின்றது..!

வானப் பூக்கள் வடிவென்றாலும்
வாசமில்லாப் பூக்களாகவே
தேனிலாப் பூக்களென்றாலும்
தேனிலவுக்கு இனிமையானவையாகவே..!

அங்கென்ன விழாவா..?
வானமெனும் வண்ண மாளிகை
அத்தனை அழகாய் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது
ஒளியுமிழும் மின்குமிழ்களாய் நட்சத்திரங்கள்
வண்ண விளக்காய் பௌர்ணமி..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமெனும் மாளிகையின்
சாரளங்களில் தொங்கவிடப்பட்ட
வெண்திரைச் சேலைகளையும்
கருத்திரைச் சேலைகளையும்
மெல்ல விலக்கிய நிலா
மெல்ல முகம் காட்ட
தென்றல் சாமரம் வீசுகின்றது..!

நிலாக் கிண்ணத்தில் வழியும்
மதுவை மாந்தி மாந்தி
வானத்திற்கும் பின்னிரவில் போதையேறிவிட
வாய்வழியே வழியவிடுகின்றது
சொட்டச் சொட்டாய் பனித்துளிகள்..!
விடிவெள்ளியின் அதிரடிக் தாக்குதலால்
விழாக்கோலமோ கலைக்கப்படுகின்றது
வானத்தின் முகம் வெளுக்கின்றது...

- 2011

## பனிக்கால வீதிகள்

வானத்தறியில் நெய்யப்பட்ட
பனிப்பூச் சேலைதனை
பூமி பூரிப்போடு அணிந்துகொள்ள
வாகனங்களோ சேற்றை வாரியிறைக்க
சகதிக்குள் கறுப்புக்கம்பள வீதிகள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்காட்டி

நாளுமொரு தாளது
நாட்காட்டியில் கிழிக்கப்படும் போது
என்ன நினைக்கின்றாய் தோழா...

நாட்களின் செலவினில் உன்
வாழ்க்கையும் செலவாகும்
அறிந்திடுவாய் தோழா..!

இனிவரும் நாட்களை ஒவ்வொன்றாக
செலவு தான் செய்திடுவாயா..?
இன்றைய நாளதின் வரவு தான்-
வாழ்க்கை வாழ்ந்து பார் தோழா..!

நேற்றய நாட்கள் இறந்தாலும்மென்ன...
இறக்காது உன்புகழ் தோழா..!

இப்புவியின் இருள் துடைக்க
உன் கரங்கள் நீண்டால்
அழியாது தடங்கள் தோழா...!

காலங்கள் உருண்டோடிச் செல்லலாம்
கோலங்கள் தலைகீழாய் மாறலாம்
கொள்கையில் மாற்றமில்லை தோழா...!

ஏதிலிகள் வாழ்வுக்கோர் வழிசமை
இளைத்தோரின் குடிசையிலே விளக்கேற்று..!
நாதியற்ற மக்களுக்கு நலஞ்சேர்
நட்டாற்றில் நிற்போர்க்கு கரங்கொடு
நானிலத்தில் உன்தடங்கள் அழிந்து விடாது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்மாசனம்

கூவிவரும் எறிகணைகள்
அக்கினியை உமிழ
வானிருந்து கழுகுகள்
ஓயாமல் எச்சமிட
மண்ணிருந்த யாவுமே
கருகிச் சாம்பலாயின..!

குண்டடிபட்டவர்கள்
குடல்கருகிச் செத்தவர்கள்
மொட்டுக்கள், பிஞ்சுகள், பூக்கள்
காய்கள், கனிகள்...

கோடரி வெட்டுப் போல்
உடல்பிளந்து கிடக்க
மருத்துவமின்றி மரணித்தவர்
எண்ணிலடங்கா எண்ணிக்கை...

கூட்டியள்ளிக் குப்பையாக
கொட்டினர் உடல்களை...
இரத்த தாகம் கொண்டல்லவோ
இயமனன்று அலைந்தானாம்..!

பிரசவிக்க காத்திருந்தவர்கள்
பிரசவித்த பஞ்சுமேனியர்
பஞ்சது கொஞ்சமுமின்றி
குருதியாறாய் வழிந்தோட
குற்றுயிராகி மூச்சிழந்தனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றலர்ந்த மலர்களாய்
மொட்டவிழ்ந்த சிட்டுகள்
குருதி பெருக்கெடுக்க
மாற்றாடை எதுவுமின்றி
தயக்கத்தோடு தத்தளித்து
மயக்கமுற்று வீழ்ந்தனர்..!

ஓரினத்தைக் காயப்படுத்தி
பிணத்தின்மீது நடந்துசென்று
கொடியேற்றியது ஓரினம்
ரணத்தின்மீது இன்னோரினம்..!

ஆயிரமாயிரம் அமுதவிழிகள்
அன்றழுத கண்ணீர்
உலகின் மனசாட்சியை
உலுப்பினாலும் உலகது
ஊமையாய் அன்றுபோலின்றும்..!

பல்லாயிரம் உயிர்களை
பலிகொடுத்த பின்னாலும்
பல்லாயிரம் மனிதர்களை
ஊனமாக்கிய பின்னாலும்
சமாதானம் தந்துவிட
சம்மதிக்காத சிம்மாசனம்..!

-2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் கருவறைக்குள்...

காற்றில் கத்தி வீசுகின்றன
வல்லரசுகள் தம் நலங்காக்க
பிறர் நலத்தை புறந்தள்ளி
பூமியின் புனிதம் கெடுகின்றது..!

அணுவாயுதக் கழிவுகள்
அழிவாயுதக் கழிவுகள்
பூமியின் கருவறைக்குள் திணிக்கப்பட
புயல், பூகம்பம், சுனாமி...

பூமியின் சிரசினில் அமிலம்
பூமியின் உடலெங்கும் புண்கள்
தாயவளின் பாதாதிகேசம் பற்றியெரிய
சேய்கள் எப்படித் தூங்குவர்..?

வெள்ளத்தின் அத்துமீறலில்
பல நாடுகள் நகரங்கள்
தண்ணீரில் மிதக்க
கண்ணீரில் மானுடம்..!

சர்வதேச மாநாடுகள்
பூமியின் காவலர்களால்...
தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது
பூமியை கரையாமல்
காப்பாற்றுவதற்காக..!

- 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகம்

இந்த நகம்
விரல்களையெல்லாம்
கத்திகளிலிருந்து காப்பாற்றுவதால்
நகமொரு கவசம்..!

சிலவேளைகளில்
கன்னிப் பெண்களை
காமுகர்கள் விரட்டும்போது
கத்தியாய் மாறிவிடுகின்றது..!

காமத்தின் விலங்குகளுக்கு ரணங்களையும்
மாறாத வடுக்களையும்
நிரந்தரமாய் அளித்து விடுவதனால்
இதுவொரு போராளி..!

நகக்குறி யென்பது
நங்கையருக்குத் தேனாகவும்
மன்மத நாடகத்தின் உச்சத்திலே
அங்கங்கே படர்ந்து மலர்ந்து
தொடர்ந்துவரும் காலத்திலும் ஞாபகங்களாய்...

இந்த நகம்
விரல்களுக்கு ஆடையா... ஆபரணமா..?
பிறப்புமுதல் இறப்புவரை
ஒட்டியிருக்கும் பிரியாமல்..!

அளவோடு நறுக்கினால்
அழகாய் ஜொலிக்கும்
இல்லையெனில் ஆணியாகி
அங்கங்கே நெருடும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் பயணம்

மரணத்தின் படிக்கட்டுகளில்
நாளாந்தம் ஏறுகின்ற மனிதா...
எந்தப் படிக்கட்டுகளில்
உனக்கான முற்றுப்புள்ளி..?

கண்ணுக்குத் தெரியாத
நீண்ட படிக்கட்டுகள்...
ஆரம்பப் படிக்கட்டுக்களிலா...
பாதிவழி பயணித்த பின்பா...
இறுதிப் படிக்கட்டுகளிலா
இறுதிப் பயணம்..?

அந்தியிலா... சந்தியிலா..?
அந்தியும், சந்தியும்
கைகுலுக்கும் நேரத்திலா..?

முதுமையில் நகர்ந்து நகர்ந்து
முனகிடும் பொழுதொன்றிலும்
இளமையில் நனைந்து நனைந்து
இனித்திடும் பொழுதொன்றிலும்
இல்லையெனில் எந்நேரத்திலும்..!

எப்போது வந்தாலென்ன..?
தப்பாது பயணிக்க காத்திரு
தப்பாது அவன் கணக்கு..!

மரணத்தின் தேதியது ரகசியமாகவும்
அறியாமலிருப்பதுவும் அவசியமாகும்
அறிந்தவன் உலகினில் ஒருவனே
அவனே மரணத்தின் சூத்திரதாரி..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தேதியதை அறிந்திருந்தால்
மனசுக்குள் அலையடிக்கும் எந்நாளும்
உயிர்ப்படகு தடுமாறித் தத்தளித்து
துயரக் கடல்தனில் மூழ்கும்
சூன்யத்தின் இருளெங்கும் சூழும்..!

-2008

## பணம்

பணம்தான் உலகென்று
பகலிரவாய் அலையும் மனிதா..!
ரணங்களாய் உள்ளங்களை
ரகசியமாய் நசிக்கின்றாய்
பிணமாக ஒருநாள்
சாய்ந்துவிடும் பொழுதொன்றில்
ஓய்ந்துவிடும் உன்திமிர்
அதுவரை ஆட்டத்தை நீ
நிறுத்திவிடப்போதில்லை ஆடு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஐரோப்பா...

பரபரப்பை பாதணிக்குள் திணித்து
படபடப்போடு பயணிக்கும் மனிதர்கள்
கடுகதி வாழ்வின் அவலம்
கால்களின் வேகத்தில் தெரிகின்றது.

காரியாலயங்களோ, தனியார் நிறுவனங்களோ
காலதாமதமின்றிச் சமூகமளித்து
கோப்புக்களைப் புரட்ட வேண்டும்
யாப்புக்களின் விதிப்படி நடக்காவிடில்
ஆப்பு வைக்கப்படும் உத்தியோகத்திற்கு..!

வேலையென்பது வாழ்வின் ஜீவனாகிவிட்டது
வேலையின்மை விரக்தியை வார்த்தளிக்க
வெறுமையோடு நாட்களைக் கழித்திருக்க
பொறுமையின்றி மனையாளும் சூடான
பாத்திரத்தின் கடுகாகி வெடிப்பதுண்டு...

கற்றவர்களுக்கு அலுவலகத்தின் கதவுகளோ
ஓசையின்றி திறந்து ஓரிடத்தில்
பாரமற்ற தொழிலை அளித்துவிட
கல்லாதவர் பலமுறை படியேறி
கண்டெடுத்தாலும் சுமையான தொழில்களினால்
சுருங்கித்தான் வாழ்கின்றார்கள்..!

குடும்பத்தேர் ஓர்திசையில் இழுக்கப்பட்டால்
ஒளிக்கிரணங்கள் மனையிருள் கிழித்தெறியும்
திசைமாறி வடமிழுக்கும் குடும்பங்களோ
தீர்க்கமுடியா கடனதில் மூழ்கியே
திசைதெரியா கப்பலாகவே திணறுகின்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமொன்று கரைகின்ற பொழுதொன்றில்
மாதவருமானமும் கரைந்துவிடுகின்றது
வாடகை, மின்சாரம், காப்புறுதி
தண்ணீர், வெந்நீர், சுத்திகரிப்பு நீர்
தொலைபேசி, தொலைக்காட்சி, அரசவரி
சூடாக்கிகள், அகதிகளுக்கான தொகை, அம்மாவுக்கு
கல்யாண நாள், ருதுவான நாள், பிறந்தநாள்
ஒரு சில விழாக்கள், கோயில்
அத்தனைக்கும் வரவும், செலவும்
சமனாக கைகுலுக்கிக் கொள்கின்றன..!

இத்தனைக்கும் வருமானம் இல்லையெனில்
உருவாகும் ஓர் அவமானம்
முதல்தாரம் உத்தியோகமெனில் மறுதாரமாய்
மனையாள் என்றென்றும் ஆதாரமாய்
இல்லையெனில் வாழ்வென்றும் சேதாரமாய்..!

சமூகக் கொடுப்பனவுகளின் சலுகைகளினால்
உயரத்தில் ஏறியவர்களைக் கணக்கிட்டாலும்
பள்ளத்தில் விழுந்தவர்களே பரிதாபத்திற்குரியவர்
மதுவையும், சோம்பலையும் விவாகஞ்செய்து
மரணத்தை சீக்கிரமாய் அணைத்து விடுகின்றனர்..!

கணினியின் முன்னே எந்நாளும்
காலத்தைத் தொலைத்தவர்கள் முதுமையில்
முதியோர் இல்லங்களையே நாடுவதுண்டு
பலர் தன்னந்தனியாக விரக்தியோடு
தட்டுத்தடுமாறியே வாழ்வதுமுண்டு
உதிரத்தின் உறவுகளோ வருடத்தில்
ஓரிரு நாட்களே விஜயம்..!

- 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலருமொரு காலை..!

மாங்கனித் தீவின் மட்டில்லா செல்வங்களை
காலனித்துவம் கறந்தெடுத்தது அந்நாளில்
மூண்டெரிந்த யுத்தத்தினால் இந்நாளில்
ஆழ்கடலின் அடித்தளத்தில் பொருளாதாரம்..!

எத்தனை எத்தனை துயரங்கள்
அத்தனைக்கும் ஆணிவேரெங்கே தேடுங்கள்
முத்தனைய சிங்கமணித்தீவில் காலமெல்லாம்
முகாரியின் தாலாட்டுத்தான் கேட்குமா..?

வாளேந்திய சிங்களப் பதாகை
கோலேந்திய உலகிற்கு கூறுவதென்ன..?
வேலேந்திய காலத்திலும் வென்றவர்கள்
தாளேந்திக் கிடக்கட்டும் என்பதுபோல்..!

நாடுதனை கூறுபொட விரும்பவில்லை
கூடுகளில் சுதந்திரமாய் வாழ்வதற்கும்
குரலெடுத்து குயில்களென்றும் பாடுவதற்கும்
நாடுதனில் பல்லினமும் கைகோர்த்து
நலங்களையும் வளங்களையும் பெறுவதற்கும்
இதயசுத்தியோடு நாற்காலியில் அமருங்கள்
உதயமாகும் நல்லதொரு எதிர்காலம்..!

புத்தனின் போதனைகளைப் புத்திரர்கள்
நித்தமும் புறந்தள்ளி வாழாமல்
சித்தத்தில் கொலுவிருத்தி செங்கோலோச்சினால்
புத்தொளி இருள்கீறிப் புலருமொரு காலை..!

-2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நதியின் ஸ்வரங்கள்

மலையதன் மடிதான்
தாய் வீடென்றாலும்
தாய்க்கொரு தாலாட்டையே
தண்ணீரில் பாடுகின்றது அருவி.

இந்த நதி
மழலையாய் தவழும் போது
அருவியெனும் நாமத்தில்...

மெல்ல, மெல்ல நடைபழகி
விரைந்து வேகமெடுத்து
மலையிலிருந்து குதித்தோடுகின்ற
ஒரு குறும்பான பிள்ளைதான்
கொள்ளை யழகான நீர்வீழ்ச்சி..!

சௌந்தர்யப் பெண்போல்
கலகலவென நகையவிழ
கூழாங்கற்களோடு ஸ்வரங்கள் மீட்டி
ராக ஆலாபனை செய்தபடி
காலாற நடக்கின்றது நதி...!

மேடுகளில் எழுவதும்
பள்ளத்தில் வீழ்வதும்
மனித வாழ்வின்
ஏற்றவிறக்கம் போலல்லவா..?

நளினமும் நாட்டியமும்
நங்கை போலவே...
அங்கே என்ன..?
குமிழிகள் உடைந்து உடைந்து
உனக்குள் ஒரு சிமிழ்
ஒளிரும் உன் தொப்பூழ்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ..! அது என்ன
வட்டமாய் சுழியொன்று
கன்னத்தில் குழிவிழ
புன்னகை புரிகின்றாயோ..?

இந்த நதி
பளிச்சென்று புன்னகைத்து
ஓடுகையில் கொலுசுச்சத்தம்
சலசலவென்று பாடுகையில்
சந்தங்களோடு சலங்கையொலி...!

ஒய்வின்றி ஓடுகையில்
ஓயாது பணிசெய்யும்
சமூக சேவகியாய் நீ...

மிருகங்கள் மட்டுமல்லாமல்
ஊர்வன பறப்பனவும்
உன்னில்தானே தாகசாந்தி
செய்து கொள்கின்றன
நீயொரு தண்ணீர்ப் பந்தல்..!

தண்ணிலவு இரவினில்
மேகத்திரை விலக்கி
தன்முகம் பார்க்கையில்
நீயொரு நிலைக் கண்ணாடி..!

இந்த நதி
பூப்பெய்திய புளகிதத்தில்
சுதியோடும் ஜதியோடும்
நாணல்களுக்கு கீச்சுமூச்சு செய்தபடி
மண்ணுக்கு மகிமை சேர்த்த
மட்டில்லா மகிழ்ச்சியில் நகர்கின்றது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியோதயத்தில் - உன்
தண்ணீரில் கதிரவன்
தன்முகம் கழுவுகின்றான்..!

இருகரைகளுள் ஓடுகின்றாயே
அடக்கமுள்ள ஆரணங்கா..? இல்லை
எவராவது தடைகளிடுகின்றாரா...
பெண்ணடிமைப் பித்தர்கள்..!

மரஞ்செடி, கொடியெல்லாம்
வேரெனும் கைகளை நீட்டி
தாகமென்று கேட்கையில்
தண்ணீரை வழங்குகின்றாய்..!

ஜீவராசிகளுக்கெல்லாம் நீ
ஜீவிதமளிப்பதால் உன்னை
புனிதமாக எண்ணி
வணங்கும் நாடுகளுமுண்டு...
வணங்கியபின் உன்னுள்
களங்கம் செய்ய
வீசுவர் குப்பைகளையும்...
சொர்க்கத்தின் வழியெனக் கூறி
வீசுவர் பிணங்களையும்..!

இந்த நதி ஓடியோடி - தினம்
பாடிப்பாடிப் பயணப்பட்டு
இளைத்துவிட்ட ஏழைபோல்
கடலில் குதித்துத் தற்கொலை
அக்கணமே சுவையிழந்து சுயமிழக்கின்றது..!

- 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் திருநாள்

மலரும் பொங்கல் திருநாளாம்
மகத்தான தமிழர்தம் பெருநாளாம்
உழவர் திருநாள் மட்டுமல்ல
உதிக்கின்ற கதிரவனை தொழும்நாள்
வளரட்டும் இல்லங்களில் மகிழ்ச்சி
வற்றாத நதியாகவே பெருகட்டும்
தளராத நெஞ்சோடு தரணியெங்கும்
தன்மானத் தமிழினம் நிமிரட்டும்..!

பொங்கட்டும் பானையிலே பொங்கல்
புவனமதில் சமாதானம் பூக்கட்டும்
தங்கிடும் சுதந்திரம் நிரந்தரமாய்
தமிழர் தாயகத்திலும் விரியட்டும்
எங்கெதிலும் தீயவரின் சிம்மாசனம்
எத்தனை காலம்தான் தொடருவது
அங்கெல்லாம் தர்மம் ஓங்கட்டும்
அதர்மம் அழிவுற்றுப் போகட்டும்..!

விழிமீது கனவுகளைச் சுமந்திருந்தோம்
விழிநீரால் கனவுகளும் கரைந்துவிட
அழியாத வடுக்களையே நெஞ்சங்களில்
அழியாது பாதுகாத்து வருகின்றோம்
வழியெங்கும் முட்களிலே நடந்திருந்தோம்
வழிந்தோடும் குருதியை துடைத்துவிட்டே
ஒளியேற்றும் காலத்திற்காய் காத்திருக்கின்றோம்
ஒருநாள் விடியுமென்றே பார்த்திருக்கின்றோம்..!

- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்களைத் தூவுகின்றோம்..!

தாய்மொழியில் பற்றிருந்தால் தழைத்தோங்கும்
தாய் தந்தையரிலும் தாய் நாட்டிலும் பற்றுறுதி
சேய்களின் வருங்காலமதை கணித்தன்றே
செகமெங்கும் தமிழ்ப்பணியை ஆற்றியிருந்தார்
ஆய்தமிழை கற்றுத்தேர்ந்த இளையோர்களும்
அகிலமெங்கும் ஒளிச்சுடரை ஏற்றுகின்றார்
தூய்மையிலும் தூய்மையானது ஆசிரியப்பணி
தொடர்ந்துவரும் காலமெல்லாம் செய்வதென்பது...

தமிழாலயத்தின் தந்தையென்றாகி தாயுமானவர்
தமிழ்க்கல்விக் கழகமெனவுயர நீர்வார்த்தவர்
அமிழ்தினுமினிய தமிழ்த்தோணி ஜேர்மனியிலே
ஆட்டமின்றிப் பயணிக்க துடுப்பெடுத்தவர்
தமிழேந்தலெனும் விருதுதனை தான்மதிக்கும்
தலைவரின் திருக்கரத்தால் பெற்றதனால்
இமிழ்கடல் ஓரமெல்லாம் இவர்நாமம்
இளந்தென்றல் காற்றோடு கலந்திருக்கும்...

எத்தனையோ இழப்புக்களுக்கு முகங்கொடுத்து
இசைக்கின்றது தமிழினம் முகாரியை
சொத்தனைய தமிழாசானைத் தொலைத்ததனால்
துயரகீதம் இசைக்கின்றார் மாணவமணிகள்
கத்தும் கடல்தாண்டி வந்தபோதும்
கவின்தமிழை கற்கையூடே வாசித்தவர்தான்
இத்தனைக்கும் எம்மிடையே இல்லையென்றாகி
இருப்பதுவும் போலானார் என்றென்றும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையில்லா கல்விதனை விதைத்தனால்
விசும்புவரை புகழை நட்டுவைத்தவர்
நிலையில்லா வாழ்வுதனில் என்றென்றும்
நிலைத்திருக்கும் அவர்பெருமை நீள்புவியில்
மலைபோல் உயர்ந்திருந்த நெஞ்சமது
மலர்வளையம் தாங்குகின்ற நேரமதில்
அலைகடல்போல் தமிழருள்ளம் ஆர்ப்பரிக்கின்றது
அருந்தமிழ் பெருந்தகையை இழந்ததனால்..!

மறைந்தாலும் மறையாத மாமனிதரவர்
மக்களின் உள்ளங்களில் கொலுவிருப்பார்
உறங்காமல் பணிசெய்து நடந்தவர்தான்
உறக்கத்தில் நிரந்தரமாய் ஆழ்ந்ததென்ன
துறந்தாலும் அவர்பணியைத் தொடர்வதற்கு
தூயவரின் சுவடுகளில் தடம்பதிப்போம்
உறைந்திருப்பார் இறைவனின் கமலப்பாதங்களில்
உதிர்க்கின்றோம் கண்ணீர்ப் பூக்களையே காணிக்கையாக...

(முதன் முதலாக ஜேர்மனியில் தமிழாலயத்தை (தமிழ்ப் பாடசாலை) நிறுவிக் கல்விப் பணியாற்றிய அமரர் இராமலிங்கம் நாகலிங்கம் (1927-2015) நினைவாக...)

## ஞானம்

தேரிழுத்த தேசம் விட்டு
வேரிழுத்து வந்தாலும்
பாரெல்லாம் பரந்து கிடக்கும்
பலவித ஞானங்கள்
பைந்தமிழர் கரங்களில்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கவிதைகளும் கைக்கூவும்

பல்லாண்டு காலத்தின்
பாரிய ஆலவிருட்சமாகவே
மரபது விளங்கிடவும்
அதன் விழுதுகளாகவே
புதுக்கவிதையும் கைக்கூவும்
புவனமதில் துலங்குகின்றன..!

மரபுவழி வந்த புதுக்கவிதை
தாய்வசமுள்ள பாதியழகையும்
தன்வசமாக்கி சௌந்தர்யங்களைச் சூடியே
பேரெழிலோடு பூமியெங்கும் பிரவாகம்..!

யப்பான் தேசமது
சின்னவளின் தாய்வீடென்றானாலும்
புதுக்கவிதையெனும் சோதரியின்
சாயல்தனைக் கொண்டவளாகவே
புவனமதை யளக்கின்றாள் கைக்கூ..!

பல தேசங்களை ஊடறுத்துப்
பாய்கின்ற றைன்நதிபோல்
எல்லா மொழிகளிலும் இசைந்து
இன்னிசைபோல் புதுக்கவிதை..!

இளையவளான கைக்கூவுக்கு
ரகசியமே அணிகலனென்றும்
மூன்றடி மட்டுமே நகர்வாள்
ஈற்றடியில் போட்டுடைப்பாள் ரகசியம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் கடலான
மரபிலிருந்து உதித்தனால்
குதிரைப் பாய்ச்சலின் வேகம்
கொண்டவளாகவே அக்கா..!
குள்ளமானவளால் இன்றுவரை
நெடியவளை புறந்தள்ள முடியவில்லை..!

மூத்தவள்போல் முன்னழகு
இளையவளுக்கு இல்லையெனிலும்
இளையோர்முதல் முதியோர்வரை
இவளின் பின்னழகை ரசித்திடுவர்...
ஆச்சரியத்தில் விழிகளை மலர்த்தி..!

இருவருள் எந்த மணமகளுக்கு
சுயம்வரம் இனிதாய் நிறைவேறும்..?
கவிஞர்களே... ரசிகர்களே..!
இருவருள் எந்த மணமகளை
தேர்ந்தெடுப்பீர்கள் சுயம்வரத்தில்..?

- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைக்கூ

கைக்கூவின் தாயகம்
யப்பான் தேசமல்ல
விடுகதைகளே.

## கைக்கூ கவிதைகள்

மூன்றாவது வரியிலோ, சொல்லிலோ
முடிச்சவிழ, உலகளக்கும்
கைக்கூ.

பசியைத்தான் ஒழித்திடுவேன்
உயிரையுமா..? பரிதவிப்பில் நெல்லு...
பெண் சிசு..!

சிலர் குளிர்ச்சியில் சீர்வரிசையால்
மாப்பிள்ளையோ அதிர்ச்சியில்
மனநோய் மனைவிக்கு..!

கவலையில் மூழ்கியே
கருவறை யளிக்கும் கல்லறைக்கு
பெண் சிசு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகையில் மகிழ்வேனே
முடிவினில் கலங்கிடுவேன்
நானே வாய்க்கரிசி..!

பாலின் நிறம்
பெண் குழந்தைக்கு நான்
விடம் கள்ளி..!

வானமின்று ஓயாமல்
நெசவு நெய்தது
வெண்பனி வீதியிலே..!

ஆழத்தில் மூழ்கி ஆலிங்கனம்
போதை தலைக்கேறிப் புலம்பல்
பூவில் வண்டு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலா

திங்கள் ஒருமுறை தலைமறைவு
தோழிகளின்றி சுற்றுலாவில்லை
நிலா.

## வெற்றிக்கனி

வெற்றிக் கனிக்காக
அணையுடைத்து வருகின்றது
அவளின் கண்ணீர்.

## குருதியல்ல

சிவப்பாக இருப்பாள்
சிரமதைச் சீவினால் சிந்துவது
குருதியல்ல செவ்விளநீர்.

## அறைகள்

எத்தனையோ அறைகளில் இனிமை
உள்ளே பலத்த பாதுகாப்பு
தேன்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிப்பாய்கள்

கண்களை யெறியலாம்
கல்லெறிந்தால் சிப்பாய்கள் சினமுறுவர்
தேன்கூடு.

## பாதுகாப்பு

ராணுவவீரர்களின் பாதுகாப்பில்
இன்சுவை உயரத்தில்
தேன்கூடு.

## கொள்ளை

பல நாட்கள் சேமித்ததை
யாரோ வந்து அபகரிப்பதா..?
தேன் கூடு.

## சுரண்டல்

இந்த மனிதர்கள்
அஃறிணைகளின் உழைப்பையும் உறிஞ்சுகின்றார்கள்
தேன்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய்

உடைந்தாலும், சிதறினாலும்
மக்களுக்குப் பயன்தரும்
தேங்காய்.

## ஆபரணங்கள்

இரவினிலும் ஓரங்காடி
ககனத்தில் கொட்டிக் கிடக்கின்றன
தங்க ஆபரணங்கள்.

## தடைகள்

எண்ணற்ற வீரர்களின் பாதுகாப்பு
இருந்தாலும் நுழைந்து பற்றுகின்றான்
தேன்கூடு.

## தேங்காய்

உடைந்தாலும் கண்ணீருக்கும்
புன்னகைக்குமிடையே பயன்தரும்
தேங்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவீன மனிதர்கள்

உதடுகள் தேனடை
உள்ளமோ காரிருள்
பலவீன மனிதர்கள்.

## சத்தியம்

உண்மையொளி இதயத்தில்
சுடர்விட, சுடர்விட
சத்தியம் தழைத்திடும்.

## சூட்சுமம்

நீதியும், அநீதியும்
இப்புவியின் இரட்டைக் குழந்தைகள்
படைத்தவனின் சூட்சுமம்.

## சுயரூபம்

சுயரூபம்
தரிசிக்க வேண்டுமெனில்
பதவியைக் கொடுத்துவிடு தோழா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏணி

ஏணியில் ஏறும்போது
சிலருக்குத் தெரிவதில்லை
இடறினால் பள்ளத்தாக்கு.

## புன்னகை

புன்னகைக்குள் வக்கிரகங்களை
புதைத்துவிட்டால் அகத்தினழகு
முகத்திலும் தெரிவதில்லை.

## நாகம்

படமெடுத்து ஆடுகையில்
நாகம்கூட அழகுதான்
வசீகரப் புன்னகை.

## கருப்பு

கருப்பான தோற்றத்தில்
வெண்மையான உள்ளம்
மழைதரும் மேகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊனம்

ஊனம் உடலில்
பரவாயில்லை மணவாளனாகலாம்
உள்ளத்திலெனில்..?

## மனிதன்

ஆடம்பரமான ஆடைகளும்
அணிகலன்களும் அந்தஸ்தைத் தருவதில்லை
மனிதனாக மாறிவிடு.

## வட்டிக்கடன்

புலத்தில்
வாகனங்களும், மனைகளும்
வாழ்வைவிட, வட்டிக்கடன் நீளும்.

## கரடி

ஆற்றோர ஆழத்தில்
மூழ்கி முத்தெடுத்தது
கரடியின் வாயில் மீன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன்

தண்ணீரில் ஊறியதும்
கறுப்பைக் களைந்தது உழுந்து
உன்னிருள் களைவதற்கு...?

## சுவை

கருவறை துறந்து
கரைதனில் வாழ்கின்றது
சுவைக்கென்றும் உப்பு.

## காத்திருத்தல்

எண்ணியவை ஈடேற
காத்திருக்க வேண்டும்
கொக்கின் அலகில் மீன்.

## வெடித்தல்

கடுகு வெடிப்பதுபோல்
குருதி சூடேறினால்
வெடிக்கும் தீச்சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததானம்

இரத்த தானம் செய்கின்றோம்
எம்மிடம் கேட்காமலேயே
தன்னிச்சையாகக் கொசு.

## பற்கள்

மனிதனுக்கு மட்டுமல்ல
விழுந்த பல் முளைப்பதில்லை
சீப்பு.

## கலண்டர்

ஓராண்டு தான் வாழ்வு
ஒவ்வொரு இதழாய்க் கழற்ற
இல்லாமல் போய்விடும்.

## அரண்

ராணுவம்போல் கோட்டைக்குள்
தன்னைப் பாதுகாத்துகொள்கின்றது
ஓட்டுக்குள் ஆமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தை

கூடான வீட்டைச் சுமந்து
கூருான கொம்பை நீட்டிய
நத்தை.

## கோட்டை

முற்றுகையிடும் ராணுவத்தை
ஜெயித்தால் இனிய கோட்டையே
கைகளில் தேன்கூடு.

## காதல்

காதல் சூட்டைத் தணிக்க
கதிரவன் பக்கம் சாய்கின்றாள்
சூரியகாந்தி.

## சிகரம்

எத்தனையோ இன்பங்கள்
அத்தனையிலும் சிகரம்
மழலையின் முறுவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவை

கலையிலே கைதேர்ந்தவன்
பள்ளியோ செல்லாதவன்
பறவையின் கூடு மரத்தில்.

## குயில்

அகதி வாழ்வா..?
பிறமனையில் பிரசவம்
காக்கையின் கூட்டில் குயில்.

## மறைத்தல்

கறுப்புக் கம்பளத்தை
வெண்கம்பளம் மறைக்கின்றதே
வெண்பனி வீதியிலே.

## மனை

ஓயாமல் முயன்று
களைப்பினூடே பறந்து
மனையதை வனைந்தது பறவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளம்

குடுமியை வெட்டினாலும்
முக்கண்களிலும் கோபமில்லை
வெள்ளை உள்ளம் தேங்காய்.

## கோட்டை

பற்பல வீரர்கள்
பாதுகாப்புப் கடமைதனில்
வீழ்கின்றது கோட்டை தேன்கூடு.

## தாய்மை

அன்னை திரேசா
பெண்களில் மட்டுமல்ல
ஆண்களிலும் வாழ்கின்றார்..!

## குடிசையில்...

அரண்மனையில் இல்லாதது
ஏழையின் குடிசையில்
இலவசமாய் புன்னகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழை

வியர்வைக்கு அறுவடையில்லை
முதலாளித்துவம் ஏப்பமிடுகின்றது
உலகெங்கும் ஏழை...!

## மகிமை

பெண்களுக்கு மட்டுமல்ல பெருமை
ஆண்களுக்கும் மகிமை
நிறையழியா நெஞ்சு.

## அரிசி

அடிவிழுந்தால் மட்டுமே
அத்தனையும் நிறைவேறும்
நெல்லிருந்து அரிசி.

## குடிசை

அற்புதமான குடிசை
சுறுசுறுப்பாக வனையப்படுகின்றது
முட்டையிடத் தயாராகும் பறவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசயம்

எவரிடம் கற்றது
குச்சிகளினால் அதிசயம்
பறவையின் இல்லம் மரத்தில்.

## இதயம்

எத்தனை விசாலம்
அத்தனையும் இதயத்தில்
அன்னை திரேசாவின் கருணை..!

## அடைமழை

விசும்புக்கென ஜலதோஷமா
விட்டுவிட்டுத் தும்முகின்றது
அடைமழை.

## நெசவு

வானம் நெசவு நெய்ய
வாகனங்கள் முத்தமிடுகின்றன
உறைபனியில் ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனிப் பூக்கள்

வானம் வேகமாக
தேங்காயைத் துருவுகின்றது
வெண்பனியில் ஜேர்மனி.

## பனிப்பொழிவு

பூமிக்கு உறவாகுமோ..?
வானம் வெண்கம்பளம் விரிக்கின்றது
தைமாத ஜேர்மனி.

## மனிதம்

இரைதேடி வதைத்து
உணவருந்தும் மிருகம்
மனிதா நீயுமா..?

## காதல்

மின்னிடப் பூத்திடும் தாழம்பூ
எண்ணிடப் பூக்கின்றதே உள்ளம்
காதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில உதடுகள்

பூவின் புன்னகையை புதைத்துவிட்டு
சாவின் புன்னகையை உதிர்க்கின்றன
சில உதடுகள்.

## மனை

மனையொன்று இல்லாததால்
மாற்றானின் மனையில் வாரிசு
காக்கையின் கூட்டில் குயில்.

## அரிசி

வாழ்த்துகையில் மகிழ்ச்சியே
இக்கணத்திலே கலங்குகின்றேன்
வாய்க்கரிசியாய் மாறியதனால்...

## முட்டை

இறக்கையின் கதகதப்பில் சேயாகலாம்
இதமான சூட்டிலும் உணவாகலாம்
சத்துணவு ஒரு முட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறை

சில ஆடவரும் வனிதையரும்
மீட்சியில்லா சிறையிலே
திருமண பந்தம்.

## அளவு கோல்

அளவுகோல் தவறினால்
அத்தனையும் வீணாகுமே
கடல் தரும் உப்பு.

## முதலிரவு

அட்டை ஊர்கின்றது
பொருந்தாத் திருமணம்
மனசெல்லாம் காதலன்.

## ஒத்தடம்

செல்வங்கள் குவிந்திருந்தாலும்
இதயத்தின் சுமையிறங்க
இதமான ஒத்தடம் மழலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசியம்

நாளும் பாவனையில்
மனைக்கு அத்தியாவசியம்
அறுசுவை உப்பு.

## தாலாட்டு

பூமி புளகிதமுற
தாலாட்டு அவசியமாகின்றது
தாலாட்டாய் பெண்கள்.

## நட்சத்திரங்கள்

இரவு நேர அங்காடியில்
மின்னுகின்றன தங்க ஆபரணங்கள்
அரசனுக்கும் விற்பதற்கில்லை.

## வானம்

கைகளுக்கு எட்டாத
அற்புதமான நகை மாளிகை
கங்குலில் ஜொலிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் நட்சத்திரங்கள்

இந்த வயலில்
தங்க ஆபரணங்களே விளைகின்றன
விடிவெள்ளி அறுவடை செய்கின்றது.

## பனிக்காலம்

வெண்ணிறப் பொடியில் தோய்ந்து
காற்றோடு கைகலப்பு
பனிக்கால மரக்கிளைகள்.

## கைக்கூ

முற்றிலும் முக்காடு
முகத்தையும், பாதத்தையும் காட்டுவாள்
ஆமை.

## விடியல்

விலையில்லா பொன்னாபரணங்கள்
விசும்பில் விதைக்கப்பட்டிருக்கின்றது
விடியல் கொள்ளையடிக்கின்றது.

## மகுடம்

சிவப்பு மகுடம்
காலம் தவறாக் கடமை
கூவுகின்ற சேவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

இந்த மண்ணிலே
மலர்ந்த வினாடியிலிருந்து
ஆசையெனும் விழுதுகளும்
எமக்குள்ளே வேரூன்றும்...

காற்றில் அசைந்தாடும்
பட்டமாய் மானிடர்கள்
ஆசையெனும் வான்வெளியில்..!

ஆசைக்கு அணைகட்ட முடியாமல்
அறிவார்ந்த ஞானிகளே தவிக்கையில்
சிற்றறிவு படைத்த இந்த
மனிதன் தான் என்செய்வான்..?
இந்த விலங்கை நிரந்தரமாய்
தனக்குத்தானே பூட்டுகின்றான்..!

ஆசையெனும் நூலிலாடும்
பொம்மைகளாய் நாம்
இந்த நூலது
அந்திமப் பொழுதுவரை
அறுபடாத நூலாகும்..!

-2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுபக்கம்

மனிதனின் மறுபக்கம்
பார்க்கவேண்டுமெனில்
பணம், பதவி, புகழ்
சேர்ந்தவனிடத்தில் நீயொரு
சேவகனாய்ச் சேர்ந்துவிடு..!

## மனிதம்..

ஒன்றின் அழிவினில்
இன்னொன்றின் உயிர்ப்பு
இயற்கை சிரிக்கின்றது
ஒருவரின் அழிவினில்
மற்றவர் மகிழ்வது
மனிதம் அழுகின்றது..!

## கண்ணீர்த் துளி

கார்மேகம் கலைந்து
ககனம் வெளுப்பதற்கு
மழைத்துளி அவசியமாகும்
சோகங்கள் கரைந்து
வதனம் வெளுப்பதற்கு
கண்ணீர்த்துளி அவசியமாகும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குதலை மொழி

தேனடையின் துளிகள்
தெரிவையரின் காதல்மொழி
ஏழிசையின் கீதம்
அத்தனையிலும் இனிமை
அந்தக் குதலை மொழி..!

## மனிதன்

கனிவாய் மொழிபேசி
காரியமே பார்க்கின்ற
கருப்புமன மாந்தரிடையே
பணிவாய் மொழிபேசி
பாரம் சுமக்கின்ற
பண்பாளர் சிலருமுண்டு..!

## விழிக்கடல்

ஆழியில் வீழ்ந்தவன்கூட
அலையடித்து மீள்வதுண்டு
உன் விழிக்கடலில்
வீழ்ந்தவன் நான்
விழிக்கின்றேன் திசையறியாமல்
கரைகாணா கப்பல்போல்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளநகை

இளநகை உதிர்க்காதே
இளம் பெண்ணே ...உன்
கன்னக் குழியினிலே என்னை
கவிழ்த்து விட்டாய் போதுமடி..!

## குயில்கள்

புலப்பெயர்வில்
காக்கைகளின் கூடுகளில்
குயில்களின் குஞ்சுகள்..!
குஞ்சுகள் பாடுகின்றன...
அஃது தாய் மொழியா...?
அந்நிய மொழியா..?

## குருஷேத்திரம்

நாடு கேட்டு
நகர் கேட்டு
ஊர் கேட்டு
உறையுள் கேட்டது
பாண்டவர்கள் மட்டுமல்ல
ஈழத் தமிழ் மக்களும்
அஃதேபோல்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயந்திரம்

ஐரோப்பிய உணவு விடுதிகளில்
எம்மவர் இயந்திரம்
இயந்திரம் பழுதானால்
மீண்டும் இயங்கலாம்
இதயம் ஸ்தம்பிதமடைந்தால்..?

## விடிவெள்ளி

விடியலுக்கான முன்னுரையை
விடிவெள்ளி எழுதிச்சென்றாலும்
விண்ணிலென்றும் மறைவதில்லையோ...
மண்ணின் விடியலுக்காய்
மகத்தான உரையெழுதியவர்
மண்ணில் புதைவதுண்டா..?

## இறைவன்

மனமெனும் ஆலயத்தில்
மனிதாபிமான விளக்கேற்று
குணமெனும் கோலோச்சு
குடியிருப்பான் இறைவன்
ரணமாகும் வேளைகளில்
ரகசியமாய் தைலமிடுவான்
குணமாகும் காயங்கள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நதி மூலம்

விடுகதைகளின் வேர்களிலும்
யப்பான் தேசத்தின் வாசலிலும்
கருத்தரித்த கைக்கூ
காசினியெங்கும் கைவீசுகின்றது..!

## வக்கிரம்

ஓணான் ஒன்று
மரத்தில் ஏறுகின்றது
மரமாகவே அவள்
வரனாக வாய்த்தவனோ
வக்கிரத்தின் வடிகால்..!

## வறுமை

பலரக ஓணான்கள்
ஏறுவதும் இறங்குவதுமாய்
அருவருப்போடு அவள்
உடற்பசி அவர்களுக்கு
வயிற்றுப்பசி அவளுக்கு..!

## ஒப்பனை

ஆரோக்கியத்தை
அடகு வைத்த
அசுரவேகத் தொழிற்சாலை
ஒப்பனையில் விலைமகள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

தாண்டமுடியாத தடைகளைத்
தாண்டியே நகருகின்ற
இந்நதியின் பிரவாகத்தால்
பூமியெனும் பூச்செடியோ
இன்றுவரை வாடாமலிருக்கின்றது..!

## விழி

ஓ..! புவியீர்ப்பையே
விஞ்சிவிட்டது விழியீர்ப்பு
பூமியில் விழுந்தெழுகின்றேன்
விழிக்குள் விழுந்ததனால் விழிக்கின்றேன்..!

## அதர்மம்

எதையும் விற்கலாம்
விபச்சாரியின் தர்மம்
எதிலும் கலப்படம்
வியாபாரியின் அதர்மம்..!

## வாழ்த்து

மணவாழ்வில் என்றென்றும் மங்கலம் சேர்ந்திடவே
இணைந்திடும் இல்வாழ்வுக்கு இறையருளே காரணம்
துணையாக இறைவரவே தூயவொளியது சிந்திடவே
அணையாத தீபமெனவே அகிலமதிலே ஓங்குகவே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு

தொலைந்தவைகளைவிட
அழிக்கப்பட்டவை, மறைக்கப்பட்டவை
அநேகம் வரலாற்றில்.

## வைரங்கள்

காலம் கண்டெடுத்த பொற்காசுகளைவிட
காணாமல் விட்டுவிட்ட
வைரங்களே அதிகம்.

## முதிர் கன்னி

வரதட்சனையால்
வஞ்சிக்கப்பட்ட
முதிர் கன்னியின்
விழிகளில் நாளாந்தம்
விரக்தியை வாசிக்கின்றேன்..!

## சுமை

உணர்வுகளின் கதவுகளையும்
யன்னல்களையும் சாத்திவிட்டு
உறவுகளின் சுமைகளைத்
தாங்குகின்றாள் விலைமகள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

மொழியெதுவும் பேசாமல்
விழிகளினால் பூவெறிந்து
வீழ்த்திவிட்டாய் என்னை
வீழ்ந்தாலுமென்ன
வென்றவர் இருவருமே..!

## நாம்

கல்லென்ன முள்ளென்ன
காடென்ன மேடென்ன
பாடியபடியே பயணிக்கும்
நதிபோலவே நாமிருந்தால்
நானிலம் செழிக்கும்..!

## தீபம்

மனமொரு அழுக்கேறிய
கந்தல் துணிபோலிருக்கலாம்
சலவை செய்து
மெல்லிய திரியாக்கினால்
ஒளிரும் தீபமாகலாம்..!

## வெண்பனி

வானத்திலிருந்து
வெண்பஞ்சுப் பொதியவிழ
வையகத்தில் வெண்பனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவு

குளிர்ச்சி தருகின்ற நிலவே
மலர்ச்சி தருவது போல்
புலன்களை ஊதுகின்றாய்
பெண்களுக்கு நீ
நட்பா..? பகையா..?

## தொடமுடியாத உயரம்

அந்நியதேசம், மொழி
ஆயினுமென்ன எம்மால்
தொடமுடியாத உயரங்களை
எட்டித் தொடுகின்றனர்
எம் வாரிசுகள்..!

## தேடல்

சமுத்திரத்தின் மேற்பரப்பில்
கண்டெடுக்கப்படுவதில்லை முத்து
உனக்குள் உன்னைத்தேடு
ஆழத்தில் மிக ஆழத்தில்
கண்டெடுப்பாய் முத்து..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராமைச் சிதைத்தவர்...

காசினியின் முகதரிசனம்
காட்டிய காலக் கண்ணாடியை
உடைத்தெறிந்தவர்
காட்டுமிராண்டிகளே..!

## விதவை

வெண்பனிச் சேலைதனை
பூமி யணியும்போது
மனசுக்குள் மத்தாப்பு
பூவையவ ளணியும் போது
மனசுக்குள் மயானம்..!

## உறவுகள்

உணவில்
உப்பின் அளவுபோல்
உறவுகளின் தொடர்பிருந்தால்
தப்பேதும் நிகழாது
தவிர்க்கலாம் விரிசல்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரூரம்

பேரழகனா நீ...
பெருமைதனில் திளைக்காதே...
அன்பில்லாத நீ
குரூரமானவனாய் உலகத்தில்..!

## ரணங்கள்

கல்லால் எறிந்துவிட்ட
காயங்களும் ஆறிவிடும்
கருவிழியால் எறிந்துவிட்டாய்
ரணங்களாய் இன்று விட்டாய்..!

## பட்டணம்

பரபரப்பை பாதணிக்குள்
பூட்டிக்கொண்டு மனிதன்
படபடப்போடு பறக்கிறான் தரைதனில்
பட்டணத்தின் பரிதாபநிலை..!

## பௌத்தம்

இலையுதிர்கால மரங்கள்
பௌத்தத்தின் வேர்களாகும்
நிலையில்லா வாழ்வுதனை
நீள்புவியில் உச்சரிக்கின்றன..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பா

ஐப்பசி திங்களிலிருந்து
மரங்களின் மேலாடைகளும்
கார்த்திகை மார்கழியில்
உள்ளாடைகளும் களையப்பட
மரங்கள் நிர்வாணமாய்..!

## இசை

எத்தனையோ
வாத்தியக் கருவிகளை
உதடுகளால் வாசிக்கின்றான்
மனிதன்... அதுபோலவே
எத்தனையோ பூக்களை
உதடுகளால் வாசிக்கின்றது
வண்டு..!

## மயக்கம்

பெண்ணே..!
கள்ளைப் பருகினேன்
நிமிர்ந்து நடந்தேன்..!
உதடுகளில் தேனைப் பருகினேன்
மயங்கி விழுந்து விட்டேன்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாமனக் கவிதைகள்

மயங்கியே திரிந்து
மலர்கள் தாவிய வண்டுக்கு
வலிக்கிறது எயிட்ஸ்.

காப்பாற்ற எண்ணாமல்
புதைப்பதற்கு நினைக்கின்றது
நிதி நீதியை சிங்களம்.

நாடகங்களின்
ஒத்திகைக்காய் திரைகள்
சத்தியத்திற்கும் திரைகளா..?

ஆடைகளால் அங்கங்களை
மறைப்பது போல் பொய்மைகளையும்
புதைக்கின்றார் புன்னகையால்.

அருவியாய் புன்னகை உதடுகளில்
ஆழங்களில் சீறுமொரு
பாம்பு.

அன்னை திரேசா காந்தி
அங்கங்கே பெய்யும்
மேகங்கள்.

-2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலர் தினம்

மோதலில்லாக் காதலுமில்லை
மோகமில்லாக் காதலுமில்லை
வேகமது கொண்டுவிட்டாலோ
விண்ணையே உரசும்
தாகமது கொள்ளுமே
தனிமையில் உருகும்
சோகமதன் சாயல்..!

காதலர் தினமதில்
காதலையே சுவாசிப்போம்
தேகமது தேய்ந்தாலும்
தேயாதது காதலே..!

## இமைகள்

விழிப்பறவை பறப்பதற்கு
சிறகுகளாய் இருப்பவை...
தீண்டிவிட முனைபவர்
தாண்டிவிட முடியாதபடி
காவல்தான் காப்பவை...
சில சமயங்களில்
கடுங்காவலையும் மீறியே
கைவிரல்கள் காயங்களையும்
விளைவித்து விடுவதுண்டு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாமனன்

தலையிலே மகுடமிருந்தால்
ஒல்லியானவனும் தீயுமிழ்வான்
தீக்குச்சி.

குடிசைக் கைத்தொழிலின் உன்னதம்
கொலுவிருக்கின்றதே கொம்பினில்
தூக்கணாங் குருவிக்கூடு.

அன்னை திரேசாபோல்
மரணம்வரை மகத்தான சேவை
தேய்ந்து உருகிடும் மெழுகுவர்த்தி.

சிரசிலே கந்தகத்தின் வாரிசு
அழிவுக்கு மட்டுமல்லாமல்
ஆக்கத்திற்கும் உதவும் தீக்குச்சி.

குடுமியை வெட்டியதும் முக்கண்கள்
இரண்டாகப் பிளக்க புன்னகையும்
புனலும் நிறைந்திருந்தது தேங்காய்.

## மின்குமிழ்

எந்நாளும் கண்சிமிட்டி
ஒளியுமிழும் மின்குமிழ்
ஒரு வினாடியில் உடைவது போல்
ஒரு நாள் மனிதனும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனித்துளிகள்

காண்பார் எவருமில்லையே
என்றொரு நினைப்பில் திருடன்
எம் மனையிலுள்ள பூனை..!

தன்னந்தனியாக சுறுசுறுப்பாக வனையப்படுகின்றது
அற்புதமான மனையல்லவா..?
முட்டையிடத் தயாராகும் குருவி..!

பாரிபோல் வள்ளலான வானம்
முல்லைப் பூ சேலையொன்றை வழங்க
குளிர்ந்தது பூமி பனியாடையால்..!

எங்கே கற்றார் இக்கலையை..?
பள்ளி செல்லாத பொறியியலாளர்
பறவையின் கூடு மரத்தில்..!

நலத்தை அடகு வைத்த
அசுரவேகத் தொழிற்சாலை
விபச்சார விடுதி (விபச்சாரி)...

பணத்தையும் நலத்தையும் தொலைத்து
பிரேத பரிசோதனையில் ஒருவன்
விலைமகளின் உறவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேன் துளிகள் - 1

சுற்றியுள்ள சுவரைத் தகர்த்து
பொலிவான கோட்டையில் துளையிட
உள்ளே பருக இளநீர்.

புயலோ பூகம்பமோ
தராசின் முள் தாழ்வதில்லை
அதுபோலவே சான்றோர்கள்.

உடையும் பொழுதுகளில்
மனிதன் அழுகின்றான்; ஆனால்
சிதறினாலும் நகைக்கின்றது தேங்காய்.

விளக்கில் எண்ணெயைப் போலவே
உனக்குள் சத்தியம் வற்றிவிட்டால்
உயிரினொளி மங்கி மறையும்.

காமத்தின் கருவறையிலே முளைவிடும்
நாணத்தின் எல்லைகளைத் தாண்டினாலும்
நானிலத்தில் அழிவற்றது காதல்.

இந்தக் கோட்டைக்குள் நுழைவதற்கு
வன்முறையன்றி வேறுவழியில்லை
தாகத்திற்கும் உணவுக்கும் தேங்காய்.

பெட்டிப் பணத்தின் பெருமையும்
கட்டித் தங்கத்தின் திமிரும்
பெட்டிக்குள் ஒருநாள் அடக்கம்.

எதையெதையோ விதைக்கின்றாய்
அறுவடை உனக்கு மட்டுமல்ல
உன் வம்சத்திற்கும்.

ஒழுக்கமின்மை அழியாத கறை
உடலின் அழுக்கை நீரகற்றும்
உயிரின் கறையை..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிலின் முதுகு

வியர்வைத் துளிகள் விதைப்பிற்கும்
அறுவடை மட்டும்
போகுமா பன்னீருக்கு..?

அங்கமெலாம் உங்களுக்கே
அனுபவியுங்கள்
என்றுரைப்பாள் வாழை...

பலருக்கு கருவறையவள்
சிலரே வெற்றியின் குதிரைகளில்
பாடசாலை...

வளங்களையே பெருக்கும் வல்லரசுகள்
அழிவின் சுவடுகளில்
அழகிய தீவு...

## அரசியல்

இசை நாற்காலியின்
போட்டியாகிவிட்டது
எம்மவரின் அரசியல்...
ஒரு முறை இருந்துவிட்டால்
இசைத்தாலும், அசைத்தாலும்
எழுந்திருக்க விரும்புவதில்லை..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி

தண்ணீரின் எடையை தாங்காமல்
கண்ணீர் நதியும்
உடைக்கின்றது கரைகளை...

ஆலயம் செல்கின்றாயா
உள்ளத்தின் ஓரங்களில்
உறைந்திருக்கின்றான் சாத்தான்...

மனசின் தூசியை
துடைப்பதெனில்
உள்ளத்தில் நிறைக ஈரம்...

அக்கிரமத்தை விதைக்கும்
மனித விலங்குகளில் எப்போதும்
குடியிருக்கும் குரோதம்...

சந்தேக விடம்
சிரசேறினால் வார்த்தைகளில்
வழியும் திராவகம்...

சில மனிதர்கள்
உதடுகளை திறக்கையில்
வாடுகின்றன மெல்லிய இதயங்கள்...

-2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியக் கவிதைகள்

கறுப்பாய் இருந்தாலென்ன
கர்ணனைப்போலவும் ஈகை
பனை...

ஒப்பனையும் புன்னகையும் வரவேற்க
விரைவாய் விடைபெறும் ஆடைகள்
விபச்சாரி...

யுத்தத்தை தொடர்வாய்
நிரந்தரம் உனக்கு
சிம்மாசனம்...

தலையை விரித்தபடியே
மோகத்தையல்ல தாகத்தையே
தணிப்பாள் தென்னை...

வைரங்களை வழங்குவதில்
வள்ளலுக்கே வள்ளல்
வானம்...

முதலீடு இல்லா
மொத்த வியாபாரி
விபச்சாரி...

மன்றினில் தலைவர்
மனையினில் சேவகன்
அப்பா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளிகள்

பெண்கள் மட்டுமல்ல
ஆண்களும் வழுக்கி விழுவதுண்டு
வீதியெங்கும் பனிதூவிக் கிடக்கின்றது...

மெல்லிய நூலினால்
சத்தமில்லாத தறியில்
ஆடை நெய்கின்றது சிலந்தி...

பச்சையும் வழுவழுப்பும் முத்துக்களும்
பாவையர்போல் எல்லாமும்
பளிச்சிடும் வெண்டிக்காய்...

ஒரே கருவறையில்
இருமதலைகள் இருப்பது போல்
முட்டைக்குள் மஞ்சள் வெள்ளை...

சிவன்போல் மூன்று கண்கள்
பார்வை யில்லாவிட்டாலும் என்றும்
பங்களிப்பு தேங்காய்...

## காதல்

இமைகளில்லாமல் விழிகளா
இதயமில்லாமல் இவ்வுடலா
உதயமில்லா வானமா
நீயுமில்லாமல் நானுமா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவலம்

வன்னிப் பேரவலம்மது - எந்த
வரலாறும் காணாத பேரவலம்
எந்த தேசத்திலும் நடக்காதது
எமது தேசமதில் அரங்கேறியது..!
மனிதத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு
மானுடத்தை வேட்டையாடினர்
ஆயுதமழை பொழியப் பொழிய
ஆறாய்ப் பெருகியது குருதி
நீறாய்ப் போயினர் மக்கள்..!
மருத்துவம் இல்லாமல் உயிர்
ஊசலாட மரணித்தவர் எத்தனை..?
பசித்தீ வயிற்றைச் சுட்டெரிக்க
புசியாமல் போனவர் எத்தனை..?
தாகத்தில் தவித்தவர் எத்தனை..?
மோகத்தின் முள் தைத்துவிட
முழி பிதுங்கி இறந்தவர் எத்தனை..?
குப்பைகளாய் கூட்டியள்ளிக் கொட்டினர்
மனித உடல்களையும் தலைகளையும்..!
பிணநெடியையும் ரணநெடியையும் தவிர
ஒன்றுமட்டும் இலவசமாய் கிடைத்தது
அது உப்புக்காற்று..!

- 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேன்துளிகள் - 2

எத்தனையோ
இசைக்கருவிகள் இசைத்தாலும்
அத்தனையிலும் இனிமை
மழலையின் உதடுகள்
இசைப்பது..!

ஏழு ஸ்வரங்கள் மட்டுமல்ல
எட்டாவது ஸ்வரமாக
பெற்றோர்களுக்கு வரமாக
மழலைமொழி..!

ஒருவனால்
விரிக்கப்பட்டது வெண்கம்பளம்
கால்களுக்காயல்ல
கண்களுக்காய்
நயகரா நீர்வீழ்ச்சி..!

ஒருவன் எந்நாளும்
விதைத்தான் கொடுமை
அறுவடையிலோ
அமோக விளைச்சல்
பெற்றான் ஞானம்..!

புன்னகை என்பது
பூ மலர்வது போல்
மலர்ந்திட வேண்டும்
சாகாத புன்னகையில்
சஞ்சலம் கருகும்
சாதனைகள் பெருகும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தில் மட்டுமல்ல
தேர்தல் களத்திலும்
துரோகிகள் நிறையவுண்டு
களையுங்கள் களைகளை
கையிலுள்ள ஆயுதத்தால்
வாக்குச்சீட்டு..!

## ஞாபகங்கள்

வானப் பூந்தோட்டத்தில் அழகாய்
பூத்திருந்த நட்சத்திரப் பூக்களை
விடிவெள்ளி யெனும் பூக்காரி
வேகமாகப் பறித்துக்கொண்டிருக்கிறாள்
காரிருளை விரட்டியடிக்க விரைவாய்
கதிரவனும் ஒளிக்கிரணங்களெனும்
அம்புகளை எய்யத் தொடங்கிவிட்டான்
சலங்கைச் சத்தம் கலகலக்க
மாட்டுவண்டி தெருவிலே...
துலாச் சத்தம் கிணற்றிலே...
பொதிகளைச் சுமந்த வண்டிகள்
சந்தையை நோக்கி நகருகின்றன..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைந்த வாழ்வு..!

சீரோடு வாழ்ந்த
செந்தமிழ்ப் பரம்பரையின்
வேர்கொண்ட வாழ்வுதனில்
வெந்நீர் கொட்டிவிட
ஏர்பிடித்த நிலத்தோடு
எல்லாமும் தொலைந்துபோக
எருதுகளை முன்னேவிட்டு
ஏக்கமுடன் மழலையொடு
ஏந்திழையாள் பின்னேவர
இடையினிலே மிதியுந்தில்
ஈழத் தமிழ்க் குடிமகன்...

இருப்பிழந்து இடரோடு
விருப்பின்றிய இடப்பெயர்வு...
வறுமையின் வலைப்பின்னல்
வெறுமையுடன் தமிழினம்
பொறுமையின் விளிம்பில்..!

- 2006

## ஊற்றுக்கண்

விதவைக்கு
வெண்துகில் வழங்காதே
துயரமல்லவா மனிதா..?
பட்டுத்துகில் பரிசளி
ஊற்றுக்கண் திறக்கட்டும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவன்

மரமதன் கிளைதனில்
சிறகுகள் கோதிடும்
மணிப்புறாச் ஜோடி
வெறித்திடும் வேடனின்
விழிகள்,

இறக்கை விரித்தொரு
பறவை பறப்பதும்
வீழ்வதும்,

மகரந்த மலர்களில்
மயங்கிடும் வண்டுகள்
இசைத்திடும் ராகம்,

மேகத்தின் பொழிவு
மோகத்தின் கசிவு,
அலைகளின் சத்தம்
ஆரணங்கின் முத்தம்,

பச்சை போர்த்திய
வயல்களில் இளமை
மொட்டை மரங்களிலே
முதுமை,

நதிகளின் நகர்வு
நாணலின் பணிவு
மலையின் நிமிர்வு,

மாறாத காலங்கள்
சாகாத மேகங்கள்,
நோய் வறுமை
இன்பம் துன்பம்,

தேதியில்லா மரணம்
தோய்வில்லா ஜனனம்,
இரவு பகல்,

இவைகளில் ஒருவனின்
விலாசம் விசாலம்
ஒட்டியிருக்கின்றது..!

- 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளித் தாமரைகள்

கைவீசி நடக்கும்
பள்ளித் தாமரைகள்
செஞ்சோலைக் கிளிகளோடு
கைகோர்த்து மகிழ்ந்த
காலைப் பொழுதொன்றில்...

ஆகாயம் துழாவிய
அசுரப் பறவை
அடைகாத்த முட்டைகளை
முல்லைத்தீவில் இறக்கியது...

ஒன்றா இரண்டா
அறுபது குருத்துக்கள்
அக்கணமே கருகிவிட
நூறோடு முப்பதும்
ஆறாய் குருதிவழிய
அங்கமெலாம் பங்கமுற்றன...

துயர்மூழ்கிக் கிடக்கின்றாள்
பூமித்தாய்... நாம்
துஞ்சிவிட்ட குஞ்சுகளுக்காய்
அஞ்சலிப்போம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றிலாடும் தீபம்

இடி மின்னல் புயல்
எதுவந்த போதினிலும்

கனல்வந்து தீ கக்கினாலும்
புனல்வந்து வேர் சப்பினாலும்

வாள்கொண்டே யறுத்தாலும்
தோள்கொண்டே சாய்த்தாலும்

வேரறுந்து போவதில்லையே
ஊர்தனிலே பூவரசு...

புலப்பெயர்வினிலும் தன்னைத்தான்
புடம்போட்ட பூவரசு...

இலக்கியவானில் ஏற்றமுடனே
எழுந்துநிற்கும் ஏடது...

நாடியொடுங்கியே போவதென்றால்
நம்தமிழ்த்தாய் கண்ணீருகுப்பாள்..!

மூச்சடங்கியது போகாமல்
முழுநிலவாய் வளர்ந்திடவே...

பிராணவாயு ஏற்றிடுவோம்
புறப்படுவீர் தமிழர்காள்..!

காற்றிலாடும் தீபமதை
கைகொண்டே பொத்திடுவோம்..!

(ஜேர்மனியில் வெளிவந்த 'பூவரசு' சஞ்சிகை பொருளாதாரப் புயலில்
நிலைகுலைந்து நின்றபோது...)

- 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி தங்கம்மா அப்பாகுட்டி

அன்னை திரேசாவால்
மசிடோனியா மகுடம்
சூடிக்கொண்டது
தங்கம்மா அப்பாகுட்டியால்
தமிழ்மண் தங்கக்கிரீடம்
தரிக்க ஆன்மீகம்
சிம்மாசனமிட்டது.

இவரைப் பெற்றெடுத்தோர்
பேருவைகையில் நனைந்தது
பிறந்தபோது மட்டுமா..?
இல்லை இல்லை காலமெலாம்.

இவரைத் தத்தெடுத்த
துர்க்கையும் தன்சேவைக்காய்
வைத்திருந்தாள் காலமெலாம்,

இந்த மேகத்தின்
உதடுகள் திறக்கையிலே
உள்ளங்களில் அருள்மழை
நிரம்பி நிரம்பி வழியும்
கைகள் நீளும்போது
காருண்யம் பந்தலிடும்,

சின்னதொரு கோயிலிலே
குடியிருந்த துர்க்கைக்காய்
வான்தொடும் கோபுரம்
வர்ணமிடும் பெருங்கோயில்
வழியின்றி வருவோர்க்கு
ஒளியூட்டும் விழிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் சேவையோடு
தமிழுக்கும் சைவத்திற்கும்
தளராத தொண்டு
ஓயாத பணி
ஓய்ந்துதான் போனதா..?

இந்த அகல்விளக்கு
அணைந்துவிட்டாலும்
அதன் ஒளிச்சுடர்
என்றென்றும் பிரகாசிக்கும்..!

நடமாடிய ஆலயம்
தமக்கருகில் வேண்டுமென்று
தாயவள் எடுத்தாலும்
எமக்கொருநாள் தந்தருள்வாள்,

சிறகொடிந்த பறவைகளுக்கும்
சின்னச் சின்ன
குருவிகளுக்கும் கூடுகளமைத்தார்
ஆலயத்தில்...

தெல்லிப்பளையெனும்
ஊரின் நாமத்தை
உதடுகள் உச்சரிக்கையில்
அன்னையின் வதனமே
மின்னலிடும்..!

- 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்கள்

மார்கழித் திங்கள்
பிற்பகுதி மலரும்போது
ஜேர்மனியில் எத்திசையில்
நாம் பயணித்தாலும்
இந்த மரங்கள்
முற்றும் இலையுதிர்த்து
முதுமையில் முனகிடும்...

இலைகள் துளிர்க்கையிலே
பிள்ளைப் பிராயத்திலும்
வசந்தத்தை பிரசவிக்கையிலே
வாலிபத்தின் வாசலிலும்
இலைகள் உதிர்த்தபின்
முதுமையின் விளிம்பிலும்...

மனித வாழ்வின்
சகல பருவத்தையும்
செட்டையுரித்துக் காட்டும்
மரங்களிலிருந்து நான்
இறைவன் படைப்பியல்
தத்துவத்தை பூரணமாய்
தரிசிக்கின்றேன்..!

இந்த விருட்சங்கள்
முதுமையில்  வீழ்ந்தாலும்
மீண்டும் துளிர்க்கும்
வசந்தத்தை வாரியிறைக்கும்...
மனிதன்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமிர்தத் துளிகள்

பாரிபோல் வள்ளலான வானம்
முல்லைப்பூ சோலையொன்றை வழங்க
குளிர்ந்தது பூமி பனியாடையால்...

பணத்தையும் நலத்தையும் தொலைத்து
பிரேத பரிசோதனையில் ஒருவன்
விபச்சாரியின் தொடர்பு..

திங்கள் ஒன்றல்ல பௌர்ணமி
தினந்தோறும் உன்வானில் பௌர்ணமி
உன்னை நேசிப்பவள்(ன்) கிடைத்துவிட்டால்...

காரிருள் சூழ்வதுபோல் துன்பமா..?
கதிரொளி பாய்வதுபோல் வந்துவிடும்
தன்னலமற்ற நட்பு...

தன்னந்தனியாக சுறுசுறுப்பாக வனையப்படுகின்றது...
அற்புதமான மனையல்லவா
முட்டையிடக் காத்திருக்கும் பறவை...

பெரியவனோடு கைகுலுக்க எண்ணி
உன்நாமம் உன்குணம் இழந்துவிட்டாய்
கடலோடு கலந்த நதி...

சிலவேளைகளில் வலிக்கின்றது
முற்றிலும் உறிஞ்சப்படுவதால்
பரிதவிப்பில் பசு பசியோடு கன்று...

கண்களை மூடினால் காண்பாரெவருமில்லை
என்றொரு நினைப்பில் திருடன்
எங்கள் வீட்டுப் பூனை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஜமான் விசுவாசம் மேலோங்க
நாவினால் நன்றியுரை கூறாமல்
எப்போதும் வாலினால்...

அன்போடு உணவளித்து பாதுகாத்து
ஒருநாள் அடித்துவிரட்டும் தாய்
சொந்தக்காலில் குஞ்சுகள்...

நீரின் ஆக்கிரமிப்பு காலமெல்லாம்
நிலமதை ராணுவம்போல் முற்றுகையிட
ஒருநாள் உருவாகும் பிரளயம்...

உறவுகள் புன்னகை பூத்திடவே
அன்றாடம் வற்றிடும் வாலிபங்கள்
உணவு விடுதிகளில் எம்மவர்...

உதிரத்தின் பிசுபிசுப்பு உலகமெல்லாம்
இனக்கலவரம்... மதக்கலவரம்... தூபமிடுபவர்
அரசியல்வாதிகள் இல்லையில்லை மதவாதிகள்...

எத்தனையோ காலங்கள் தவமிருந்து
எந்தாய் உருவாக்கிய பூமிப்பந்து
ஒரு நொடியில் கருகிடுமா..? அணுவாயுதம்..!

- 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிப்பந்தின் ஓரமெல்லாம்...

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு
முன்பிருந்தே இப்புவியெங்கும்
குருதி வரைந்த தடங்கள்
இன்னும் காயாமல் பிசுபிசுக்கின்றது
அந்த வரலாற்றின் தொடர்ச்சி
மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது..!

வரலாற்றுப் புகழ்மிக்க
மூவேந்தர் காலத்திலும்
சதி, சூழ்ச்சி, காட்டிக் கொடுத்தல்
கூடவிருந்து குழிபறித்தல்
அங்கங்கே கறைகளாய் ஒட்டியிருந்தது
உடன் பிறந்தோரை வீழ்த்த
எதிரியோடு கூட்டுச் சேர்ந்த
உதிரிகள் அவர்களுக்குள்ளேயும்..!

முன்னாளிலிருந்தே
பூமிப்பந்தின் மூலையெல்லாம்
சிறிய மீன்களாய் சிறுபான்மையை
மிதித்திடும் பெரும்பான்மை..!

நிலவுடமைப் பிரபுக்கள்
அரசியல்வாதிகளின் ஆயுதங்களான
மதம் சாதீயம் போன்றவற்றால்
மண்ணில் குருதி வழிகின்றது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித இச்சைகளினால்
மோகங் கொண்ட மனிதன்
பச்சைகளையெல்லாம் பாழடிப்பதோடு
யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றான்
நீர் குடித்த உலகு
செந்நீரில் குளித்துத் திணறுகின்றது..!

வேட்டை யாடுவதில்
மிருகங்களையே வென்றுவிட்டான் மனிதன்
கோட்டையை கைப்பற்ற வேண்டுமெனில்
வேட்டுக்களைத் தீர்த்தாக வேண்டுமாம்..!

பூமிப்பந்தின் ஓரமெல்லாம்
மதக்கலவரங்கள் இனக்கலவரங்கள்
மானுடம் வலியோடு முனகுகின்றது..!
முதலாளித்துவம் கைகொடுப்பதாக
கூறிக்கொண்டே வைக்கின்றது
கை பையிலே; அங்கே
கறக்கின்றது நிலநெய்..!

- 2013

## சிம்மாசனம்

விடுதலைப் பயிருக்கு
செந்நீரில் பாசனம்
செய்தவர்களோ இன்றில்லை
பயிருக்கு எரியூட்டியவர்கள்
உலகெங்கும் சிம்மாசனங்களில்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய் முகங்கள்...

கோரமுகம் தெரியாமலிருக்கவும்
வக்கிரகங்களை மறைக்கவும்
பொதுப் பணியெனும் போர்வைக்குள்
பல பொய் முகங்கள்..!

பதவியதைப் பெறுவதற்காக
குனிந்தும் வளைந்தும்
குத்துக்கரணம் போட்டு
கொள்கைகளை விற்றபின்
கொள்ளையிடத் தொடங்கிவிடுவர்..!

இந்த நட்டுவக்காலிகளின்
கொடுக்குகளினால் கிழிபடுவது
சமுதாயம் மட்டுமல்ல
சரசரக்கும் பட்டுச்சேலைகளும்..!

இந்த நச்சரவங்களை
இனங்கண்டு நசுக்காவிடில்
நாடு நலம்பெறாது
வீடு வளம்பெறாது..!

எங்கெதிலும் மூஞ்சூறுகளாய்
மூக்குதனை நுழைப்பவர்
மானுடத்தின் இதயங்களை
கூரான அலகுகளினால்
கிழிக்கின்ற கழுகுகள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை காலம்தான்
புன்னகைக்குள் புதைந்திருக்கும்
பொல்லாத நயவஞ்சகம்..?
மக்கள் விழித்தெழுந்தால்
மகுடம் மண்ணில் விழும்..!

அறிவுடையோர்
ஒருபோதும் இணையார்
இந்தக் கூட்டணியில்..!
தவறென்று வாதிடுகின்றார்கள்
பொதுப்பணி மன்றத்தின் சுயநலவாதிகள்..!

## வீழ்ச்சியின் நிலைதனில்...

வீழ்ச்சி நிலையில் நாமின்று
வீழ்ந்து வீழ்ந்து போனாலும்
எழுச்சி காண்பதற்குக் கதிரவன்
எம்வானில் ஒருநாள் இருள் கிழிப்பான்,

ஆழியின் அலைகள் ஓய்ந்து
அமைதியாய் சிலவேளை இருப்பதுண்டு
நாழியில் அலைக்கரங்கள் நீண்டு
நானிலத்தை முற்றுகை இடுவது முண்டு.

ஊழியின் காலமொன்று தோன்றி
உன்னத காலமொன்று மலர்வதுபோல்
வீழ்ச்சியில் நாம்நின்று எழுவோம்
விண்வரை சாதனைகள் தொடர்வோம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிக்கமுடியாக் குப்பைகள்...

இருபத்தோராம் நூற்றாண்டிலே
விஞ்ஞானத்தின் சாதனைகளோ
விண்தொட்டு நிற்கின்றது
பிறநாடுகளோ வளர்ச்சியில் சிகரத்தில்
நாம் மட்டும் அடிவாரத்தில்...

சீதனம், சாதீயமெனும்
புரையோடிப்போன புண்களிலிருந்து
நோய்க்கிருமிகள் கடத்தப்படுகின்றது
அடுத்துவரும் சந்ததிக்காகவும்...

இந்நோய்களின் ஆக்கிரமிப்பிலிருந்து
கற்றவர்கள்கூடக் கரையேறுவதில்லை
அறுக்கமுடியா ஆணிவேராகவும்
எரிக்கமுடியா குப்பைகளாகவும்
எம்மிடையே படர்ந்திருக்கின்றன...

சமநிலையிலிருக்கவேண்டிய சமுதாயத்தை
கீழ்நிலையென்றும், மேல்நிலையென்றும்
சாதீயம் நிர்ணயிக்க
அங்கே மானுடத்தின் கழுத்து
ராட்சசக் கரங்களினால் நெரிக்கப்படுகின்றது..!

முதிர்கன்னியின் பஞ்சணையில்
வாசமுள்ள பூக்களைக் தூவாமல்
முட்களையல்லவா தூவுகின்றது சீர்வரிசை..?

இந்தச் சாக்கடை நீர் நிரந்தரமாய்
எம்மினத்தின் குடிநீரில் கலந்து
ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடலாகாது...!

- 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாணம்

நிர்வாணத்தை ஆடையாக்கி
நிமிர்ந்து நிற்கின்றன
இலையுதிர்கால மரங்கள்
மீண்டும் துளிர்ப்பதற்காய்..!

மனிதா நீ...
இழப்புக்களைக் கண்டதும்
இதயம் நொருங்கிப் போகாதே
இதயத்தைப் பாறையாக்கிவிடு
மீண்டும் துளிர்த்திடுவாய்..!

தோல்வியைக் கண்டதும்
துவண்டுதான் போவதென்ன..?
வெற்றி உன் வாசற்படிதனில்
உனக்காகக் காத்திருக்கின்றதே..!

பூமியது சுற்றுவது போல்
இன்பமும் துன்பமும் மாறி மாறியே
மனிதனையும் சுற்றுகின்றது..!

புயல் வந்து ஒருநாள்
உன்னைப் புரட்டிப் போடும்வரை
போராடு மனிதா... போராடு
நிச்சயம் ஒருநாள் வெல்வாய்..!

என்னதான் முயன்றாலும்
இறுதியிலொரு நிர்வாணம் எமக்கெல்லாம்
இதுவே இப்புவியில் நிரந்தரம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதி வரைந்த தடங்கள்

சுதந்திரத்தின் பின்னே
இலங்கைத் தீவினிலே தமிழர்
என்னதான் கேட்டிருந்தார்கள்..?
உரிமைகள் மட்டுமன்றி வேறென்ன..?
சலுகைகள்கூட மறுக்கப்பட்டது..!

ஓரினம் மட்டுமே
சுதந்திரக் காற்றை சுவாசிக்க
இன்னொரு இனமோ
மூச்சுவாங்கிக் கிடந்தது..!

ஆட்சிக் கட்டிலிலே
ஆரோகணித்த அரச அதிபர்கள்
ஒவ்வொரு காலத்திலும்
அரசியல் பகடைகளை நகர்த்த
அவை விரைந்து சென்று
ஓரினத்தையே மண்கவ்வ வீழ்த்தியது..!

பச்சை போர்த்திய
பசுமைமிகு தீவினிலே
குருதி வழியத் தொடங்கியது
பரிதியின் வெளிச்சம் பாயாமல்
வடக்கு, கிழக்கு, மலையகம்
இருளுக்குள் மூழ்கிக் கிடக்கின்றது..!

காலத்திற்கு காலம்
கட்டவிழ்ந்த அராஜகம்
இனக்கலவரங்களாய் வெடிக்க
கண்ணீர் செந்நீர் கவின்தீவில்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிம்சை வழி தோற்றுப்போக
ஆயுத வழி பின்பற்றப்பட்டது
புயல் பூகம்பம் வெடித்தது
எந்த வானிலும் இறங்காதஇடி
எம் வானத்தில் இறங்கியது
எரிமலைக் குழம்புகளைக் கக்கியது..!

வளையாத சட்டங்களையே
தமக்காகவே வரைந்து வளைத்து
நீதிக்கே சவால்விடுவோரின் வரிசை
நித்திலத் தீவினிலே தொடர்கின்றது..!

மகுடத்தைப் பெறுவதற்காகவும் அதை
நிரந்தரமாய் அணிவதற்காகவும்
மனிதத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்..!

எலும்புகளால் அத்திவாரமிட்டு
குருதியினால் குழைத்த கலவையில்
கோட்டை கட்டி யதில்
சிம்மாசனமிட்ட சர்வாதிகாரிகள்
எத்தனை காலம்தான் நிலைத்திருந்தார்கள்..?

வானம் உடைந்து பொழிந்தாலும்
வற்றாத அத்தனை ஆறுகளும்
பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும்
குருதி வரைந்த தடங்களை
துடைத்தழிக்க முடியுமா..?

- 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேட்டைகள்

இந்தியக் தேசியக்கொடி
தலைநிமிர்ந்து நின்றது
அண்ணல் காந்தியின்
அகிம்சை நெறியினாலும்
அவர் வழிவந்த தலைவர்களின்
அளப்பரிய சேவைகளினாலும்...

இன்று தலைகுனிந்து நிற்கின்றது....
ஓடும் பேருந்தில்
மருத்துவ மாணவி
சிதைக்கப்பட்டதாலும்...
பலவகை வேட்டைகள் தொடர்வதாலும்..!

இளைஞர்களே..!
உன்மத்த உணர்ச்சிகளின் திரிகள்
கருகியே போகட்டும்
எண்ணெயை வார்க்காதீர்கள்...

## அகிம்சை

இவ்வுலகு
முட்டைக் கோதாய்
உடையாமலிருக்க
என்றும் அவசியமாகின்றது
காந்தியடிகளின் ஆயுதம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிசுமந்த தாய்

வலி சுமந்து தாயவள் கிடக்கையில்தான்
வாய்வெடித்து மழலையொன்று வருகின்றது
உளியது ஓங்கி வீழுகையில்தான்
ஒளிரும் சிற்பமொன்று மலருகின்றது
அழிவது கண்டிருந்த நாடுகள்தான்
அங்கங்கே விடியல்தனைக் காண்கின்றது
பழியதை விதைத்துவிட்ட பாதகர்கள்
பார்தனில் அறுவடையைச் செய்திடுவார்
கலியுகம் முற்றிவிட்ட காரணத்தால்
காசினியில் அனர்த்தங்களும் ஏராளம்..!

## வலி...

வீழ்ந்துதான் வருகின்றது நீர்வீழச்சி
எழுந்துதான் நடக்கின்றது நதியாக...
தாழ்ந்துதான் கிடக்கின்றது வயற்காடு...
தானியங்களை எமக்காக அளிக்கின்றது
வீழ்ச்சியின் நிலையின்றாகலாம் நிச்சயமாய்
எழுச்சியது மலருமொரு காலம்வரும்..!
தோல்வியின் நிகழ்தனில் அங்கங்கே
வெற்றியது மறைந்திருக்கும் கண்டறிவீர்..!
கேலியில் நகைத்திருக்கும் கொடியோர்
வலியுணரும் காலம் வரும் நிச்சயம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசோன் கூரை

விஞ்ஞானத்தின்
நீண்ட கரங்களினால்
ஓசோன் கூரைதனில்
துளைகள் விழுந்துவிட்டன…

சூரிய கிரணங்களின் ஒழுக்கினால்
பூமியின் சிரசில் உஷ்ணம்..!

பூமியின்
பாதுகாப்பு வலயமான
ஓசோன் அரணைத் தாக்கி
பாரிய படையெடுப்பு
வெப்பக் கதிர்களினால்..!

சூரியச் சிலந்தி
வெப்பவலையை
வேகமாய் பின்னுகின்றது..!
மனிதன் வலைதனில் சிக்கி
நோய்களினால் தாக்கப்படுவான்..!

வெப்பத்தின் அலைகள் தாக்க
பனிமலைகள் விரைவாய்க் கரைய
கடல் மட்டமும் உயர
நிலமது சுருங்கும்..!

விஞ்ஞானமே உன்
சாதனைகள் ஏராளம், தாராளம்
உன்னை வெறுக்கவில்லை நாம்
நிகழவிருக்கும் அனர்த்தங்களுக்கு
துளியளவாவது அணையிடுவாய்..!

- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரும் இலைகள்

காற்றின் தாக்கமதால்
காம்பு கழன்று
பூக்கள் வீழ்வது போல்
பொன்னுயிர் போகுமென்றால்
பூரிப்பான விடயந்தான்..!

சிலவேளைகளில்
சலவை இயந்திரத்தில்
இடப்பட்டஆடைகள் போல்
துவைத்துத் துவைத்துப் பிழியப்பட்டு
சுழற்றிச் சுழற்றி யடிக்கப்பட்டு
எம்முடலைக் கந்தலாக்கி
உயிர் பறிக்கப்படலாம்..!

புயல் காற்றொன்று
பூமியை உலுப்புகின்ற நேரத்தில்
பழுத்த இலைகளோடு
சில பச்சையிலைகளும்
உதிர்வது போலவே என்றென்றும்
வயது பழுத்தவர்களும்
இளையோர் முதல்
முதியோர் வரை
மரணத்தின் கோரப்பிடியில்..!

நோயெனும் கயிறினால்
ஆறடி மனிதனை
கட்டி யுருட்டி அவனது
குருதியின் துடிப்பையும் திமிரையும்
அடக்கி யொடுக்கி
மரணத்தை பரிசாகவே
அளிக்கிறது காலம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கணத்தை இந்த
இறுதிக் கணத்தை
ஒரு நொடியாவது சிந்தித்தால்
பிணங்களின் மேல் நடப்பதை
மனிதன் ஓரளவாவது
குறைத்துக் கொள்வான்..!

- 2012

## மடிந்துவிடும் துயரம்

பூக்களின் வனப்பு
பூந்தென்றலின் வருடல்
பொய் மொழியாளின் தழுவல்
புகழின் சிகரம்
பொன், பொருள் குவியல்
அத்தனையிலும் மேன்மை
மழலையின் புன்னகை
மடிந்துவிடும் துயரம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடும் பேருந்தில்...

புலன்களை யடக்கா புல்லர்களினால்
பூவொன்று சிதைக்கப்பட்டது பேருந்தில்
ஓடும் பேருந்தை நாளும்
நாடும் நங்கையர் பீதியில்...

மருத்துவ மாணவியின் அங்கங்களை
மருத்துவ பரிசோதனை செய்து
உருத்தெரியாமல் சிதைத்தன மிருகங்கள்..!

எத்தனை கனவுகளைச் சுமந்து
பறக்க எத்தனித்த கிளியின்
சிறகுகளை வெட்டி யெறிந்ததோடு
விறகுகளுக்குள் எரிமூட்டவும் அனுமதித்தீர்..!

எந்தக் கருவறை சுமந்ததோ
எத்தனை துயரத்தால் துடித்ததோ..?
எண்ணிப் பார்த்தீர்களா ஒரு கணம்..?
உங்களையும் ஒரு கருவறைதான் சுமந்தது..!

காமத்தீ பற்றியெரிந்தால் கயவர்களே...
சிவப்பு விளக்குகளை நாடுங்கள்..!
பச்சை விளக்குகளை உடைக்காதீர்
பச்சை விளக்குகளே என்றும்
பாதைகளுக்கு வழிகாட்டி நிற்கின்றன..!

- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் தேர்தல் 2015

உதயத்தை எண்ணித்தான்
இந்நாளைத் தேர்ந்தெடுத்தார்
அந்நாளே அவர்களுக்கு
அரசியல் அஸ்தமனம்..!

அதிகார நாற்காலியில்
இன்னும் ஈராண்டுகளிருந்திருக்கலாம்
அதற்குள் பேராசை
பிடரி பிடித்துத் தள்ள
போய் விழுந்தார் பள்ளத்தில்..!

மக்களாட்சி நிறுவுமிடம்
பாராளுமன்றம் என்றிருக்க
குடும்ப ஆட்சியல்லவா
குட்டித் தீவில் கொடுங்கோலேந்தியது..!

பாரச்சிலுவை சுமந்த மக்கள்
வழிந்தோடிய கண்ணீரை
இந்நாள்வரை தேக்கி வைத்து
அதற்கான கணக்கையெல்லாம்
வட்டியும் முதலுமாய் வசூலித்துள்ளார்..!

வேர்களுக்கு மட்டுமன்றி
விழுதுகளுக்கும் வெந்நீர் ஊற்றியவர்க்கு
வீறுகொண்டெழுந்த தமிழர்
வாக்குச் சீட்டுக்களினால்
வழங்கியுள்ளார் தண்டனை..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. 01. 2015 அன்று
இருண்ட வானத்தில் சிறிதாய்
ஒளிக்கீற்று தோன்றிய நாள்
மருண்ட மக்களின் மனங்களில்
மாற்றமொன்று மலருமென்ற நம்பிக்கை..!

9-ம் தேதியது மலர்வதற்குள்
ஒளிக்கிரணங்கள் பூமியை
முத்தமிடத் தொடங்குவதற்குள்
மகுடம் உருண்டு விழுந்தது
மமதையும் மண்ணிலே சரிந்தது
அவசர அவசரமாய் ஆதிக்கம்
அரசமாளிகை துறந்து சென்றது..!

காலமின்னும் கடந்துவிடவில்லை
கனமான பூட்டுக்கள் தொங்கவிடப்பட்டிருக்கும்
கதவுகளுக்கான திறவுகோல்
விரைவாய் கையிலெடுங்கள்..!

காலமெல்லாம் புரையோடிப்போன
காயங்களுக்கு மருந்தளித்து
குருதி வரைந்த தடங்களை
இல்லாதொழிக்க முயலுங்கள்..!

காற்றிலாடும் தீபங்களாகி
கண்ணீரிலும் செந்நீரிலும் மிதந்து
கண்மூடி மண்மூடிப் போனவர்களை
காலமெல்லாம் நினைவுகூர்ந்து
கண்ணீரில் உங்களின்
கறைகளையெல்லாம் கழுவுங்கள்..!

இனவாதம் களைந்து
இனம் மதம் மொழிகடந்து
இதயத்தின் சாளரங்களைத் திறந்து
உதயத்தின் கீற்றுக்களை வழியவிடுங்கள்
ஒளிரும் இலங்கை மணித்தீவு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மன் விங்ஸ் எயார்பஸ் ஏ 320

ஜேர்மனியின் லுவ்தான்சா வெனும்
பாரிய விமான நிறுவனத்தின்
கிளை நிறுவனமாய்
ஜேர்மன் விங்ஸ்..!

எயார் பஸ் ஏ 320
ஸ்பெயின் நாட்டின்
பார்சலோனா நகரிலிருந்து
இறக்கை விரிக்கின்றது..!

ஆகாயப் பறவையின் இலக்கு
ஜேர்மனியின் டுசில்டோவ் -
விமான நிலையம்..!
அசுர விமானியின் இலக்கு
மரணத்தின் அதள பாதாளம்..!

நடக்கவிருக்கும் அனர்த்தத்தை
அறியாத இயந்திரப் பறவை
உயர உயரப் பறக்கின்றது..!

அப்பறவைக்குள் புகலிடமாய்
நூற்றிஐம்பது பயணிகள்
அவர்களுள் ஜேர்மன் உயர்நிலைப்
பள்ளியின் மாணவர்கள் பதினாறொடு
ஆசிரியர்கள் இருவர்..!

அந்தப் பள்ளிச் சிட்டுக்கள்
உல்லாச நீரோடையில் நீச்சலடிக்க
பள்ளி விடுமுறையில்
பார்சலோனா பறந்திருந்தன..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கிளிகளுக்கு
அவ்வப்போது தாய் தந்தையரின்
நினைப்பு வாட்டத்தை யளித்தாலும்
கூடு திரும்பும் நாளதில்
கொஞ்சிடும் நினைப்பில் குதூகலம்..!

ஜோடிகளை அணைக்கும் திளைப்பில்
சில காதல் பறவைகள்..!
நேசவுறவுகளை நெருங்கும் நேரத்தை
நினைக்கும் பாசவுறவுகள்..!

விபரீதமொன்று
நிகழவிருப்பதை யறியாத
குறும்பான மாணவி
குறுஞ்செய்தி யனுப்புகின்றாள்
தோழிக்கு..!

சுற்றுலா நினைவுகளோ
எனக்குள் ஏராளம்..!
உலகைச் சுற்றிவரும்
ஆசையின்னும் தாராளம்..!

விமானத்திற்குள்
தலைமை விமானிக்கு
இயற்கை உபாதை
தவணை முறையில்
அமுக்க வெடிகளை யளிக்கின்றது..!

அவசர அவசரமாய்
உதவி விமானியிடம்
அத்தனை உயிர்களையும் கையளித்து
கழிவறை நோக்கிச் செல்கின்றான்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகவே காத்திருந்தது போல்
பிரதான விமானி உட்புகாதபடி
கதவுகளுக்குத் தாழ்ப்பாழிடுகின்றான்
உதவி விமானி..!

அந்த விமானிக்கு
சில ஆண்டுகளாய்
நரம்பு மண்டலத்தின் சிதைவு
மனவழுத்தத்தின் உச்சம்..!

பலரக மிருகங்கள்
மூளைக்குள் பாய்ச்சலிட
கடிவாளமறுத்த குதிரை
கால்களில் உதைக்க
முகமது இறுக
மனமது கொதிக்க
மரணத்தின் பொத்தானை
அழுத்துகின்றான்..!

விமானம் நிலை தடுமாறி
ஏவுகணை வேகத்தில்
தலைகீழாய்ப் பாய்கின்றது..!

விமானத்தின் அபாயவொலி
அடுத்தடுத்து ஒலிக்க
அவ்வொலியை விஞ்சியதாய்
பயணிகளின் அவலக்குரல்
ஆகாயப் பரப்பெங்கும்
எதிரொலிக்கத் தொடங்குகின்றது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தின் வினாடிகள்
கண்முன்னே விரிய, விரிய
குருதியது உறைந்து போக
உயிரொடுங்க உடல் நடுங்க
குருதிக் குழாய்களுக்குள்
பீதியாறு பெருக்கெடுக்கின்றது...!

ஒரு சில நிமிடங்களில்
உலகப் போரில் பாரிய
குண்டொன்று வெடித்ததுபோல்
ஆல்ப்ஸ் மலைத்தொடரில்
மோதப்பட்டு சுக்கல் சுக்கலாய்
சிதறுகின்றது வானூர்தி..!

உயிர்க் கூடுகள் சிதற
உதிரத்தின் துளிகள் தெறித்து
பனிமூடிக் கிடக்கும்
பெலோன் பள்ளத்தாக்கை நனைக்கின்றது..!

வான் தொட்டு மண்தொட
விரைந்த வானூர்தி
பள்ளத்தாக்கில் வீழ்த்தப்பட்டுவிட்டது..!

சிறகுகள் விரித்த விமானத்தோடு
சிறகுகள் விரிக்க காத்திருந்த
சின்னச் சின்னச் கிளிகளின்
சிறகுகள் ஒடிக்கப்பட்டு
சிதிலமாகின உடலங்கள்..!

அந்த நிமிடங்களில்
அலறிய ஜீவன்களின் அந்தரித்த
வினாடிகள் எண்ணுகையில்
இதய அறைகளில்
அழிக்க முடியாத சோகம்
நிரம்பி நிரம்பி வழிகின்றது..!

- 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளி மாணவி படுகொலை...

யாழ்ப்பாண நன்னகரின்
பொற்கிரீடமாய் திகழ்ந்திடும்
புங்கைநகருள் இரக்கமற்ற
புல்லர்கள் எப்படி நுழைந்தார்..?

வெள்ளை நிலவாய்
பள்ளி சென்று வந்த
பாரிஜாத மலர் பூஜைக்காக
கோயிலில் சென்றடையாமல்
கல்லறையில் வீசப்பட்டுவிட்டதே..!

சிறிது சிறிதாகச் சிதைக்கப்பட்டு
குரல்வளை திருகப்பட்டு
பற்றைக்குள் வீசியெறியப்பட்ட
இந்தச் சின்னக் குயில்
பாடிப்பறப்பதற்கு எண்ணியே
பள்ளிக்குச் செல்லக் காத்திருந்தது..!

இந்தப் பட்டாம் பூச்சி
எத்தனை கனவுகளைச் சுமந்ததோ..?
எத்தனை சாதனைகளை இந்த
பூமியில் நிகழ்த்த விருந்ததோ..?
அதற்குள் காமுகர்களின் கைகளுக்குள்
சிக்குண்டு சிறகுகள் பிய்க்கப்பட்டு
உயிர்த் துளியும் பருகப்பட்டுவிட்டது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையைப் பறைசாற்றும்
வெள்ளைநிறச் சிட்டுக் குருவியின்
தூய்மையைப் பறித்து பெற்றோருக்கு
துயரத்தை நிரந்தரமாய் அளித்தவர்கள்
தூக்குக் கயிற்றைத் தழுவிட வேண்டும்..!

துள்ளித் திரிந்த
பள்ளி மானுக்கு
கொள்ளி வைக்கத் துணிந்த
கொடியவர்களைச் சுமந்த
கருவறைகளின் களங்கத்தை எந்தக்
கங்கையும் துடைத்துவிட முடியாது..!

வழிவழி வந்த தமிழர்களின்
மாண்பையெல்லாம் குழிதோண்டிப்
புதைப்பவர்கள் இன்னும்
இந்தப் பூமியில் நடமாடியபடியே...
நடமாடும் இறைவன் தான்
நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும்..!

சின்னப் பறவையின் உடலத்தை
குண்டூசியால் குத்திக் குத்தி
குதறிய ஓநாய்கள்
மனித வடிவிலே நடமாடும்
இரத்தக் காட்டேறிகள்..!

- 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்பந்தன் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுதியாக "குருதி வரைந்த தடங்கள்" வெளிவருவது மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிவந்த சஞ்சிகைகள், பத்திரிகைகளில் இவரது கவிதைகள் அதிக அளவில் வெளிவந்துள்ளன.

பதினைந்து வயதினில் தாய் மாமனாரின் தூண்டுதலினால் இலங்கை வானொலியில் கவிதை பாடிய சம்பந்தன், 1984ஆம் ஆண்டு முதல் ஜேர்மன் நாட்டின் இராட்டிங்கன் நகரை வாழ் விடமாகக் கொண்டபோதிலும், தாய் மண்ணை மறவாத பற்று தல், தாய்மொழியில் இலக்கியம் படைக்கும் ஆவல், தாயகத் திலும் வாழ்வகத்திலும் சமகாலத்தில் தரிசித்த, தரிசிக்கும் வாழ்க் கைச் சவால்கள், இன்ப துன்பங்கள், அடிபட்ட மனதில் ஆழப்பதிந் துள்ள வடுக்கள், நாள்தோறும் மனத்தை விரட்டிக் கொண்டிருக்கும் தாய் நாட்டுக் கனவுகளும், ஏக்கங்களும் என்றவாறு பல்வேறு கருப் பொருள்களையும் உள்ளடக்கிக் கவிதைகளாகத் தந்துள்ளார்.

ஒருவரது ஆளுமையில் பாரம்பரியத்தின் பங்கு கணிசமானதல்லவா..? சம்பந்தனுத் வாடா இலக்கிய மலர்களின் வாரிசாக விளங்குகிறார. அவரது புதிய கவிதைத் தொகுதியிலுள்ள பல கவிதைகள் அதற்குச் சான்று பகர்கின்றன.

அறிவும் ஆற்றலும் சமூகப் பிரக்ஞையும் கொண்டுள்ள இக்கவிஞனின் படைப்புகளில் அநேகமானவை எளிமை, பொருண்மை, நடப்பிய லுண்மை, கலைத்துவம் முதலியன கொண்டு விளங்குகின்றன.

- கலாநிதி, பண்டிதர் செ . திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org